குறிகளின் விளக்கம்

உச்சரிப்புக் குறிகள்

க¹	—	‘க’டமை	என்பது	போல	Ka
க²	—	க்க	,,	,,	Kha
க³	—	‘க’ங்கை	,,	,,	Ga
க⁴	—	Gha	,,	,,	

இலக்கமிட்ட இடங்களில் மற்ற (ச, ட, த, ப) எழுத்துக்களையும் இதே போல் உச்சரிக்கவும்.

பதிப்புரை

நாத்திகம் மலிந்து வரும் இந்நாளில் கடவுட் கொள்கையை வலியுறுத்தும் மதங்கள் பல்லோராலும் பழித்தும் இழித்தும் பேசப்படுகின்றன. வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள் புராணங்கள் ஆயவை பயனற்றவை எனப் பறை சாற்றுவாரும் உண்டு. இத்தகைய அறியாமை இருள் கவிந்து வரும் இக்காலத்தில் மதத்தின் உண்மைத் தத்துவத்தையும், தெய்வ உண்மையையும் அங்கை நெல்லிக்கனி போல் விளக்கிக் காட்டும் பெருமை ஸ்ரீலஸ்ரீ சின்மயானந்த அடிகளையே சாரும். மதமெனும் மரத்தைப் பற்றிய புல்லுருவிகளைக் களைந்து ஞானக்கனியை மக்களனைவரும் உண்ணுமாறு அவர் தமது சொற்பொழிவுகளால் செய்வதனைக் கேட்டார் இன்புற்றுத்தெளிவு பெறுகின்றனர்; கேளார் வியக்கின்றனர். செல்வத்துள் செல்வமாய் செவிச்செல்வத்தை அள்ளி அள்ளி அடிகளார் மக்கள் மனங்கவர வழங்குகின்றார். "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதைச் சிந்தையிற் கொண்டு சேரவாரும் செகத்தீரே எனத் தம் கருணைப் பெருக்கால் அடிகள் கற்றாரையும் மற்றாரையும் அழைக்கின்றார். அடிகளின் பேருரைகள் உள்ளங்கவர்வன; உள்ளொளி பெருக்குவன; அஞ்ஞான இருளகற்றி மெய்ஞ் ஞானக்கண் அளிப்பன; அடிகளின் ஆங்கில நடை எளியது; இனியது; சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் சிறப்பு சின்மயானந்த அடிகளின் பேருரைகளில் காணலாம். எளிய உவமைகளால், இனிய மொழிகளால் அரிய பொருளையும் தெளிவாக அவர் விளக்கும் ஆற்றலை இன்றைய உலகம் பெரிதும் பாராட்டுகிறது. அத்தகைய அவரது ஞானச்செல்வப் பேருரைகள் ஆங்கிலத்திலேயே வெளி

வந்திருக்கின்றன. "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" எனும் தென்னாட்டுத் தமிழரில் ஆங்கிலம் அறியாதாரும் அவரது அமுத ஞானத் தீம்பாலைப் பருக ஆவல் கொண்டனர். அவர் தம் ஆர்வம் காரணமாய் வெளி வருவது இம் மொழிபெயர்ப்பு நூல். இதனைச் சின்மயா னந்த மிஷன் தொண்டர்கள், அடிகளார் ஆணைப்படி செய்ய முன்வந்துள்ளார்கள். ஆங்கில மூலத்தை அடிப் படையாகக் கொண்ட இம் மொழிபெயர்ப்பில் அடிகளின் அரிய "இந்துமதம்" என்பதும் 'ஈசாவாசியோபநிஷத்து' எனும் சீரிய நூலும் காணலாம். இந்நூல் தமிழருக்கு அரியதோர் விருந்து; நாத்திகர்க்கு நல்லதோர் மருந்து. இத்தகைய நூல்கள் இன்னும் பல வெளிவர மக்கள் ஆதரவு காட்டுமாறு வேண்டுகிறோம். இந்நூல் உல கெலாம் பரவுதல் வாழ்வின் பயனை அளிக்கும்; எனவே இதைக் கண்ணுறுவார் தம் நூல் நிலையத்தில் வைத்துப் பேண ஓர் பிரதியும் ஆர்வமுள்ள அன்பர்களுக்குப் படிக்கக் கொடுத்துதவ மற்றோர் பிரதியும் வாங்குதல் பாராட்டத்தக்கது. "அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த" ஆண்டவன் இப்பணிக்குத் திருவருள் பாலிப்பாராக.

இங்ஙனம்


சின்மயா மிஷன்,

தொண்டர்கள்.

நம் சமயம்

முன்னுரை

Y



நமது உபந்நியாசத்தின் உட்பொருள்

உண்மை மதம் ஒருபொழுதும் அழிவதில்லை; ஹிந்து மதம் இறந்துவிடவில்லை.

நாம் செல்லும் வழியில், இலை, பூ, காய் கனிகளற்று பரந்து விரிந்த கிளைகளுடன் உலர்ந்து கிடக்கும் ஒரு மரத்தைக் காண்போமானால், நமது அவசரப்போக்கில், நாம் அது ஒரு காலத்தில் நல்ல பலனைக்கொடுத்து சிறந்து விளங்கி தற்போது வற்றியபடி உபயோகமற்று பட்டுக் கிடப்பதாக எண்ணுவோம். அம்மரம் இப்போது தன்னை அணுகும் ஓரிரு வழிபோக்கர்களுக்கு ஒரு சிறு அளவு தன் சாயலைத் தந்தாலும், பலருக்கும் பயன்படுமாறு தன் நிழலைப் பரப்புவதில்லை. ஆயினும், மரஞ் செடி கொடிகளை வைத்துப் பாதுகாக்கும் பண்புள்ள ஒருவன்—நிபுணன் அம்மரத்தை கண்ணுறுகின்றான். அவன் அதன் அருகில் சென்று, நுணுகி ஆய்ந்து, பட்டுப்போன அம்மரத்தில் செழித்து வளர்ந்துள்ள ஒருவிதப் புல்லுருவியைப் பார்க்கின்றான்.

இந்தக் காட்சியிலிருந்து அம்மரம் மீண்டும் செழித்து வளரத்தக்க சத்து—சாரம் அம்மரத்தினுள் இருப்பதை அந்த நிபுணன் உணர்ந்து கொள்கிறான். உயிரளிக்கும் சத்து மரத்திலிருக்கிறதென்பதையறிய அவன் அம் மரத்தை வெட்டவேண்டியதில்லை.

அதுபோலவே, நமது மதம், இன்று மக்கள் சமுதாயம முழுவதையும தன் அணைப்பில் கொண்டு ஆதரிக்கத் தகுந்த சிறப்பையிழந்து இதன் தோற்றம் ஒரு கல்லறையில் காணும எலும்புக் கூட்டத்தின் தோற்றத்தையே அளிக்கிறது. ஹிந்து மதம் என்னும் இம்மகத்தான மரத்திற்குத் தன்னை வளம்படுத்திக்கொள்ளத்தகுந்த உரம், உணவு இல்லாமல் கஷ்டப்படும்போது மதத்தைச் சீர்படுத்தி ஒழுங்கை நிலைக்கச் செய்யும் உண்மை உழைப்பாளி தனனுள்ளம் உருகி "இது இறக்கவில்லை இதில் இன்னும் ஜீவன் இருக்கிறது! இதை மீண்டும் செழிக்கச் செய்யலாம" என்று ஆர்வத்துடன் செப்புகின்றான்.

பட்டுப்போன மரம செழிக்கக் குடியானவன், அம்மரத்தில் காணும் புல்லுருவிகளைக் களைந்து, அவசியமில்லாது பரந்துள்ள கிளைகளையும அறிவுடன வெட்டி வீழத்தி அம்மரத்தின் பளுவைக் குறைக்கின்றான்; மரத்தின் வேர்ப்புறங்களில் நிலத்தைக் கொத்திக் கிளறி, கிரமமாகப் புது எருவிட்டு வளர்க்கின்றான. இதைப் போலவே, நமது மதமாகிய விருக்ஷத்தையும நாம உயிர்ப்பிக்கலாம. உண்மை ஊக்கமாகிய நீர் வார்த்து, உணர்ச்சி என்னும் உப்பிட்டு, வளம பெற புத்துயிர் அளிக்கலாம.

நான "மதம" என்று சொல்லும்போது ஹிந்து மதத்தை மட்டும குறிப்பிடவில்லை. உண்மையான ஹிந்து மதத்தைப் போலவே, இன்று உலகத்திலுள்ள எல்லா மதங்களையும் குறிப்பிடுவதாகும். மதம என்ற சொல்லைக் கேட்டவுடன நாம, ஆலயங்கள், மசூதிகள், மாதாகோயில்கள், யூதர் கோயில்கள், குருத்துவாரங்கள் இவற்றுடன் மதத்தை இணைத்துப் பார்க்கின்றோம். இத்துடன் அங்கிருக்கும பலவித உயரிய நூல்களும, அவற்றிற்கு முடிவில்லாத பலதர உரைகளும, மயக்கத்திற்குரிய பல சடங்குகளும அவற்றின போரால் மனிதருக்கிடையே

நிகழும் பிணக்குகளும், பூசல்களும் ஆய்வறிவில்லா பாமர மக்கட் கூட்டங்களில் பெருகி வருவதையும் சேர்த்துக் கொள்கிறோம். இவ்வாறு பெருகி வரும் கூட்டத்தினர் "மதம்" இன்னதென அறியாதவர்களாவர். உண்மையான மதம் இன்னதென அறியாததன் விளைவேதான் தற்கொலைக்கு நிகரான அறிவீனம் மக்களிடையே பரவுவதன் காரணம்.

ஆனால் இன்று முதல் நாம் தொடரப்போகும் விசாரணையில் மதம், வியாக்கியானம், பூசல்கள் இவற்றால் நிறைந்த மதத்தைப் பற்றிப் பேசப்போவதில்லை. மதம் எவ்வாறு வாழ்க்கையை நடத்தும் கலையாகிறதென்பதைப் பற்றித் தெரிந்துகொண்டு வாழ்க்கையை எவ்விதம் அமைத்துக்கொள்வதென்பதை ஆராய்வதே நமது நோக்கம்.

இப்போது நாம் பின்பற்றி வரும் "மதம்" மிகவும் பழமையாகிவிட்ட காரணத்தால் அதன அடிப்படைத் தத்துவங்களுக்கு நமது வாழ்க்கையின் சிக்கல்களை தீர்க்கும் சக்தியற்றுப்போயிருக்குமானால் நாம் ஒரு சிறிதும் வருந்தாமல் அவற்றை அப்படியே தள்ளிவிட்டு நமக்குத் தேவையான புதிய கருத்துக்களையும் கொள்கைகளையும், நேர்மையான சட்டதிட்டங்களையும் நாமே முயன்று வகுத்துக்கொள்ளலாம்.

மதம் நமது இன்றைய வாழ்க்கைக்கு சம்பந்தமில்லாமலும் நம நல்வாழ்வின் துறைகளைச் செப்பஞ் செய்யத் தகுதியற்ற உத்திரவுகளைக்கொண்டு மட்டுமே நிறைந்துள்ளதானால் அத்தகைய பழைய மத சம்பிரதாயத்தை ஒழித்துவிட்டு ஒரு புதிய நாகரிகமான பண்பாட்டை விரும்பத்தகுந்தவாறு அமைத்துக்கொள்ளலாம். ஏனெனில், மனிதன் தன்னுடைய இன்றைய இகலோக வாழ்க்கையைப் பற்றித்தான் முக்கியமாகக் கவனிக்கவேண்டுமேயன்றி பரலோக வாழ்க்கையைப் பற்றியல்ல.

கால வாழ்க்கைக்கும் நமக்கு வேதாந்தம் துணைபுரியுமா வென்பதை நாம் ஆராய்வோம்.

“வேதாந்தம்” என்ற சொல்லைக் கேட்டவுடனே பல விமர்சகர்கள், சங்கரரையும் பிற உரையாசிரியர்களையும் மனத்திற்கொண்டு, சிக்கலான வாதங்களுக்கும் வெறிமிக்க வழக்குகளுக்கும் கச்சை கட்டுகிறார்கள். இந்த யக்ஞசாலையில் நாம் எந்த ஒரு பிரிவினரைப் பாராட்டவோ அன்றி எந்த ஒரு கருத்தையும் வெறுக்கவோ செய்யமாட்டோம் என எல்லோருக்கும் உறுதி கூறுகிறோம். தூய ஆராய்ச்சி உள்ள உணர்வோடு பல விமர்சகர்களின் பலதர கருத்து பாவங்களை அறிய முற்படுவோம்; அவற்றின் மூலம் வேதாந்தத்தின் சரியான அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முயல்வோம்.

வேதாந்தத்தின் கருத்துக்கள், ஒரு சில விசித்திரப் பிறவிகளின் அவலக்குரல்கள், விம்மல்கள் என்ற முடிவிற்கே இக்கால நவீனக்கல்வி பெற்ற இளைஞர்கள் வந்து விடுகின்றனர். ஒரு காலத்தில் நானும் இந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தேன். தாமே ஏற்றுக் கொண்ட துன்பங்களும், தன் முனைப்பு அறக் காட்டில் வாழ்ந்த நாளில் ஏற்பட்ட இயற்கைக்குப் பொருந்தாத தனிமை வாழ்க்கையினாலும் வேதாந்தத்தின் கருத்துக்களை இயற்றியவர்களின் மூளை கலங்கிப்போய்விட்டதென்றெல்லாம் கருதப்பட்டு வருகிறது. ஆனால் நாம் வேதாந்த தத்துவங்களை இன்னும் சற்று நெருங்கி ஆராய்வோமானால் நமது காலத்தில் சில துறைகளைச் சேர்ந்த மேதாவிகளில் நாம் காணும் விசித்திர நடைகள் தான் வேதாந்தக் கருத்துக்களை இயற்றிய ரிஷிகளிடமுமிருந்ததென்பது புலனாகிறது. ஒரு விஞ்ஞானியையோ, ஒரு கவிஞனையோ, ஓவியக்கலைஞனையோ அல்லது ஒரு சங்கீத வித்துவானையோ கவனித்துப் பாருங்கள். தன் துறையில் அவன் ஒரு மேதாவியாக இருந்தால் அவன்

தன்னை முழுவதும் அந்த வேலைக்கே அர்ப்பணித்துவிடுவான். இப்படி தங்கள் துறையில் தங்களை முழுவதும் அர்ப்பணித்துக்கொண்டவர்கள் பொதுவாக நாம் இன்று ஒப்புக்கொண்டுள்ள பாரம்பரை—வழக்கமான வாழ்க்கையையோ அன்றி நடத்தையையோ ஒட்டிவாழமாட்டார்கள். அவர்கள் எடுத்துக்கொண்ட காரியத்தில் மிக்க கண்ணுங் கருத்துமாய் இருப்பதால் இதற்குப் புறம்பான விஷயங்களில் சிரத்தையை சற்றும் செலுத்தமாட்டார்கள். எதையும் கேட்கவுமாட்டார்கள். இதுமட்டுமல்ல, மனித வாழ்க்கைக்கு அடிப்படையான உரிமைகளைக்கூட மறந்துவிடுவார்கள். ஓவியக்காரர்களின் விசித்திரப்போக்கு, பேராசிரியர்களின் மறதி, மனப்பான்மை சிந்தனையாளர்களின் சுயநல மனப்பான்மை முதலியவை நாம் சகஜமாகக் காணும் நிகழ்ச்சிகளாகும். அதனால் வேதாந்தக் கருத்துக்களை இயற்றிய ரிஷிகள் வேலையைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் வேலையில் அர்ப்பணித்துக் கொண்ட விஞ்ஞானிகளாக கருதும்போது, அவர்களின் தனிமையும், பற்றின்மையும், அவர்கள் ஈடுபட்டுள்ள காரியத்திற்கு இன்றியமையாதவென்பது புலனாகும்.

ஒரு ரிஷி தன்னுடைய பூரண பற்றின்மையுடன் வாழ்க்கையை மேற்கொண்டு, அதனை அலசி ஆராய்ந்து குறிப்பிட்ட சில முடிவுகளுக்கு வருகிறார். அந்த முடிவுகளைத் தன்னுடைய மாணாக்கர்களுக்கு அப்படியே போதிக்கின்றார். அந்த மாணாக்கர்கள், புத்தியாகிய கருவியின் மூலம் தனித்த முறையில் ஆய்ந்து வாழ்க்கையைப் பூரணமாக மதிப்பதற்கும் பலவித சந்தர்ப்பங்களில் தனிமனிதர்களின் நடவடிக்கைகளை ஆராய்வதற்கும் பயிற்சி பெற்றவர்கள்.

எல்லோரும், இவ்வித ஆய்வு சோதனைகளின்மூலம் தவிர்க்க முடியாத ஒரு விஷயம் வாழ்வில் பொதிந்திருப்பதைக் கண்டார்கள்; அதுவே, அனுபவம் இன்றி மனித

னுக்கு நித்யவாழ்வு சாத்தியமில்லை என்பதாகும். மனிதனின் வாழ்வு அனுபவங்களின் தொடர்ச்சியாயிருக்கின்றது. ஒருவனுக்கு தன்னுள்ளும் புறமும் உள்ள அனுபவங்களை உணர்ந்துகொள்ள சக்தி மறைந்த க்ஷணமே அவனுக்கு இறப்பு ஏற்பட்டு அதன் பிறகு அவன் வடிவமும் உடற்கூறுகளும் கெட்டழிந்து, எந்தப் பொருள்களால் அவன் ஆக்கப்பட்டானோ அந்தப் பொருள்களாகவே அவன் மாறிவிடுகிறான்.

மனிதன் ஒவ்வொரு அனுபவத்திலும் பூரணத்தைப் பெற ஆவலுறுகின்றான்; அவன் அமைதியையும் ஆனந்தத்தையும் விரும்புகின்றான். முழு இன்பமும் முடிவற்ற அமைதியுமே மனிதனைத் திருப்தி செய்கின்றது. இவ்வாறு மேலும் அதிகப்படியான முழு இன்பத்தைத் தரும் அனுபவத்தைக் கருதியே புதிய சந்தர்ப்பங்களைத் தேடிக் கொண்டு ஒரு சூழ்நிலையினின்று மற்றொரு சூழ்நிலைக்குச் செல்கிறான். இவ்விதம் அவன் செல்வதற்குக் காரணம் முழுமையானதும் ஆழமானதுமாகிய உயர்ந்த இன்பத்தை அடைவதற்கு அவனுக்குள்ள ஆசைதான்.

நாம் பெறும் அனுபவம் எம்மாதிரி இருந்தாலும் அந்த அனுபவத்தை, நாம் அனுபவங்கள் நிறையப் பெற்ற உலகில் கலக்கும்போதே அடைய முடியும் என்பது உண்மை. உலக விஷயங்களை எவ்வளவு தெளிவாக அறிகின்றோமோ அவ்வளவுக்குச் சரியாக நாம் அவற்றுடன் தொடர்பு கொள்வதற்கும் அறிவோம். மேலும், அவ்விதம் சரியான தெளிவுடன் நாம் உலகத்தை அணுகினால், அது கட்டாயமாக நமக்குப் பூரண திருப்தியைக் கொடுத்து சந்தேக விபரீத மயக்கங்களுக்கு இடமில்லாமல் செய்யும். வேதாந்தம் சொல்வது என்னவென்றால் நம் அவசரப் போக்கில் உலகத்தைப்பற்றியும் உலகப் பொருள்களைப் பற்றியும் இப்படி அப்படியென்று தவறான முடிவுக்கு வந்து அந்தத் தவறான முடிவுகளிலிருந்து உலகத்தைப்

பற்றியும் தவறுதலாகவே மதிக்கின்றோம். மேலும் பொருட்களைப்பற்றி தவறான முடிவுகளை மேற்கொள்வதால் நம்முடைய அனுபவங்கள் குறைபாடுகளுற்று அதன் பயனும் கஷ்டமும் படுகின்றோம். இவ்விதம் நமமைப் பல துன்பங்களுக்கு உட்படுத்தும் உலகத்தைப் பற்றியுள்ள தவறான வியாக்யானத்தை மகரிஷிகள் உபநிஷத்துக்கள் வாயிலாக மிக வன்மையாகக் கண்டித்து மனிதன் உலகப்பொருட்களை மீண்டும் புனராலோசித்து மதிப்பிடுமாறு மிக உருக்கத்துடன் வேண்டுகின்றனர்.

இந்தக் கருத்துடன் வேதாந்தம் கோஷிப்பதாவது: இந்த உலகம் அநித்யம்; உண்மையே (பிரம்மம்)மே நித்யம் என்பதாம். ஆகையால் வேதாந்தத்தைச் சரியாகப் புரிந்துகொண்டால் வேதாந்தம், நம்மை உலகத்தைப் பற்றிய ஸ்திரமான புது வியாக்யானம் ஒன்றைச் செய்துகொள்ளுமாறு ஆக்ஞாபிக்கிறதென்றும் தெரிந்துகொள்ளலாம். மேலும் சமூக அநியாயங்கள், வறுமை, அடிமைத்தனம் முதலியவை மூலம் மனிதனுக்கு நேரிடும் துன்பங்களை அசட்டை செய்யுமாறு வேதாந்தம் போதிக்கின்றது என்று அவதூறு அறிவீனர்களின் கூற்று என்றும் புலனாகிறது. இந்த அவதூறை ஆதரிப்போர் அறிவீனர்களும் ஏமாளிகளுமே. எவ்வாறு ஒவ்வொரு தனிமனிதனும் இந்தப் புதிய வியாக்கியானத்தைச் செய்துகொள்ள முயற்சிக்க முடியுமென்பதையும் இந்த வியாக்கியனத்திற்கு எதை அடிப்படையாகக் கொள்வதென்பதையும் படிப்படியாக நாம் இங்கு ஆராய்வோம்: நாம் தொடங்கப்போகும் இந்த விஷயங்களின் உட்பொருளின் கருத்தை உங்களுக்குத் தெரிவிப்பதே இன்று என் கடமையாகிறது. எந்த மதமும் ஒரு தனி மனிதனுடையவோ அல்லது ஒரு ஸ்தாபனத்தினுடையவோ சொந்த சொத்து அல்ல. சரிவர புரிந்துகொள்ளும்போது, மதம் ஒரு சில அபூர்வ சக்தி படைத்த விசித்திர மனிதர்களின், விளக்கப்படாத

அறிக்கைகளோ அல்லது இரகசியச் சடங்குகளின் மூட்டைகளோ குகைகளில் நடக்கும் சூழ்ச்சிகளோ அல்லாமல் சமூக மக்களுக்கு அமைதியும, பூரணமான வாழ்வளிக்கும் ஒரு முறையென்பது புலனாகும்.

விஞ்ஞான மத போதகர்கள் விஞ்ஞானத்தைத் தெரிந்து அதை அன்புடன் வரவேற்க மறுத்த ஒரு காலம் இருந்தது. அவர்களின் இச்செய்கையால் தான் மதத்திற்கு சவக்குழி தோண்டப்பட்டது. இன்று இதே தவறை நம எதிரிகள் திருப்பிச் செய்வதை நாம் பார்க்கின்றோம்; விஞ்ஞானம மதத்தை பகிரங்கமாகப் புறக்கணித்துவிட்டது; அதனால் உச்சநிலையை யடைந்திருக்கும் லௌகீகப்பற்று தானாக விளைவித்துக் கொண்ட துன்பசாகரத்திலேயே ஆழ்ந்து கிடக்கிறது.

வாழ்க்கையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த இவ்விரண்டு அம்சங்களால் சமூகம் மகிழ்ச்சியடைய வேண்டுமானால், மனிதனுக்குத் தன் நித்திய வாழ்க்கையில் இவ்விரண்டு அம்சங்களும் பயன்படவேண்டுமானால் மதமும் விஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமலும் விரோத பாவத்துடனும் தனித்தனியாக நிற்கக்கூடாது. விஞ்ஞான விதிகளும் அதன் அணுகுதலும் மதத்திற்கு புத்துயிர் அளிக்கவேண்டும் பொருள், உற்பத்தித்துறையில் நிகழ்ந்துள்ள ஆற்றல், விநியோகத்தில் நிகழ்ந்துள்ள திறமை, கூட்டுறவு முறைகளின் பலன், அழிக்கும் அபூர்வ சக்தி இயற்கையினமீது அடைந்துள்ளவெற்றி முதலியவற்றால்மட்டும் வாழ்க்கையின் தேவையைப் பூர்த்தி செய்து சமூகத்திற்கு அதிகப்படியான மகிழ்ச்சியையளிக்க முடியாது. வாழ்க்கையின் கண்ணியத்தை உயர்த்துவதற்குள்ள மனிதர்களின் மதபோதனைகளை அனுஷ்டிப்பதனாலும் சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு தனிநபரும் நேர்மையான வாழ்விற்குரிய முறைகளைக் கையாள வேண்டுமென்று வற்

புறத்தினால் மட்டுமேதான் சமூகத்திற்கு மகிழ்ச்சி ஏற்படமுடியும்.

ஒரு சமூகம் அல்லது குறிப்பிட்ட ஒரு மக்கட் பிரிவு அதன் அங்கத்தினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறதென்றும், அந்தப் பிரிவின் சக்தி அல்லது அதனுடைய இன்பம், பொருட்கள்பால் பெறும் பயனாலோ அல்லது சந்தர்ப்பங்கள் மூலம் ஏற்படும் அனுகூலங்களினாலோ அமையாமல் தனி மனிதர்களின் வாழ்க்கை நேர்மையினாலும் மனப்பான்மையினாலும், அமைகிற தென்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. நாம் சிறப ஞானமுள்ளவர்களுக்கு உலகத்திலுள்ள மகோன்னதமாகிய ஒரு மாளிகைக்குள்ள அமைப்புத் திட்டத்தை முன்கூட்டியே ஒரு நீலத்தாளில் அச்சிட்டு விளக்கிக் காட்டமுடியும். ஆயினும் அந்த மாளிகையைக் கட்டுவதற்காக உபயோகிக்கும் செங்கற்கள் மிக உறுதியானவையாயில்லாவிடில் அதனுள்ளிருக்கும் பலருக்கும் வேண்டிய இடமும் வசதியும் கொடுக்கும் அந்த அழகான கட்டிடம் வெகு விரைவில் அழிந்து விடுமென்பதை நாம் அறிவோம். இதுபோல, இன்றைய பொதுமைக் கொள்கைகளும், உலகப் பொருட்களின் விஞ்ஞான அறிவு நுணுக்கங்களும், சொல்லளவில் எழுதிக்காட்டும் போதும் சிறந்தனவாகவே தோன்றுகின்றன. ஆனால், செயலளவிற்கு அவற்றைக் கொண்டுவரும்போது அவை நமது இன்பத்துக்குச் சவக்குழியாக மாறிவிடுகிறது. இதுவே, உலோகாயத நாகரிகம் நமக்குத் திருப்பித் திருப்பி அளித்துக் கொண்டிருக்கும் அனுபவம் ஆகும். இதைச் சரித்திரம் குறித்து வைத்திருக்கின்றது; நமது ஜீவியகால அனுபவமும் அதை சரியென ஒப்புக்கொள்கின்றது.

இக் கேடுகளுக்கு விமோசனம் பொதுமைக்கும் புனிதத்திற்கும் நடைபெறும மகிழ்ச்சிகரமான ஒரு மணத்தால்தான் அளிக்கமுடியும். இக்கால போலி முன்னேற்

றம், தவருகக் கொள்ளப்படும் விஞ்ஞானம் இவற்ருல் நிறைந்த புது உலகிலுள்ள சூழ்நிலைகளைப் புறக்கணிக்காமலே நமது உபநிடத விசாரணையைச் செய்வோம்.

நமது துன்பங்களின் இரகசியம்

நாம் இதுவரை செய்துவந்த ஆராய்ச்சியில் மதமானது அழிவைத் தருகின்ற ஒரு மூடநம்பிக்கையல்லவென்பதும் அது மனித சமூகத்திற்கு நன்மைகளை வாரிக் கொடுக்கும் ஒரு விஞ்ஞானமாய் இருக்கின்றதென்பதும் விளங்கும். மதம் என்பது வாழ்க்கையை எவ்வாறு நடத்துவதென்று போதிக்கும் விஞ்ஞானமாகும். பெரிய தீர்க்கதரிசிகள், அறிஞர்கள், ரிஷிகள் இவர்களெல்லோரும், உலகில் அனுஷ்டிக்கப்படும் வாழ்க்கையின் விளக்கங்களின் மீது தொடர்ந்து சோதனை செய்து வரும் வாழ்க்கை விஞ்ஞானிகளாக விளங்கினர். தாங்கள் அனுஷ்டித்து அறிந்தவற்றைக் குறித்து வைத்தும், பொருட்களை உணர்ந்து பாகுபாடு செய்தும் வந்த இவ்விளக்கங்களைக் கொண்டு அவர்கள் வாழ்க்கையில் பூரண உண்மை அல்லது அடிப்படைத் தத்துவத்தைக் காண விழைந்தனர்.

இந்த முறையில் இன்றைய விஞ்ஞானிகள்கூட எந்தத் துறையில் வேலைசெய்து கொண்டிருந்தாலும் எந்தெந்த முறைகளைக் கையாண்டிருந்தாலும் எந்தெந்த லக்ஷியங்களை பின்பற்றிக்கொண்டிருந்தாலும் அவர்களெல்லாம் இயற்கையின் ரகசியங்களை ஆராய்வதில் ஈடுபட்டவர்களாதலால் தத்துவ ஞானிகளாகவே கருதவேண்டும். அவர்களுடைய ஆராய்ச்சிகளெல்லாம் பொருட்களில்

ஆழ்ந்துள்ள அடிப்படைத் தத்துவத்தை அறிவதற்குள்ள ஆர்வத்தின் அறிகுறிகளே.

உதாரணமாக ஒரு விஞ்ஞானி, எந்த அடிப்படையான பொருளிலிருந்து, மற்றெல்லா இரசாயனப் பொருட்களையும் சிருஷ்டிக்கப்படுகின்றன என்பதைக் கண்டுபிடித்துவிட்டால், அத்துடன் ரசாயன சாஸ்திரமே முடிவடைந்துவிடுமல்லவா? ஏனென்றால், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்த அடிப்படை பொருள் தானகவோ அல்லது வேறு பொருள்களுடன் கலக்கும்போதோ எத்தகைய மாறுபாடுகளுக்குக் காரணமாகிறதென்பது மட்டுமாகவே மாறிவிடும். ரஸாயன சாஸ்திரமும், பௌதீகமும் இப்படித்தான். எப்பொழுதாவது ஒரு பௌதிக சாஸதிரி உலகத்திலுள்ள சக்தி யாவையும் எரித்த சக்தியிலிருந்து பெறலாமென்பதைக் கண்டுபிடித்துவிட்டால் அதன் பிறகு, அந்த பௌதிக சோதனைகளைச், செய்ய ஒரு பௌதிக சாஸ்திர சோதனை சாலையிலுள்ள சேவகனுல்கூட முடியும்.

துரதிருஷ்டவசமாக நவீன விஞ்ஞானிகள் அடிப்படைப் பொருள்களைக் கண்டுபிடிப்பதிலேயே தங்கள் ஊக்கமிருப்பதாகச் சொல்வதில்லை. சில உண்மையான விஞ்ஞானிகள் 'தெரியாததைத் தேடுவதே' தங்கள் ஆவலென அறிந்தாலும், சாமான்ய விஞ்ஞானிகளும், விஞ்ஞான காலப் பெருமையைப் புலப்படுத்தக் கூடியவர்களும், தங்கள் முயற்சிக்கு மூலம இன்னதென்று தெரிந்துகொள்வதில்லை. எளிதில் ஒத்துப் போக முடியாமலிருப்பதற்கும் ரிஷிகள், தீர்க்க தரிசிகள் முதலியோர் வாழ்க்கையை ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகளென்று தெரிந்துகொள்ள முடியாமலிருப்பதற்கும் காரணம் இதுதான். விஞ்ஞானி, முடிவான உண்மையைத் தேடுவதற்கு பொருளகளால் நிறைந்த இவ்வெளி உலகத்தை கருவியாக உபயோகிக்

கிறன். மதத் தலைவர்களோ எல்லாவற்றிற்கும் அடிப் படையான அதே உண்மையைத் தேடுவதற்குத் தம்முள் நிகழும் நிகழ்ச்சிகளையே கருவிகளாக உபயோகிக்கின்றனர். இவ்விரு தரத்தார்களிடையே உள்ள வித்தியாசம் என்ன வென்றால் அவர்கள் உழைக்கும் துறைகள் வெவ்வேறு என்பது மட்டும்தான்—அதாவது ஒரு பிராணிநூல் நிபுண ருக்கும் அணு சாஸ்திர நிபுணருக்குமுள்ள வித்தியாசம் போலத்தான்.

மாறுதல்களுடைய இவ்வுலகில் முடிவற்ற வேற் றுமைகளைக் கொண்ட எத்தனையோ பொருட்கள் மனி தனின் உணரும் சக்திக்கு இடையூறுகளா யிருக்கின்றன. குகைவாசம் கொண்ட மனிதனின் காலம் முதற்கொண்டு இந்நாள் வரைக்கும் நாம் இயற்கையை நயமாக அணுகி அதன் இரகசியம் நமக்குப் பயன்படும் வண்ணம் பகிரங்க மாக்குவதற்கே மிகவும் கஷ்டப்பட்டு முயன்று வந்திருக் கிறோம். பொருட்களை அலசி அலசி ஆய்ந்து பார்ப்பதன் மூலமும், அவற்றின் எதிர்த் தாக்குதல்களை கவனிப்பதன் மூலமும், வேறுபாடுகளை உணர்ந்துகொள்வதிலுள்ள முயற்சி வளர்ந்து முடிவில்லாத அவ்வேறுபாடுகளை குறித்த தலைப்புகளுக்குள் அடக்கப்பட்டன. இந்த வித மாகவே இவ்வுலகில் வாழ்ந்த விஞ்ஞானிகள் உலகப் பொருட்கள் முழுவதையும் 98 அம்சங்(தத்துவங்கள்)களா கப் பிரித்துவிட்டார்கள். அதைக் கண்டுபிடித்ததற்காக உலகம் அவர்களைப் பாராட்டியது.

ஆனால், அதற்கு அடுத்த தலைமுறையிலிருந்த மக்கள், இயற்கைப் பொருட்களை இத்தனை பிரிவுகளாகக் குறைத் ததை மனப்பூர்வமாக ஏற்கவில்லை. அதனால், அவர்கள் எல்லா அம்சங்களையும் சேர்த்து இணைக்கக்கூடிய ஒரு அடிப் படைத் தத்துவப் பொருளைக் காண மேலும் நுட்பமாய் ஆராய்ந்தார்கள். அதன் பயனாகவே பத்தொன்பதாவது நூற்றாண்டில் மேனாட்டு விஞ்ஞானிகள் எல்லா இயற்கை

அம்சங்களிலும் மிகவும் சிறியதான அணுவை (தத்துவத்தை) கண்டுபிடித்ததைப் பார்க்கின்றோம். அணுக்களின் சேர்க்கையே இயற்கையின் அம்சங்களாக இருக்கின்றன. அந்த அணுக்கள் மிக நுட்பமான துகள்களைக் கொண்டவையாக இருக்கின்றன. அந்த நுட்பத் துகள்களின் ஏற்பாடகவே அவசியமான எல்லாப் பகுதிகளும் இருக்கின்றன. நிற்க தன் காலத்து மக்களின் குதூகல மகிழ்ச்சிகளிடையே அந்த ஆவேச பத்தொன்பதாம் நூற்றாண்டு இறந்தொழிந்தது. அந்த நூற்றாண்டின் இடத்தை இருபதாம் நூற்றாண்டின் மக்கள் பெற்றோர்கள் இப்புதிய தலைமுறையினர் தம் ஆராய்ச்சியை நிறுத்தாமல் சிக்கலான விஷயங்களைத் திருப்திகரமாயும் வெற்றிகரமாயும் அதனதன் இரகசியங்களை வெளியிடும்வரை துருவித் துருவி தொடர்ந்து ஆராய்ந்தனர். எல்லா இயற்கை அம்சங்களிலும் ஒவ்வொரு அணுவும் ஒரே தன்மையதான எலக்ட்ரான், ப்ரோட்ரான், நியூட்ரான் என்பவைகளால் அமையப்பெற்றுள்ளதைக் கண்டுபிடித்தனர். இவ்விதமாக, அந்த தொண்ணூற்றெட்டு இயற்கை அம்சங்களும் ஒவ்வொரு அணுவிலும் காணப்படும் மூன்று அடிப்படை சத்துப் பொருள்களாகக் குறையப்பட்டுவிட்டன.

திரும்பி வேதகாலத்தை நோக்கும்போது, இவ்விதமாகவே, வாழ்க்கைக்கான விஞ்ஞான நோக்குடன் அடிப்படை தத்துவங்களை ஆராய்ந்த ஆசிரியர்களின் வாழ்க்கையானது தொடர்ச்சியுள்ள அனுபவங்களாய் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். இப்படி கண்டுபிடித்ததிலேயே அவர்கள் முழுதும் திருப்தி அடைந்தவர்களாகி தங்கள் ஆராய்ச்சியை நிறுத்திக் கொள்ளவில்லை. கிடைத்த அனுபவங்களுடன் உயிர்களில் காணும் மனோவிர்த்திகளையும், தங்கள் மனம் என்னும் சோதனைக்களத்திலிட்டு, ஜீவியத்தின் சாரமாகிய அனுபவம் பெற தொடர்ந்து ஆய்ந்தார்கள். அதன் பயனாக அவர்கள் ஒவ்வொரு அனுபவப்

பொருளிலும் ஒரு அறிவு அல்லது விவேகம் ஒளிர்வதைக் கண்டார்கள்.

ஒரு அனுபவம் மூன்று அடிப்படைத் தத்துவங்களைக் கொண்டுள்ளதென்னும் உண்மையை முடிவாகக் கண்டு பிடித்து அறிவிக்கு முன், வெகு நுணுக்கப் பார்வையுடன் பொறுமையாய் ஒவ்வொரு பொருளையும் அலசி ஆய்ந்து அவற்றைக் குறித்து வைக்க அவர்களுக்கு அநேக நூற்றுண்டுகள் ஆயின. அவை:—(1) அனுபவிக்கிறவன் (2) அனுபவிக்கப்படும் பொருள் (3) அனுபவிக்கிறவனுக்கும் அனுபவிக்கப்படும் பொருளுக்கும் உள்ள தொடர்பு அல்லது அனுபவம் என்பனவாம். ஒரு அணுவில் இருக்கவேண்டிய மூன்று பொருள்களில் ஒன்று குறைந்தாலும் அது அணுவாக இருக்கமுடியாததுபோல் மேலே குறித்த மூன்றில் ஏதேனும் ஒன்று இல்லாமற் போனல் அந்த அனுபவம் சரியென ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை.

அனுபவிக்கிறவன, அனுபவிக்கப்படும் பொருள் அனுபவத்திற்கான தொடர்பு ஆகிய இம்மூன்றுனுள் உலக சார்புகொண்ட விஞ்ஞானி, அனுபவிக்கப்படும் பொருளையும், வாழ்க்கை விஞ்ஞானியாகிய ரிஷி அனுபவிக்கின்றவனையும் தாங்கள் தேடும் புனித ஆராய்ச்சிக்குப் பொருட்களாக—சாதனங்களாகக் கொண்டார்கள். இவ்விரு தரத்தார்களும் ஒரே உண்மைப் பொருளுக்காகபாடு பட்டாலும் அவர்கள் உழைக்கும் துறைகள் வேருக இருக்கின்றன. உலக விஞ்ஞானி உலகப் பொருள்களை வெளிமுகமாகவும், ஆன்ம விஞ்ஞானி அனுபவிக்கின்றவனுடைய உள் நிலையில் நின்று உலக உட்பொருட்களை உள்முகமாகவும் ஆய்ந்து எங்கும் நிறைந்த உண்மையை அறிய முற்படுகின்றுன்.

இங்கிலையில் வாழ்க்கை விஞ்ஞானப் புலவர்கள் அருளிய வேதாந்த சாரத்தைக் கவனித்தோமானுல் உலகச்

சார்புள்ள விஞ்ஞானிகள்—இவ்வுலகியல் விஞ்ஞானிகள், இன்னும் இயற்கையின் முற்றத்திலே விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தை என்பதும் இவர்கள் இயற்கை மீது வெற்றி பெறுதவர்களென்றும் கூறலாம்.

உபநிடதங்களை வழங்கிய உயரிய முனிவர்களோ மனிதனின் அகத்திலுள்ள உலகங்களை நன்கு ஆராய்ந்து எல்லாவற்றிற்கும் அடிப்படையான கருத்துக்களை கண்டு பிடித்தார்கள். அதாவது எக்கருத்துக்களை அறிந்த பின் வேறு எதையும் அறியவேண்டியதில்லையோ, எதைப் பார்த்தபின் வேறு எதையும் பார்க்கவேண்டிய அவசியம் இல்லையோ அவ்வாறுள்ள "கிருதகிருதாயகா" என்ற நிறைவை அடைந்துவிட்டார்கள். இவ்வரிய பெரியமேதாவிகள் சென்ற வழியிலேயே நாமும் சென்று, அவர்கள் கண்ட அடிப்படையான முடிவுகளை, அவர்கள் கையாண்ட விஞ்ஞான முறைகள் மூலமே பெற நாம் முயற்சிப்போம்.

ஒரு தாவர நூற்புலவன் புதிய புஷ்பங்களைப் பார்த்ததும அவை பற்றிய விஷயங்களை அவன் அறிய முயல்வது ஒரு கலைஞன் புஷ்பத்தைக் கண்டு களிப்பதற்கும் அல்லது ஒரு கவி அதன்மூலம் பெறும் மனோ உணர்ச்சி பெறுவதற்கும் கையாளும் வழிகள் மூலம் அல்ல. அவன் தன்னுடைய தொழிலுக்கேற்றவாறுள்ள ஒரு தனிப்பட்ட முறையில் அது தரும் மணம் குணம் முதலியவற்றின் இரகசியங்களில் ஈடுபட்டு நுழைந்து ஆய்ந்து முடிவாக அவன் அதை ஒருவகை மலர் வகுப்பின் தலைப்பில் சேர்க்கின்றான். அப்படியேதான் ஆழ்ந்த கருத்துக்களையுடைய சிந்தனையாளர்கள். தம் மதிக்கத்தக்க மனோ சக்தியாலும் நியாயவாத நுட்பங்களாலும் எந்த விஷயத்தையும் படிப்படியாக அதன் உள்ளத்தில் உள்ள மர்மத்தைத் தெரிந்துகொள்ள முயற்சித்தார்கள்.

அவர்களுடைய ஆராய்ச்சியில், அவர்களுக்குத் தெரியவந்ததென்னவென்றால் ஒரு மனிதன் ஒரு பொருள் மூலம் ஒரு அனுபவத்தைப் பெறும் பொழுது அவன் சரீரம் ஒன்றேயாயினும் அவன் பெறும் அனுபவம் அவனை நான்கு ரகங்களாகப் பிரித்துவிடுகின்றது. அதாவது அவனுடைய சரீரம் உள்ளம், விவேகம் ஆத்மா ஆகும். நான்கு வெவ்வேறு பொருட்கள் சேர்ந்த வடிவம் உள்ளவனாக அவனை அமைத்து விடுகின்றது. அந்த வடிவங்கள் மிக நுட்பத்தன்மை வாய்ந்துள்ளமையால், கிரியாம்சையில் அவை வெகுவிரைவில் நுழைந்து வேலை செய்து மேலெழுந்தவாரியாகயிருக்கும் ஒருவன் அறியமுடியாத முறையில் ஏககாலத்தில் கிரகித்துக்கொள்ளும் திறமையைக் கொண்டிருக்கின்றன. வெகு நுட்ப அறிவுப்புலன்களும் எல்லாம் உட்கொள்ளும் நோட்டமும் பெற்றிருந்த ரிஷிகளால் மட்டுமே இந்த க்ஷண நேரத்தில் நிகழும் நிகழ்ச்சியைக் கிரகித்துத் தெளிவடைய முடியும். ஒரு மனிதன் ஒரு பொருளை ஆயுமபோது அந்த மனிதனின் சரீரம் ஒன்றாக அல்ல அனுபவத்தைக் அணுகுவது; நான்கு வாய்கள் கொண்ட தனி மனிதர்கள்போல் தனிப் படை தேவைகளுள்ள நான்கு தனி ஜடங்கள் போல்தான் இந்தப் பொருளையணுகி அனுபவத்தைப் பெற ஆவல் கொள்ளுகிறானென்று ரிஷிகளின் ஆராய்ச்சிகளிலிருந்து அனுபவிக்கப்பட்டவைகளைப் போன்று ஒவ்வொன்றும் தெளிவாகத் தெரிகிறது.

உனக்கு உன் அயலான் ஒருவனால் ஒரு அப்பம் இனமாய் வழங்கப்பட்டதாக வைத்துக் கொள்வோம். அப்போது நடப்பதென்ன? உன் உடல் அதை அனுபவிக்கத் துள்ளுகின்றது; கண்கள் அதன் வடிவை பதித்துக் கொள்கின்றது; மூக்கு அதன் மணத்தை முகருகின்றது; மேற்தோல் அதன் ஸ்பரிச உணர்வு கொள்கின்றது. ஒரு கால் நாக்கிலும் சிறிது நீர் ஊறியிருக்கலாம். அப்

போது உன் மானசிக புருஷன் கூட அதை அனுபவிக்கத் துடிக்கின்றான். ஆனால் அதற்குப் பசி இன்மையால் அது இன்னும் இரண்டு மணி நேரத்திற்கு பிறகு அதைத் தின்று அனுபவிக்கத் தீர்மானிக்கின்றது. இது மட்டுமே யல்ல, உன் புத்தி கூட கிளர்ந்தெழுந்து சந்தர்ப்பத்தை எண்ணிப் பார்க்கின்றது. உன் உடல் நீர் வியாதி கொண்டுள்ளதால் அப்பத்தைச் சாப்பிடுவது உன் உடற் நலத்துக்கு ஆகாது என்ற டாக்டர்களின் எச்சரிக்கையை உனக்கு ஞாபகப்படுத்துகின்றது. இத்துடனும் முடிந்து விடவில்லை! உன்னுள்ளுள்ள உண்மை தெய்விக உணர்வு அயலானிடமிருந்து ஏற்றுக்கொண்ட அப்பத்திற்கான கடமையுணர்ச்சிக்காக உன்னை ஒரு வித தயக்கத்திற்கு உட்படுத்துகின்றது.

இவ்விதமாக, ஒவ்வொரு க்ஷணமும் நம்முடைய ஒவ்வொரு அனுபவத்திலும் இந்நான்கு வெவ்வேறான பொருட்கள் நம்மிலிருந்து கிளர்ந்து பெருகி சந்தர்ப்பங்களில் ஆழ்ந்து அதன் பயனாகிய அனுபவத்தைப் பெறுகின்றன. இந்த நான்கு வேறுபட்ட சக்திகள், அறிமுக மற்ற புதியவை போன்று நடந்துகொண்டு வேறுபட்ட துறைகளில் இறங்கி வாழ்க்கையின் வெவ்வேறு மதிப்பைக் கொள்கின்றன. கொடுக்கப்பட்ட சந்தர்ப்பம், அல்லது பொருளை அனுபவிக்க அவை ஒன்று சேரும் போது அநேகமாய் இதைக் கூட்டும் ஒன்றுக்கு திருப்தியையும் பிற மூன்றுக்கும் சில சமயங்களில் ஏற்றத்தாழ்வான அளவில் அதிருப்தியையும் கொடுத்து வருகின்றது. இதற்குப்பின் தன்னுள்ளிருக்கின்ற நான்கு விதச் சக்திகளுக்கும் முழு திருப்தியைத் தரும் வகையில் ஒரு சந்தர்ப்பம் சாதாரண மனிதனால் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

எல்லா நியதிகளிலும், எல்லா நிலைகளிலும் மனக் கண்ணால் அறியக்கூடிய ஒவ்வொரு பொருளிலும் நம்

முடைய உறுப்புக்களில் பெரும் பகுதி விம்மி அழுது கொண்டும் பெருமூச்சு விட்டுக்கொண்டுமிருக்கின்றது. சில உறுப்புக்களே புன்னகை கொள்கின்றன. அவையும், தமக்குப் பின்னுலுள்ள வேதனை தரும் துன்பங்களால், மீண்டும், விம்மியழுது பெருமூச்சுவிடுகின்றன. இவ்விதமான வாழ்க்கை அமைப்புத் திட்டத்தில், நமக்குள் நாமே உண்டாக்கிக்கொள்ளும் ஒழுங்கற்ற நிலையில், நமக்குள்ளேயே நிகழும பயங்கரமான ஒழுங்கீனங்களில் மனிதனுடைய அமைதியும் க்ஷேமமும், தாய்மையும் சந்தோஷமும், முடிவில்லா ஆவலும, சந்தோஷ ஆரவாரத்துடன வாழ்வதற்கு விரும்பும் நம்பிக்கையும், கட்டாயமாக எல்லாம் தகர்ந்து அழியவேண்டி யிருப்பதுடன் அவனை ஆழங்காண முடியாத அவநம்பிக்கை, ஏக்கம், மனக்கலக்கம் ஆகிய படுகுழியில் தள்ளிவிடுகிறது. சுருக்கமாய்ச் சொன்னல் சம்சாரம் என்ற சகஜமான வாழ்க்கையில் குறிப்பிட்டுள்ள துன்பங்களுக்கெல்லாம கண்ணுக்குப் புலப்படாத காரணம் மனிதனுக்குள்ளேயே ஏற்படும் ஒழுங்கீனமே ஆகும.

இந்த ஆராய்ச்சிகள் இந்த நேரத்தில் நம மனதில் குழப்பத்தை உண்டாக்கலாம். மிக நுட்ப அறிவினைப் பெற்ற முன்னைய ஆசிரியர்களும அவர்களுடைய காலத்தில் இதைவிட ஆயிரம் பங்கு அதிகமாக இதே மனக்குழப்பத்தை உணர்ந்திருப்பார்கள். ஆயினும தீரம் மிக்க உழைப்பாளிகளாகியிருந்த ஆன்றோர் அவர்கள் வாழ்க்கையின் விஞ்ஞானத்தைக் காண்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சியில் உண்மையாகவும் ஊக்கத்துடனும் தொடர்ந்து சென்றதால் ஒரு மனிதனிடம் அமைந்துள்ள நான்குவித பாகுபாட்டுப் பொருள்களும சாபர்த்தியமாகவும் நமபிக்கையோடும் ஒரே முழுமைக்குள் ஒன்றுபடும் வழியைக் கண்டுபிடித்தார்கள். அத்திட்டத்தில், இவ்விதம் நான்கும் ஒன்முன பொருள்

விருப்பத்தக்க இன்பத்தை தானே அனுபவிக்கவும் தனது எந்த ஒரு பகுதியும் அந்த சந்தோஷத் திட்டத்தில் அமைத்து திருப்திகொள்ளவும் முடிந்தது. ஒரு ரதம் நான்கு முரட்டுக் குதிரைகளால் பூட்டப்பெற்று ஒவ் வொன்றும் தன்னுடைய பலங்கொண்ட மட்டும் நான்கு வெவ்வேறு திசைகளில் அதை இழுக்குமானல், கடிவாள மிட்டு இழுத்து அடக்கப்படாத அவற்றின் பலத்தால் அந்த ரதம் குறித்த இடத்தை அடைய முடியாமற் செய் வது மன்றி அதைச் சின்னபின்னமாக உடைத்துவிடும். அதுபோலவே, இன்று நாம் அகமுகச் செயலில் தனித் தனியாகப் பிரிந்திருப்பதால், ஜீவ யாத்திரையில் நம் குறிக்கோளை அடைவதற்கு எவ்வித முன்னேற்றமுமின்றி உலக போகங்களிலுள்ள சாக்கடைகளில் விழுந்து கெட் டழிகின்றோம். மதம் போதிக்கும் சிறந்த திட்டத்தின் செயல்முக உத்தேசம் என்னவென்றால், நம்முள்ளே இருக் கும் இந்நான்கையும் நாம் நம்முடைய குறிப்பிட்ட வாழ்க் கைத் துறைகளின் மூலம் பழகி இன்பப் பிரமாணம் செய் வதற்கான மத சம்பிரதாய சடங்குகளும் எல்லோரும் அறிந்து நாம் ஒவ்வொருவரும் நமக்குள்ளே முழுதும் திருப்திகரமாய் ஒன்றுபட்டு வாழச் செய்வதாகும்.

நாம் எவ்வளவு அதிகமாய் நெருங்கி ஒன்றுபட்டிருக் கின்றோமோ, அவ்வளவு அதிகமாய் நமது வாழ்வின் அடிமைத் தனத்திலிருந்து மீண்ட நமது சுதந்திரம் இருக் கும். இந்த முழுமையை அடைவதற்கான குறிப்பிட்ட வழி முறைகள் யாது என்பதை மற்றொரு உபந்நி யாசத்தின் விஷயங்களாக வைத்துக்கொள்ளலாம். ஆனல் இப்பொழுது நாம் நமக்குள்ளேயே நம்பிக்கையில்லாமல் வேறுபாடுற்று வாழும் ஒரு நிலை இருக்கின்றதெனத் தெரிந்துகொள்வதே போதுமானதாகும். ஒருமுகப்பட்டு ஒன்றாய்ச் சேர்ந்துள்ள ஒரு மனிதன், தனக்குள்ளே எந்த மாதிரியான வாழ்க்கையைக் கொண்டிருந்தாலும் அவன்

அதிகப்படியான மனோ உணர்ச்சி வேக எழுச்சிகளால் தூண்டப்படுகின்றான் என்பதைச் சொல்லளவிலாயினும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இந்தவிதமாக சதா மாறுதல்களையுடைய வெளி உலகத்திலிருந்து ஒரு சரியான விடுதலை—சுதந்திரம் கிடைக்கப் பெற்றால் அதுவே முழு பலனாகும். பிறகு மீதியுள்ள மாறுதலில்லாத நிரந்தரமான நலனை நமக்கு நாமே தேடிக்கொள்ள முடியும். இந்த நிலையை எப்படி அடைவது? அதை அடைவதற்கான தர்க்க ரீதியான முறைகள் யாவை? அவற்றைப் பற்றிப் போகப் போக விவாதிக்கலாம்.

இந்து மதத்தின் பெருமை

அனுபவிக்கின்றவனுடைய அமைப்பினுள் சோதனைகள் செய்தகாலத்து, ஒவ்வொரு அனுபவசாலியினிடத்தும் நான்கு வெவ்வேறு உண்மைப் பொருட்கள் இருப்பதாகவும், ஆனால் ஒவ்வொரு மனிதனும் தன்னுள்ளிருக்கும் ஸ்தூலப் பொருளைக் காட்டிலும் சூட்சுமப் பொருளுக்கு சலுகை காட்டி அக் கனப்பொருளை தியாகம் செய்யத் தயாராயிருப்பதையும் கண்டுபிடித்தனர்.

இந்த விஷயத்தை ஒரு எளிய உதாரணத்தால் மிகத் தெளிவாய் விளக்கிக்காட்டலாம். நீ புதியதாய் அறிமுகமான ஒருவருக்காக தேகத் தியாகம் செய்ய சொல்லப் படுவாயானால் அந்தத் தியாகத்தை மனமுவந்து நீ முன் வந்து செய்ய இணங்கமாட்டாய். மாறாக, உன்னுடைய மனோ வேதனைகளுக்குக் காரணமாக ஒரு புண் அல்லது கட்டி உன் உறுப்பில் எங்கேனும் உண்டானால், நீ உடனே இரண வைத்தியனிடம் ஓடிச்சென்று அவனுடைய ஆலோசனைப்போல் அந்த உறுப்பையும் வெட்டி எடுத்துவிடவும் சம்மதிக்கின்றாய். ஆனால் உன் மனோசாந்திக்காக அந்த உடலையும் தியாகம் செய்யத் தயாராகின்றாய் என்பதாகும்.

இன்னும் நுட்பத்தன்மையுள்ள அறிவு நிலைக்குச் செல்லும்போது நீ அதன் திருப்தியின் பொருட்டு உன் உடலையும் மனத்தையுங்கூட தியாகம் செய்கின்றாய். குறிப்பிட்ட விஷயங்களுக்காக பிராணத்தியாகம் செய்த பெரியோர்களே இதற்கு உதாரணமாவார்கள். நமது இக்கால அரசியல் சரித்திரம் வேண்டிய நிகழ்ச்சிகளைக் கொடுக்கும் புத்தி பூர்வமான நம்பிக்கையில் ஏற்படும் உணர்ச்சியின்போதும், அதை செய்து முடிக்கவேண்டும் என்ற துணிவு வந்தபோதும் அதற்காக உழைத்துப் பலனடைய அவர்கள் எவ்வளவு உடல் துன்பத்தையும் உள்ளத்துயரங்களையும் அடைவதற்கு தயாராகி விடுகின்றனர்.

வாழ்க்கை விஞ்ஞானிகளென அழைக்கப்படும் ரிஷிகள் தங்களுடைய ஆராய்ச்சிக்களுக்கான விஷயங்களைத் தங்கள் ஒவ்வொரு நாள் தேவைக்குப் பாடுபட்டு உழைத்துச் சம்பாதித்தும் செலவழித்தும், இன்ப துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருந்த மக்கட் சமூகத்திலிருந்தே சேகரித்துக் கொண்டார்களென்பதற்கு இவ்வாராய்ச்சிகளின் போக்குகளே போதிய சான்றுகளைத் தருகின்றன. மதமானது, வனங்களில், தனித்த ஓரிடத்திலிருந்து உண்டாக்கப்பட்டிருக்கின்றது என்பது தவறான கருத்து. அதில் சொல்லி யிருப்பனவெல்லாம் மக்களின் தினசரி வர்ழ்க்கைக்கு உதவாது என்று பொதுவாகப் பரவியுள்ள கருத்து, பாமர மக்களின் அவசரப் போக்கில் வெளியான அறியாமையினால் ஏற்பட்டதாகும். வாழ்க்கை விஞ்ஞானம் என வழங்கப்படும் மதம் வாழ்க்கையிலிருந்தே உண்டாயிற்று; அதில், மனிதனின் தினசரி வாழ்க்கையில் நிகழும் சிக்கல்களை திருப்திகரமான முறையில் தீர்த்துக்கொள்ள முயன்று அதைக் குறித்து வைக்கப் பெற்றுள்ளது.

உண்மைகளை ஆராய்வதில் பேராற்றல் பெற்ற மேதாவிகள், வாழ்க்கையின் தவமுன போக்கிலும், பர பரப்பிலும் மனச் சோர்வுற்று, எளிமையும் அமைதியும் நிறைந்த தனிமை வாழ்க்கையை நாடி வனங்களுக்குச் சென்ருர்கள். அங்கிருந்து அவர்கள் பற்றற்ற வாழ்க்கையைப் பூரணமாய் மேற்கொண்டு ஆராய்ந்து, வாழுக்கையின் உண்மைகளைக் கண்டு பிடித்தார்கள். அமைதியான வாழ்வில் கிடைக்கும் பயனைக் கண்டு புதிய வழிகளைக் கொண்டு வாழ்க்கை முறைகளை மாற்றி அமைத்தார்கள். அல்லாமல், இவ்வாராய்ச்சியாளர்கள் வாழ்க்கைத் தொல்லைகளுக்கு மனம் உடைந்து ஓடிப்போய் வனத்தில் வாழவில்லை. அங்கே குகைகளுக்குள், தனியாக இருந்து, சதா மாறுதலைக்கொண்ட வாழ்வின பலவகையான நிலைகளும், வாய்ப்புக்களும் மனிதனுடைய உள்ளத்தில் எப்படி வேலை செய்கின்றனவென்பதை மிக மிக நுட்பமாய்ச் சரித்திர சாஸ்திர ரீதியில் ஆராய்ந்தார்கள்; அதன் பயனுய்க் கிடைத்த முடிவுகளை வெளியிட்டார்கள். அம் முடிவுகளான கருத்துக்களையே நாம நமது ஆராய்ச்சியின் மூலம் அறிய ஆவலுள்ளவர்களா யிருக்கின்ருேம்.

இப் பூத உடலையே 'தான்' எனக் கருதும் ஒருவன் ஒரு சாதாரண மனிதனுகவும், மனே நிலைகளில் ஒன்றி யிருப்பவன் மனே மனிதனுகவும், அறிவாற்றல்களிலேயே ஈடுபாடுற்ற ஒருவன் அறிஞன்-அறிவுள்ள மனிதனுகவும் ஆகின்ருன். இப் பண்புகள் யாவும் தனக்குள்ளேயே நிகழ்வனவாகும். மனே உணர்ச்சிகளின் திருப்தி, நமக்கு உடற் தேவைகளைத் திருப்தி செய்வதைக் காட்டிலும் உயர்ந்ததென்றும், சிறந்த அறிவானந்தத்திற்காக உடல், மனம் ஆகியவற்றின் தேவைகளைப் புறக்கணிக்கத் தயாராகவும் இருக்கின்ருேம் என்பதையும் நாம் அறிந்தோம். இவ்விதம், நுட்பத் தன்மைகளுக்கேற்ப அதிகப் படியான இன்பம் ஒவ்வொருவரும் அனுபவிக்கின்ருர்கள்.

இவ்வாறு நம்முள் நுட்பத் தன்மைகளுடன் ஒன்றும் போது இப் பூத உலகப் பொருட்களால் ஏற்படும் இன்ப துன்பங்களினின்று நாம் ஒதுங்கிவிடுகிறோம். இந்த விஞ்ஞான ஆராய்ச்சி முடிவிலிருந்து ஒரு உண்மை விஞ்ஞான ஆராய்ச்சியாளருக்கு, நாம் நம்முள்ளிருக்கும் வெகு நுட்பப் பகுதியுடன் சதா ஒன்றி யிருந்து கொண்டே இவ்வுலகில் வாழக்கூடிய ஒரு வழியையும் கண்டுபிடிப்பதில் சிரமமில்லை.

இந்த முடிவுகளைப் பின்தொடர்ந்ததனுல் வேதகால முனிவர்கள் உலக பந்தங்களைக் கடந்து மக்கள் சுலபமாக அந்த உள் நுட்பப் பொருளுடன் ஒன்றி வாழுதற்கான வழி முறைகளைக் கண்டு பிடிக்கத் தூண்டப்பட்டார்கள்.

அவர்கள் கண்மூடித்தனமாகத் திட்டமிடுவோர்களா யில்லை. திறமை மிக்க அத்திட்டங்களை அவர்கள் பெய ருக்காகவும் அதிக ஆதரவைக் குறிக்கும் ஓட்டுகளைப் பெறுவதற்கும் ஆசைப்பட்டு கண்டுபிடிக்கவில்லை. உட லில் ஆரோக்கியமும் மனத்தில் சந்தோஷமும், திடமான அறிவும், கருத்து நாட்டமும் பெற்ற சிறந்த மக்கட் சமு தாயத்தை உண்டாக்கப் பாடுபடும் தன்னலமற்ற தொண் டர்கள் அவர்கள். மக்களுடைய துன்ப நிவர்த்திக்காக பாடுபட்டது அவர்கள் மக்களின் மீது கொண்ட அன் பாலேயன்றி ஆசையாலல்ல. ஆகையால், ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அது பொருந்துமாறு இருந்தாலன்றி அத்திட்டம் எவ்வளவு உயர்ந்ததாகத் தெரிந்தாலும் அதைத் தங்கள் கருத்துக்களுடன் சேர்த்துக்கொள்ள வில்லை. அவர்கள் குறிப்பிட்ட ஒரு சமூகத்தினர்க்கோ, அன்றி தம்மைப் பின்பற்றும் குழுவினர்க்கோ போதிக்கப் பாடுபடும் ஆசிரியர்களாக இல்லாமல், எக்காலத்திலும் உலக முழுதுமுள்ள மக்களுக்கு உணர்த்தும் தீர்க்க தரிசிகளாக விளங்கினர்.

அவர்களுடைய திட்டங்களும் செயல் முறைகளும் எல்லாக் காலங்களிலும் உலக முழுவதிலும் வாழும் மக்கள் எல்லோருக்கும் பொருந்துமாறு அவ்வளவு பொதுமைக் கருத்துக்கள் கொண்டவையா யிருந்தன. ஆதலால், இந்த ரிஷிகள் மற்ற தீர்க்கதரிசி அல்லது ஒரு ஆசிரியனைப்போலன்றி ஒரு காலத்து ஒரு தலைமுறைக்கு மட்டும் பயன்படுமாறுள்ள செயல்களையும் வியாக்கியானங் களையும் கொண்டிருக்கவில்லை. பௌதிகம் அல்லது உயிர் வர்க்க நிர்ணய விதிகள் ஒரு தேசம் அல்லது மக்க ளுக்கு மட்டும் உரிமையானப் பொருட்களாக இல்லாமல், எக்காலத்தும் எல்லா நாகரிகங்களுக்கும் பொருந்துமாறு இருப்பதுபோல், வேதாந்தத்தில் ரிஷிகளால் சொல்லப் பட்ட வாழ்க்கை விஞ்ஞானமும், எங்கும், எல்லா மக்க ளுக்கும் எல்லாக் காலத்தும் பொருந்தக்கூடிய திட்டங் களைக் கொண்டிருக்கின்றது.

இந்தத் திட்டமானது உலகப் பொதுமையுடைய தாகையால், அந்தக் கலை நுட்பம் வெவ்வேறு காலத் திருந்த பிரிவினர்களுடைய மனோ இயக்கங்களுக்கும் பொருந்துமாறு இருக்கின்றது. அவர்கள் தங்கள் தெய்விக ஞானத்தால் ஒரு வரம்புக்குட்பட்ட முறை எல்லாருக்கும் எல்லாக் காலத்தும் ஒத்துக்கொள்ளா தெனக் கண்டார்கள். மனிதனுக்கு மனிதன் மனோ விருத்திகளிலும், அறிவாற்றல்களிலும் தெளிவான வித்தி யாசங்களிருக்கின்றன. ஆகவே எல்லோருடைய மனோ புத்தி விர்த்திகளை அடக்கியும் ஆளவும் கூடிய ஒரே செயல்முறைத் திட்டம் அமைவது அனுபவ சாத்தியமற்ற தென்றும், எள்ளி நகைப்பதற்குரியதா யிருக்குமென்றும் சொல்லலாம்.

தனிமையின் உச்சஸ்தானத்திலிருந்தும் அமைதி யான, தியான மௌனத்திலிருந்தும் பெருமை மிக்க ரிஷிகள், வாழ்வில் தனக்குரிய சாதாரண இன்பம் பெற்று

திருப்தியடைவதற்காக, தொல்லைகளும் துயரங்களும் ஏற்று அவதிப்படும் மனித சமூகத்தின் அலங்கோலத்தை அன்பால் பார்க்கின்றனர்.

நமது இருதய ஸ்தானத்தின் மூலமும், தலை-மூளையின் மூலமும் அனுபவிக்கப்படும் தொடர்ச்சியான அனுபவங்களே வாழ்க்கையென முன்பு கண்டோம். இங்கு "இருதயம்" மென்பது இரத்தத்தை உடற் முழுவதும் பரவச் செய்துகொண்டிருக்கும் இரத்தாசயம் மென்னும் உடற் கூறு அல்லவென்பதைக் கவனமாய்த் தெரிந்து கொள்ளவேண்டும். அது மிக உன்னதமானதும் உயிர்ப்பு களுக்கும் உணர்ச்சிகளுக்கும் நிலைக்களமாயுள்ளதுமான ஒரு இடமாகும். பொருட்களைப் பகுத்து பகுத்துப் பார்த்து ஆராய்வோர் எல்லா செயல் முறைகளுக்கும் தலை-மூளையே காரணமெனக் கருதுகின்றபடி அல்ல வாகும. நமது அனுபவங்களுக்கான விஷயங்களைத் திருத்தி நமது அனுபவங்களை ஒழுங்குபடுத்திச் செல்லும் இவ்விரு அம்சங்களுமிருந்தும் மனிதனுக்கு மனிதன் முடிவில்லாத வேறுபாடுகளைக் காண்பது ஏனெனில் ஒவ்வொரு தனி மனிதனுடைய செயல் முறைகளுக்கும் காரணமாகிய மூளை-ஹிருதயம் ஆகிய இரு பகுதிகளின் அளவைப் பொருத்ததாகும். ஆகவே, இவ்விரு அம்சங்களின் அடிப்படையில் மனித சமூகத்தை நான்கு வித பிரிவுகளில் திருப்திகரமாய் பிரித்துவிடலாம். அவை : (A) மூளைப் பகுதியை விட ஹிருதயப் பகுதியின் அதிக ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். (B) ஹிருதயத்தைக் காட்டிலும் மூளையின் அதிக ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். (C) ஹ்ருதயம், மூளை இவ்விரண்டின் சம ஆட்சிக்குட்பட்டவர்கள். (D) ஹிருதயமும் மூளையும் போதிய அளவிற்கு வளர்ச்சி பெறுதவர்கள் என நான்கு வகைகளாகும். இந்தப் பிரிவு, உலகப் பொருள்களிலும், சந்தர்பங்களிலும் மனிதனுக்கு உண்டாகும் உணர்ச்சி வேகங்களின் முடிவுகளைப் பகுத்

தறிந்து பெறும் முடிவில்லா அனுபவங்களின் தரத்தை அடிப்படையாகக் கொண்டே ஏற்படுத்தப்படுகிறது. சுத்த அறிவு மயமானவர்களோ அன்றி பூரண இருதய உணர்ச்சி மயமானவர்களோ யாரும் இல்லை. இவ்வாறு யாரேனும் இருந்தால் அவரை உலகம் பைத்தியம் பிடித்தவர்கள் என்று தான் கூறும். தலை-மூளையும், ஹிருதயமும் ஒவ்வொரு சிறிய அனுபவத்திலும் கலந்தே இருக்கின்றன. துப்பாக்கி மருந்தும் சாக்கரையும் கலந்த கலவையில் மாதிரிப் பகுதியொன்றை சூட்சுமமாக ஆராய்ந்தால் அதில் இரு பொருள்களும் சம அளவில் கலக்கப்படவில்லை யென்பது தெரியவரும். இதுபோலவே தான் மூளை ஹிருதயம் என்ற இரு பொருட்களின் கலப்பான மனித வாழ்க்கையிலும் ஒன்று மற்றொன்றைவிட அதிக ஆதிக்கம் செலுத்துவதைக் காணலாம்.

இவ்விதமான குழப்பச் சங்கடத்தில் ஆன்மீக விஞ்ஞானிகள் ஒரே விதமான கட்டுப்பாடுகளுடன் வரு முறைகளை வகுத்திருந்தால், அது ஒரு தலைமுறை மக்களில் ஒரு பகுதியினருக்குத்தான் ஒரு பகுதியோ பூரணமாகவோ பயன் பட்டு இருக்கும். ஆகவே, உலகத்திலுள்ள எல்லா மதங்களையும் ஹிந்து மதத்துடன் ஒப்பிட்டு பார்க்கும் போது எல்லா மக்களுக்கும் எல்லாக் காலங்களுக்கும் ஏற்றவாறு உலக மதமாகக் கருதக்கூடியவகையில் ஹிந்து மதத்தைத் தவிர மற்றெல்லா மதங்களும் குறைபாடுடையதாகவே உள்ளன. இப்படி இருப்பது மதத்தின் குற்றமல்ல; எந்த தீர்க்கதரிசியின் குறைபாடும் அல்ல. ஒரு தலைமுறையிலிருந்த மக்களுக்கு அக்காலத்திலிருந்த ஒரு சாதாரண புருஷன் தன் ஜீவிய காலத்தில் செய்த போதனைகளாகும். இந்த தீர்க்கதரிசியின் கவலை அவர் காலத்திருந்த மக்களைக் குறிப்பிட்ட ஒரு குறையினின்று விடுதலை செய்வதேயாகும். ஆகவே, ஒவ்வொரு மதமும் அவரவர்களுடைய காலத்திற்கு ஏற்றதாகவே இருந்து

அக்காலத்திருந்த மக்களின் உடனடியான சிக்கல்களை தீர்த்து வந்தது. ஆனால் அந்த மதத்தத்தையே எல்லாக் காலத்திலும் எல்லா மக்களையும் கைக்கொள்ளுமாறு கண் மூடித்தனமாய் மதவெறியால் வற்புறுத்துவது திருப்தி யற்ற இழிச்செயலாகும்.

ஆனால், நமக்குக் கிடைக்கின்ற ஏராளமான நூல்களி னின்று மனிதனின் முழுச்சிக்கல்களைத் தீர்ப்பதற்கான எல்லா விவரங்களையும் கொண்டிருப்பதால் ஹிந்து மதம் எல்லாக் காலத்துக்கும் எல்லா மக்களுக்கும் உதவுமாறு பொருத்தமாய் இருக்கின்றது. ஒவ்வொரு காலத்து மக் களுக்கிம் ஏற்றவாறு அக்காலத்து விஞ்ஞான முறையில் விளக்கி வர வேண்டிய ஒன்றே ஹிந்துமதத்தில் செய்யத் தக்கதாகும். மனிதனின் மனோ புத்தி பூர்வமான குறைபாடுகளை யனுசரித்து பிறிதொரு முறைக்கு மாற்றி வலியுறுத்துவதே சிறந்ததாகும். உலகத்தில் வன்மை மிக்க ஆட்சியாளர்களின் ஆதரவுடன் வந்த பிற கொள்கை யினர் அதன் நீதியான கொடுமைகளினாலும், தன் சொந்த நாட்டிலேயே தனக்கு ஆதரவு காட்டாது இரக்கமற்று இருந்த ஆட்சிகளின் கீழும் அடிக்கடி ஏற்பட்ட மாறுதல் களால் இருள் சூழ்ந்து அண்டப் பட்டு இருந்தும் ஹிந்து மதம் பிழைத்திருப்பதன் இரகசியம் இதுவேயாகும்.

ஆயினும் துரதிருஷ்டவசமாக, கிறிஸ்துவ போஷிப்பிலும், இஸ்லாம் கருத்துகளிலும் ஈடுபட்ட ஹிந் துக்கள் தங்கள் தவறான கல்வியறிவில் ஏற்பட்ட போலி ஞானத்தால் தற்பெருமை கொண்டு ஹிந்து மதத்தில் சாஸ்திரங்களில் காணும் சொந்த முன்னேற்றத்துக்கான பலவழிகளே பலஹீனமுடையன வென்று எண்ணுகின் றனர். இது ஒரு அரசன் பிச்சைக்காரன் ஒருவனிடம் தனது அரண்மனையிலிருந்த பல அறைகளும் பிறவும் தனது அசௌகரியத்துக்குக் காரணமாயிருக்கின்றதென குறைக் கூறிய கதையை நமக்கு ஞாபக மூட்டுகின்றது. தற்கால

நவீன ஹிந்து தன்னுடைய மதத்தைக் கண்டிப்பது விரிவான விஷயங்கள் இதில் இல்லை யெனபதாகும். இத்தகைய வெட்கக்கேடான ஆணவச் செயலுக்கு அவர்களுடைய அறியாமையே காரணமாகும்.

நமது விஷயத்தைத் தொடங்குவோம. நாம முன் குறித்த நானகு பிரிவினேக்கும உதவுமாறு, வாழ்க்கை விஞ்ஞானி, மககள் ஒவ்வொருவரும தமமுள் முழுதும் ஒன்றி வாழ்வதற்கு, நான்கு வழக்கமான முறைகளை வகுத்திருக்கினறார்கள். அவை முறையே பக்தி, கர்மம், ஷட யோகம, ஞானம ஆகிய நான்குவித யோக முறைகளாகும. இந்த நான்கு மார்க்கங்களில் பக்தி மார்க்கம உலக மக்கள எல்லோருக்கும எப்பொழுதும உபகாரமாய் வாழக்கூடிய தன்மையைக் கொண்டது. ஏனெனில் மனிதன் குறிப்பிட்ட சில கருத்துகளிலும உணர்ச்சி, பற்றுதல் இவைகளின் உத்வேகத்திலும ஈடுபட்டவனாகும. இந்தக் காரணத்துக்காக, அநேகமாய உலகத்திலுள்ள எல்லா மதங்களிலும பகதி மார்க்கத்தையே சிறப்பாகச் சொல்லியிருப்பதைக் காண்கிறோம. வெகு அபூர்வமாய், அதுவும சில சந்தர்ப்ப அறிககைகளில் சில தெளிவற்ற அபிப்பிராயங்களின் மூலம், தனனலமறற சேவையும ஆனம முன்னேற்றப் பாதையில் செலுத்தும என்பதைப் பார்க்கலாம. யோகம், ஞானம ஆகிய இருமார்க்கஙகளையும ஒப்பறற உயர் ஞானிகளான ரிஷிகளே உலகத்திற்கு இதுவரை போதித்துள்ளனர். இதைப்பறறி ஆராயும போது, இந்த வழிகள் எப்படியுள்ளனவென அறிவதற்கு இதைப் பற்றிய ஒரு படம ஒன்றை வரைந்து கொள்வோம. ஆனால் அவை ஆனம விசாரணை செய்வோருக்கு எவ்வளவு தூரம் துணை செய்யுமென்பது மற்றொரு நாளைய உபந்நியாசத்தில் பார்ப்போம்.

பக்தி அல்லது வழிபடும மார்க்கம் பொதுவாக எல்லா மக்களும சிறப்பாக அனபிற்கு பிரதி பெறுதவர்

களுக்கும், காருண்யத்திற்காக மதிப்பு பெறுதவர் களுக்கும், இரக்கத்திற்கு ஈடு காணுதவர்களுக்கும் சிறந்த தோர் சாதனமாகத் தோன்றுகின்றது. ஒரு உணர்ச்சி-ஆவேச மிக்கப் பிராணி தன் ஆவேச உணர்ச்சிகள் திருப்தி செய்யப் பட்டாலன்றி சந்தோஷப்பட முடியாது- எங்கே ஆவேச உத்வேகங்களுக்கு எதிரொளி காணப்பட வில்லையோ அங்கே அதன் மனோவெழுச்சிகள் திருப்தி அடைவது மின்றி தன் கருத்துக்களின் இன்பத்துக்காக இரங்கி ஏங்கி வருந்துகின்றது. இத்தகைய மனோபாவ முள்ள ஒரு மனிதன் அன்பே உருவாகவும், எல்லையில்லா இரக்கங் கொண்டவனுகவும், வரம்பற்ற காருண்யம் மிக்க வருமான கடவுளை வழிபட தக்கதோர் சாதனமாகும். இவவாறு ஒரு பக்தன் மனோசக்திகளை எல்லாம் கரை காணமுடியா அன்பின் கடலான ஆண்டவனிடம் செலுத் தும் பக்தி ஆண்டவன் கருணையை நோக்க ஒரு சிறு அளவேயாகும். ஆயினும் அவன் பூரண திருப்தி அடை கினுன். இத்தகைய பக்தனை ஆண்டவன் கைவிடுவ தில்லை. அவனுடைய இன்ப துன்பங்களில்-வாழ்க்கை அல்லல்களில், ஏமாற்றங்களில், நிராசை மனச் சஞ்சலம முதலியவற்ருல் ஏற்படும் தளர்ச்சி காலங்களிலும் பேரருளுடன் அவனைக் காப்பாற்றுகின்ருன்.

இருதயத்தை நிலைக்களமாக உள்ள மனிதனுக்கான இந்த முறை மூளையைத் தன்னகமாகக் கொண்டிருப்பவ னுக்குக் கிடைப்பதில்லை. அவனுக்கு உணர்ச்சி வேகத் தில் எந்த இரகசியப் பொருள் இல்லை. காரண காரியங் களால் தீர்மானித்து வருபவைகளையே அனுபவிக்கின் ருன். அவன் மூளைக்குத் திருப்தியை நாடுகின்ருன்; தன் அறிவு உச்சஸ்தானத்திலிருந்து யாவும் இயங்கு வதைக் காண்கின்ருன. இருதயம் மென்மையானது. மெல்லிய பட்டாடை தரித்தவனும், மணிகள் தரித்தும நன்ருய் அலங்கரிக்கப்பட்டவனும மணிகள் தரித்தவனு

மான புல்லாங்குழல் ஊதியும், கந்தையணிந்த சிலுவை யைத் தாங்கியவனும் ஒரு அறிவாளியின் கண்களுக்குச் சாதாரண மனிதராகவே இருக்கின்றனர்; அவர்கள் ஒருகால், தம் வாழ்நாளிலே ஓர் உச்சநிலை அடைந்திருக் கக்கூடும். என்றாலும் நம்மைப்போலவே குறைந்த காலத் தையும், இடத்தையும் பெற்ற ஒருமாதிரிப் பொருள் என்று தான் சாதாரண மனிதன் கண்களுக்குப் படுகின்றது. பக்தி மார்க்கம் ஆனம ஒருமைப்பாட்டிற்கு ஏற்ற வழி யல்லவென கருதுவோன் ஒருகால் அவன் சமூகச் சிக்கல் களில் சிக்குண்டு அவதிப்படும்போது அல்லது நேர்மை யற்ற கண்டிக்கத்தக்க பயத்திற்கு உட்படும்போதும் அவன் தன்னையே அழித்துக் கொள்கின்றான். ஆலயத் திற்கோ அன்றி மாதாகோயிலுக்கோ சென்ற அங்கிலேயி னின்றும மாறி ஒரு விலங்காக ஆகிவிடுகின்றான்.

அத்தகைய மனிதர்களுக்கும் கூட இவ்வுலகத்தில் வேதாந்தத்தைத் தவிர வேறெங்கும் புகலிடம் இல்லை. இக்கருத்துக்குப் பிரபல ஆங்கில எழுத்தாளரும் வேதாந் தியுமான ஆல்டஸ் ஹக்ஸிலி (Aldous Huxley) சான்றாவார்.

வேதாந்த நூல்களிலிருந்து மக்களின புத்தி கூர்மை யையும, அதன் சக்தியையும நன்றாய் அறியலாம. இக் காலத்து விஞ்ஞானப் பால் குடித்து வளரும குழந்தைகள் வேதாந்த முறையில் பரமனை அறிந்துகொள்ளும் மார்க் கங்களைப் பற்றித் திகிலடைந்து அவ்வழிகளில் செல்வதைப் பற்றி கனவில்கூட கருத அஞ்சுகின்றனர். மதம ஒரு சூனி யம் என்றும் பலவீனமான நமபிக்கைகளின் மூட்டைகளை யுடையதென்றும், அறிவின் முடிவுகளை அவமதிக்கின்ற தென்றும் சொல்கின்றவர்கள் வேதாந்தம் ஒரு அறி வாளிக்கு எவ்வளவு உயர்ந்த உரிமையை வழங்குகின்ற தென்பதை உணராதவர்களாவர். வேதாந்த மார்க்கம் உண்மையான காரணங்களிலிருந்து தாவி உலகில் நித்தி யம் எது அநித்தியம் எது என்றும, உண்மை எது பொய்

எது என்றும், நம்முள்ளிருக்கும் கெட்டவை எது நல்லவை எது என அறிவதற்கு நம்மை மீண்டும் ஆராய்ச்சி செய்து நாமே உண்மையாகவும், நித்தியமாகவும், சாஸ்வதமாகவும் இருப்பதைக் கண்டு பிடிக்கச் செய்கின்றது. வேதாந்தத்தின் லக்ஷியம் தெய்வத் தன்மை அடைவதாகும். அதில்தான் இந்து மதத்தின் பெருமை இருக்கின்றது.

இருதய உணர்ச்சிகளும் அறிவின் தூண்டுதல்களும் உள்ள கலவை மனப் பண்பினருக்கு செயல்முறை வழி சொல்லப்பட்டிருக்கின்றது. இங்கு மிருதுவான மனப் போக்கில் ஒருவன் பக்தியை மேற்கொள்கின்றான். அறிவின் உத்வேகம் எழுந்த காலத்தில் சமூகததிற்கு சேவை செய்ய ஓடுகின்றான். ஒரு உண்மையான தன்னலமற்ற தொண்டன் தன் மனோதிட்ட செயல்களில் திருப்தி காணும் நிறைவேற்றம் இல்லாவிடில் மனம் உடைந்து விடுவதில்லை. ஆண்டவன் கருணையே தன்னுடைய பணியின்மூலம் என்றும் அவனுடைய சிருஷ்டியில் உள்ளவர்களுடைய நலன்களைப் பூர்த்தியாக செய்து முடிப்பதுவே அவனுடைய திட்டம் என்றும் கருதுகின்றான். ஒரு பக்தனின் மூலம் பெறும் ஆசியே போதுமான கைமாறுயெனக் கருதும் ஒரு தன்னலமற்ற தொண்டன் ஆண்டவனைத் தவிர தான் வேறு எதையும் விரும்புவதில்லை. இந்த திருப்தியே மூளை இருதயம் ஆகிய இரு பண்பாடுகளுடன் ஒன்றிவிடும இருதயத்தவர்க்கும் போதுமானதாகும்.

மூளையிலும் இருதயத்திலும் தவறுதலான பண்பாடுகளுடன் விளங்கும் இந்த நான்காவது வகுப்பினருக்கு ஒவ்வொரு தீர்க்கதரிசியின் மீதும் அவநம்பிக்கைக் கொண்டிருப்பதால், இவர்களுடைய ஆன்ம அபிவிருத்திக்கு விஞ்ஞான முன்னேற்றம் கொடுத்து சரியான பாதையில் செல்வதற்கு எந்த மதத்திலும் வழி முறைகள் வகுக்கப்படவில்லை.

மிக நுட்ப அறிவு—உயிர் வர்க்கங்களைப் பற்றியும அவற்றின அமைப்புகளைப் பற்றியும் உயர்ந்த விஞ்ஞானத் தெளிவு, அனபும ஈகையும கொண்ட இனிய தெய்வீக மனோபாவம், மிக மந்தமானவர்களுக்கும உதவுமாறு ஏற்படும தெய்வீகத் தூண்டுதல் இவைகள வேதகால தேவ மனிதனை நுட்பமாய்த் தொழிற்படுத்தி எச்சரிக்கையான தனனடககத்தால் மெதுவாக மனிதனின முழு தன்மைக்கும முதலில் செலுத்தி அதன் பிறகு தவறுன அபிப்பிராயங்களைக் களைந்து தன்னால் கண்டுபிடிககப்பட்ட வரமபற்ற தூய்மைக்குக் கொண்டு சேர்க்கும. இவ்வாறு கொண்டு சேர்ககும முறையே ஹடயோகம எனச் சொல்லப்படும. இதில்தான ஆசனம, பிராணுயாமம கிரமஙகள பிறக்கப்படுகினறன.

நாம இதுவரை துரிதமாகச் செய்து வந்த விவாதத்திலிருந்து எப்படி இரக்கம மிகக நம் ஆனரோர்கள தம வாழ்க்கையில் வழுவாது இருந்தார்களெனறும விளங்குகின்றது. அவர்கள் தம் ஆனமீக எழுச்சிககாக அனுஷ்டித்த முறைகளிலோ அன்றி திட்டஙகளிலோ எந்தவிதமான மாயஜாலஙகளையும கைககொள்ளவில்லை. அவர்கள வாழ்க்கையில் நேரும சந்தர்பஙகளையும வாழவையும மக்களிடம மிக்க எதிர்ப்புககளுடனேயே அனுஷ்டித்தனர். ஒருகால் இக்காலத்தில் தன தேவைகளுககாக பாடுபடுவோர்களைவிட அதிகமாகவும இருக்கலாம. அது சமூக அடிப்படையினதாகவோ அல்லது அரசியல பொருளாதார முறையினைப் பற்றியதாகவோ இருககட்டும. திறந்த கண்களுடன் பரந்த எழுச்சிபெறற அறிவுடன இந்த ரிஷிகள அவர்களுடைய தூய அனுபவத்தின உச்சியிலிருந்து சமூகத்தில் வாழும மனிதனை கவனித்தார்கள. அவர்களுடைய மினனோட்டப பார்வையின மூலம, வாழக்கையில் முடிவில்லாத பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு தனி மனிதனின மனோபுத்தி சாதனஙகள்

எவ்வாறு தொழிற்படுகின்றனவென அறிய முடிந்தது. இந்த மூலப்பொருட்களைக் கொண்டே அவர்கள்— வாழ்க்கை விஞ்ஞானிகள்—ஹிந்து மதம்யெனச் சொல்லப் படும் சாரமான இன்ப வாழ்விற்கான உண்மை மிக்க தெய்வீகத் திட்டத்தைத் தயாரித்துள்ளார்கள்.

வெவ்வேறு பிரிவினர் எப்படி வெவ்வேறு திட்டங் களை தொழிற்படுத்தினூர்கள் என்பதைப் பற்றிய பேச்சு மற்றொரு நாளையதாகும். அப்படிப் பேசுவதால் ஹிந்து மதத்திற்கு மேலும் ஒப்புயர்வற்ற பெருமையை தனது முழுமையான தூய்மை மிக்க விஞ்ஞானத்தின் வாயிலாக விளக்குவதாகும்.

உலக மதம் -- ஹிந்துமதம்

வாழ்பவர்களை கவனிக்காது வாழ்க்கையைப்பார்க்கும் பார்வை, மனித தத்துவ ஞானத்தை வேதாந்தத்தை திருப்பிப்பார்க்கும் வேடிக்கையாக இருக்கும். வேதாந்தம் வாழ்க்கையின் அளவை அல்லது லக்ஷியம் என்பதில் சந்தேகமில்லை. ஆனுல் அந்த லக்ஷியம், குறிப்பிட்ட முறையில் வாழ்ந்தாலன்றி பூர்ணத்துவம் பெறமுடியாது. மேல் நாட்டில் அநேகமாய் தத்துவஞானிகளெல்லாரும் வாழ்க்கைளின் தத்துவதரிசிகளாயில்லாமல் சோம்பேறி களின் கனவுபோல தாங்கள் அனுபவமில்லாது பேசி யிருப்பதே பெரும்பாலும் காண்கின்ரேும்.

ஆனுல் கீழ் நாடுகளில் சிறப்பாக ஹிந்துமதத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்வின் நோக்கம் அனுபவிக்கக் கூடியவாறு இருக்கின்றது. அதைச் சீராகக் கடைப்பிடித் தொழுகினுல் ஒரு தனி யாத்திரிகனும் அந்த ஜீவ யாத்

திரையில் நடந்து சென்று தன் குறிக்கோளாகிய ஆன்ம சாக்ஷாத்காரத்தை அடையக்கூடுமாறு அவ்வளவு விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. இந்த அனுபவ சாத்தியமான தீர்மானம், சிறந்த முன்னோர்களுடன் வாழ்வதற்கான தணிக்கமுடியா ஆவல் இவை நமது ஆன்றோர்களை ஆன்ம ஞான வளர்ச்சியையும் ஆன்ம ஒருமைப்பாட்டையும் நமது சாஸ்திரங்கள் வாயிலாக சொல்லுமாறு செய்தன. நமது ஆன்றோர்கள் எவ்வளவு அதிகமாய் உலகப் பிரகனையுடன இருந்தார்கள்; அவர்கள பூதவுடல் இங்கு இருந்தாலும மனோவிர்த்திகள் மேகமண்டலங்களையும தாவிச்சென்று ஆராய்ந்துள்ளதை நம முந்திய விஷயங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. ரிஷிகளின், மதிக்கத்தகுந்த வனமை மிகக பெரிய தெய்வத்தன்மையை இவ்வாறு நமது சாஸ்திரங்களில் விவரமாகக் கூறப்பட்டுள்ளன. அவர்கள உலகத்திலிருந்து நிலை பெயராது தலைதூக்கி நிமிர்ந்து மேக மணடலஙகளையும் கடந்து வானளாவச் சென்று மகோனனத நிலையில் பூர்ண ஆன்ம நிலையுணர்ந்துத் தூய தெய்வத்தனமையில் வாழ்ந்தார்கள்.

அவர்கள மனிதர்களைப் பறறி அலசி ஆராய்ந்தார்கள்; வகுப்புவாரியாகப் பிரித்தார்கள்; அவாகள் ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒவ்வொரு வழியைக கைக்கொளளுமாறு குறித்துத் தந்தார்கள. அக் குறித்த பாதையில் ஒவ்வொருவரும் குறித்தபடிசெல்லுங்கள. ஒவ்வொருவரும் சுலபமாக அவரவர்களுடைய ஆன்ம - ஒருமைப்பாட்டை அடையக்கூடும.

உதாரணமாக, ஹிருதயததை அகலமாயுள்ள மக்களுக்குப் பக்தியை பின்பற்றுமாறு ஏற்படுத்தினார்கள். இந்தப் பிரிவினையில் ஹிருதயமே சிறப்பாய் விளங்குவதால் தனி மக்கள் அதற்கு இணக்கமானவர்கள, அன்பு சாகரமாகிய அந்த இறைவனை அன்பு பாராட்ட பக்தி செய்யத்

தூண்டப்படுகின்றனர். ஏற்கனவே வரம்புகடந்து அன்பில் ஈடுபட்டுள்ள அவர்கள் தெய்வீக அன்பில்—வழிபாட்டில் தம் வாழ்க்கையின் முழு சிரத்தையும் இழுக்கப்பட்டு விடுகினறதைப் பார்க்கின்றனர்.

அன்பானது அன்பிற்கான பொருளின் மீது உள்ள தொடர்ச்சி பெற்ற இயல்பான எண்ணப் பாய்ச்சல்களை உற்பத்திசெய்கின்றது. எவ்வளவு அதிகமாக ஒரு குறிப்பிட்ட எண்ணத்தைக் கொள்கின்றோமோ அவ்வளவு அதிகமாக அதை மீண்டும் மீண்டும் மனனம் செய்யும் வழக்கத்தை மனம கொண்டு இருக்கின்றது. அன்பு செய்வோரின் பக்தி அவனுடைய இருதயப் பொருளான இறைவன் பால் செலுத்தப்படும் போது, அம்மனம் தனது அனுபவத்துக்கு ஏற்ற ஒரு தொழிலாகவும் பொருத்தமான இடமாகவும் கருதி அதன் மீது தன் ஆற்றல் முழுதும் செலவழிக்கின்றது. ஒரு உண்மை பக்தனை இந்த எண்ண அலைகள் குறுகிய காலத்தில் இது போன்ற முடிவற்ற பல எண்ண அலைகளை உண்டாக்கி அவன் கருத்துப் பொருளான இறைவனிடம் ஒன்றுமாறு செய்வதால் அவன் தன்னை மறந்துவிடும் நிலை ஏற்படுகின்றது. ஆகையால் இந்த பக்தனுக்கு இறைவன்—கடவுள் உருவமாகவோ பெயருடனோ இருப்பது மட்டும் அல்லாமல் அக்கடவுளே தனக்கு மிக உயர்ந்ததும், இன்பமானதும் அடிப்படையான சக்தியாகவும் உள்ள அனைத்திற்கும் பிரதிநிதியாய் இருப்பதாகக் கருதுகின்றான். ஆகவே, இத்தகைய மனிதன் அந்த வடிவப்பொருளினின்றும் இயல்பாகவே உயர்த்தப்பட்டு அவனிடத்துள்ள ஆன்ம சத்துப்பொருட்களின் பால் கலந்துவிடச் செய்கின்றது.

ஒரு மனிதன் அவனுடைய எண்ணங்களுக்கு ஏற்றபடியே இருக்கின்றான். உயர்வான எண்ணங்களைக்கொண்டிருந்தால் அவன் வாழ்க்கையிலும் உயர்ந்தே இருப்பான். ஒரு குற்றவாளி உண்மையாக குற்றத்திற்கானவற்றையே

தன் உள்ளத்திற் கொண்டிருப்பதால் குற்றம் செய்ய வேண்டியவனுகின்ருன். இந்தவிதமாக, ஒரு தனி மனிதன் ஒரு தீர்க்கதரிசி அல்லது கடவுள் விக்கிரகத்தின் பெருமையை அடிக்கடி மனனம் செய்து கொண்டிருந்தால் அவன் தன்னையறியாது அதன் குணங்களாகிய வரம்பற்ற கருணை, எல்லாவற்றையும் அணைக்கும் அன்பு, முடிவில்லாத பொறுமை, நிலையான பலம் ஆகியவற்றைப் பெறுகின்ருன்.

இந்தக் குணங்களையெல்லாம் ஒருவன் தன்னுள் வடிவ சத்துப்பொருட்கள் பால் கலக்கச் செய்தால், அத்தகை மனிதன் உள்முக நாட்டம் அடையப்பெற்று மேலும் அதிகமான திறமையும் வன்மையும் லௌகிக உலகத்திலும் பெற்று விளங்குகிருன். பூவைப்போன்ற பக்தி மார்க்கம் மனே வேகமும் உட்கருத்துக்களும் நிரம்பிய தோட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றது. இது பிறரை நடுங்கச் செய்யும் அதிகார ஆரவாரத்திற்குக் கிடைக்காது. இந்த மாதிரியான மனிதன் நீதியுள்ளவனுகவும் பகுத்தறியும் பண்பினனுகவும் இருப்பதால் மனே உத்வேகப் பற்றுதல்களால் அவலிங்கப்படும் இந்த வழியில் அவனுக்குத் தன் சிரத்தையை முழுதையும் ஆகரிஷித்துக்கொள்ளும் வியப்பு வாழ்க்கையில் ஏற்படாது. காரணம், நிலையானதும் தூய்மையுடையதுமான பெயரும் வடிவமும் அற்ற சாஸ்வதமான வரம்பற்ற ஒரு பொருளின் பிரத்தியேக ஒரு பெயரும் வடிவமும் உள்ள ஒரு பொருளை ஏற்றுக்கொள்ள மாட்டான்.

இந்த வகையான பண்புகளுடைய மனிதர்கள் முன் காலத்தில் வெகு அபூர்வமாயிருந்தார்கள். ஆனுல் இக்காலத்தில்—விஞ்ஞானயுகத்தில் அடிக்கடி இத்தகையோர்கள் காண்கின்றனர். இவர்களுக்கு இந்த பக்திமார்க்கம் சொல்லப்பட்டிருக்கின்றது. நாம ரூபங்களும் இன்ப துன்பங்களும் வேலையும் வேடிக்கைகளும் கொண்ட இவ்வுலகம், நாம் அவற்றில் கலந்துகொள்ளும்போது மனத்தைக்

கெடுக்கும் இன்பத்தை அளிப்பவையாயிருக்கின்றன. அறிவெனும் கம்பீரமான சூரியன் உணர்ச்சி வேகமாகிய குன்றுகளின்மீது, பகுத்தறிவாகிய பிரகாசமிக்க ஒளியைப் பரப்பி வரும்போது இந்த உலக அழகும் கவர்ச்சிப் பொருட்களும் ஒன்றுமில்லாமலும் அர்த்தமற்றவைகளாக வும் ஆகிவிடுகின்றன.

அறிவாளியின் மதிப்பில், இயற்கை தன்னுடைய குறைபாடுகளையும் பலவீனத்தையும் கொண்டு விளங்கு கின்றது. அத்தகைய மனிதனுக்கு, முடிவில்லாது சம் பந்தங்கொண்டிருந்த பொருட்களிலிருந்து மீட்சி ஏற் படுகின்றது. அதனால், இந்த வகுப்பில் சேர்ந்தவர்களுக்கு இயல்பாகவே சிறிது ஆன்ம முன்னேற்றமும் ஏற்படு கின்றது. வேதாந்தம காரணமறியும் திறமையை நுட்ப மாக்குகின்றது. ஆதலால், வேத நூல்களில் ஒரு மனி தனை உலகப் பொருட்களிலிருந்து திருப்புவதுடன் மட்டு மன்றி சாஸ்திரங்களைப் படிப்பதற்கும், புதிய விஷயங் களில் கலந்துகொள்ளவும் உணர்ந்து தியான முறைகளைக் கொள்ளவும் போதிக்கப்படுகின்றது.

ஆராய்ச்சியின் மூலம் உண்மைக்கும் இன்மைக்கும் இடையே பிரத்தியக்ஷ வேற்றுமை காண்பதற்கு மிக நெருங்கி வருகின்றான். வெளியுலகத்திலே மட்டும் அல் லாமல் தன்னுள்ளும் அங்கனமே காண்கின்றான். அவ னுடைய உண்மையான முயற்சிகளால், அவன் இந்த உடலிலிருந்து தன் தனித் தன்மையையும், தன்னுடைய கடிய மன உணர்ச்சிகளினின்று மீட்சியும் பெறுவதை தன் அனுபவமாகக் காண்கின்றான். மேலும் அவனுடைய தூய்மையான நிலையான தன்மை மூலம் அறிவுமிக்கக் கருத்துக்கள் அந்த அறிவின் கீழே ஆழ்த்தப்படுகின்றது. அவை அறிவையே அடிமையாக்குகின்றது.

இந்த வழியைப்பற்றிய விவரங்களில் இப்பொழுது இறங்கவேண்டியதில்லை. இனிமேல் நடைபெறும விவாதங்களில் இவைகளைப் பற்றி விரிவாய் ஆராய்வோம.

மூன்றுவது பிரிவினர் கலந்த பண்புகளைக்கொண்டவர்களாவர். ஏனெனில், அவர்களுக்கு இரண்டுவித மனோ விருத்திகள் உண்டு. உலகப் பொருட்களின் சமபந்தம ஹிருதயத்தின் மூலம சில சமயமும் மூளையின் மூலம் சில சமயமும் கொள்ளச்செய்வதாகும. அவர்களுக்கு தன்னலமற்ற சேவையே சரியான வழியாகும. இருதயத்தின் வழியில் பற்றுள்ளவர்கள் பக்தியைக் கொளகின்றனர். அவர்கள் தமமுடைய அறிவாற்றல்களை சமூகத்திற்குப் பயன்படுத்துமாறு சொல்லப்படுகின்றனர். இவ்வாறு தெளிந்த கருத்துக்களுடன் எழுச்சி பெற்று தொண்டாற்றுங் கால் இவைகளைப் படைத்த ஆண்டவனுக்கு அதைச் செய்வதாகவே கருதப்படும். இந்தவிதமாக, அவனுடைய நாராயணபாவம் அவனுடைய வழிபட்டு அனறைக்கு மட்டும் சர்வாதீனம அல்ல ஆனல் அதே தொழிற்படும் எல்லா இடத்திற்கும உரியதாகும். இவ்வாறு நடககும ஒரு மனிதன் தன் உள்ளத்தில் ஒரே எண்ணத்தைப் பெரிதாக்கிக்கொளளும வழக்கத்தை தெரிந்து கொள்கின்றுன். அந்த அடிக்கடி உணரப்படும் நாராயணபாவம் இயற்கையாக சுலபமாய் தன்னைப் பிரித்துக் கொண்டவனைப்போலாகின்றுன். இதுவேபோல எந்த மனிதனும அந்தவிதமாக ஒன்றுபட்டிருக்கலாம்.

நான்காவது பிரிவைச் சார்ந்தவர்கள் ஹடயோகத்தை அவலிம்பிக்குமாறு சொல்லப்படுகின்றனர். அவர்கள் தூய்மையாகவும், தன்னடக்கத்துடனும் குறிப்பிட்ட சில குணநலங்களுடனும் வாழ வற்புறுத்தப்படுகின்றனர். தவருது ஆசன பிராணயாமம் அப்பியாசங்களை அவர்கள் பழகினுலும் அதை அவர்கள் சாதாரணமாக தேகபயிற்சி

யாகக் கருதுவதால் அவர்களுக்கு தன் மூளைக்கும் இரு தயத்துக்கும் ஆரோக்கியத்தை மட்டுமே அளிக்கின்றன. இவ்விதமாக நன்ருய்ப் பழகியும் சாதாரண மனிதனின் செயலையொத்து இருப்பதால் அவனிடமுள்ள இரசிய சக்திகளை எழுப்புவதற்கு குண்டலினி சக்தி தொழிற்படுவதற்கு ஆழ நினைத்துப் பழகவேண்டியிருக்கின்றது. இந்தவிதமாக நான்கு சாதனைகள் நான்குவிதமான பிரிவினர்களுக்கும் ஒவ்வொருவரும் அவரவர்கட்குரிய பாதையில் செல்லுங்கால் அவர்களுடைய குறிக்கோளை அடைந்தனுபவிக்க ஏதுவாய் இருப்பதைக் காண்கின்ருேம்.

ஆகையால் இந்த வேறுபட்ட மார்க்கங்களைப் பற்றி நமக்குள்ளே நாம் சச்சரவு செய்துகொள்வது ஒரு சிறுபிள்ளைத்தனமே யாகும். ஹிந்துமத மார்க்கங்களைப் பற்றிய நுட்பங்களை அறிய முடியாது அவைகளைப் பற்றி குறை கூறும் அந்நிய மதத்தினர்களின் செயலை இரக்கத்துடன் புறக்கணிக்கலாம். ஆனல் நம்மிடையே இருந்து நம்முடைய காலத்திலேயே வாழும் புரோகித வகுப்பினர் தங்கள் வழியே சிறந்ததென்றும் மற்றவர்கள் கைக்கொள்ளும் வழியை இகழ்ந்தும் நடப்பது அவர்கள் அறியாமை மிக்க தடுமாற்றத்தால் செய்யும் காரியமாகக் கருதவேண்டும்.

இந் நான்கு வழிகளும் குறிப்பிட்ட சிலகாலம் வரை தான் தனித்தனியாகச் செல்லும். பிறகு தாங்கள் குறித்த ஒரு தனிக்கருத்திலே நிலைத்து தொழிற்படும்போது எல்லாம் ஒரே வழியில் சேரவேண்டியிருக்கின்றது. மக்கட் சமூகம முழுவதையும தமது அணைப்பில் கொண்டுவர வேண்டுமென்கிற இந்துமத ஞானிகளின் ஆர்வமே இந்த நான்குவித பிரிவுகள் ஏற்படக் காரணமாயிற்று. மனிதனுக்கான ஒரு உண்மை விஞ்ஞானமாக ஒரு உலக மதமாக இருக்கும் இந்த இந்து மதத்தில் எல்லா தரமான மக்களையும் தம்முள் கொள்ளத்தக்க விதத்தில் வழிகளை

அமைக்காதுபோனால் அவர்கள் தம்முடைய கடமையி லிருந்து தவறியவர்களாவர். இவைகளே இந்துமதமாகிய உலக மதத்தில் இருக்கும் கஷ்டங்களாகும்.

உண்மையை நாடும் எந்த பிரிவினையைச்சார்ந்த யாரும் உண்மையாகவும் உள்ளன்புடனும் சரியான வழியை போதிய அளவு பின்பற்றி ஒழுகினால், பல வயிறு திரிந்து அலையும் மனோ உணர்ச்சிகளைத் திருப்பி கொடுக்கப்பட்ட ஒருவித மான வழியில் நிலைத்து நினைக்கச் செய்வதின் மூலம் தனது சக்தியைக் காப்பாற்றக்கூடிய வல்லமையைப் பெற முடிகின்றது. இந்த மனோ வல்லமைக்கே பிரத்யா ஹாரம் என்று சொல்வதாம். இந்த விஷயத்தில் தான் நான்கு பிரிவினர்க்குள்ளும் வித்தியாசங்கள் காணமுடி கின்றது. இந்த சாதாரண நிலையினின்று ஆழ்ந்து உண்மையாக திருப்தியுடன் முன்னேறினால், வேறுபட்ட பிரிவினர்களாகிய நாம் எல்லோரும் வேறுபட்ட வழிகளில் சென்றுக்கொண்டிருக்கின்றதை அறிவோம். இந்த நான்கு வழிகளும் தாரணை, தியானம், சமாதி என்னும் மூன்று நிலைகளில் அடங்கும. இந்த நிலைகளில் நிலைக் கும் போது ஆழ்ந்து உட்செல்லும் போது ஒவ்வொருவ ருடைய குறிக்கோளும் ஒன்றாகவும் அதன் வழியும் ஒரே பொதுமையாகவும் இருக்கின்றது.

வாழ்க்கையின் குறிக்கோள்

மதம் மிருகங்களுக்கல்ல. இது சரியாக வளர்ச்சி பெற்ற ஒரு மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்பட்டதாகும். சடங்குகள் இல்லாத மதம் உலகத்தில் எங்குமே இல்லை. தவறான கொள்கைகள் உடைய நாஸ்திகர்களின் நேர்மையற்றவாதங்களால் அறிவு நுட்ப

ஆராய்ச்சியாளர்கள் மதத்தை ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றனர். மக்களுள் சிலர் உள்முக நாட்டத்திற் மிருக நிலையிற்கு சமமாய் வந்திருக்கின்றனர். எந்தத் தலை முறையிலும் பெரும்பான்மையோர் இந்தவிதமாக இருப்பதால் வாழ்க்கையின் உன்னத விஷயங்களில் அதிகமான புறக்கணித்தலும் உண்டு. மேலும் உயர்பொருளான இறை நாட்டமே துர்லபமாகிவிடுதலும் சகஜமாகும்.

எவ்வளவு அதிகமாக உள்ளே அடங்குகின்றதோ அவ்வளவு அதிகமாக மனமும் புத்தியும் வெளியாகின்றது. எவ்வளவுக்கெவ்வளவு மேலே எழும்புகின்றோமோ அவ்வளவுக்கும் கீழேயுள்ளவை தூரத்திற் கிடக்கச்செய்கின்றது. எவ்வளவு உயரமாக நின்று பார்க்கின்றோமோ அவ்வளவு பரந்த முறையில் நம்மைச் சுற்றிலுமிருக்கும் பொருட்களும் காட்சி தருகின்றன.

போதுமான உள்ளுணர்வு ஏற்பட்டவுடனே, மனிதனுக்கு, சம்பாதிப்பதிலும், அவற்றைக் காப்பாற்றுவதிலும், பெற்றுக்கொள்வதிலும் வைத்திருப்பதிலும், சாப்பிடுவதிலும், வீணைக்குவதிலும், தூங்குவதிலும் மக்கட் சந்ததிகளைப் பெருக்குவதிலும், வளர்ச்சியிலும், இறப்பதிலும் வெறுப்புற்று வாழ்க்கையில் இதுவல்லாத உயர்ந்த தத்துவம் அல்லது பொருளைக் கண்டுபிடிக்க முயல்கின்றான். அவன் தன் வீட்டின் சுவர்களையும் கடந்துகாணும் சக்தியைப் பெறுகின்றான். அவனுடைய ஊரிலுள்ள தெருக்களைக் கடந்தும், ஒரு குறிப்பிட்ட எல்லையைக் கடந்தும், இல்லை தனது சொந்த நாட்டின் கடைசி எல்லையையும் கடந்து ஒரு மங்களமான பார்வையால் இவ்வுலக முழுதும் உள்ள வாழ்க்கையை உணர்கின்றான். உள்முக நாட்டம் அதிகரிக்கும் போது நுட்பத் தன்மையுள்ள உணர்வுகளும் அதிகரிக்கின்றன. மேலும் சாதாரணமக்கள் வாழ்க்கையையே யன்றி உலகத்திலுள்ள தாவர வர்க்கம் உயிர் வர்க்கம் ஆகிய எல்லா

தோற்றப்பொருள்களையும் சோதனை செய்யும் தன்மையும் ஏற்பட்டுவிடுகின்றது.

நுட்பமான மனத்தின் உலகப் பொது நோக்கு ஒரு சாதகன் அல்லது பூர்ண புலவளர்ச்சி பெற்ற மனிதனை முழு வாழ்க்கையைப் பற்றி பொதுவாக சோதிக்கத் தூண்டுகின்றது. அவன் உணர்வெழுந்து பகுத்துப் பார்க்கையில் அவன் மூன்றுவித கவர்ச்சிமிக்க நிலைகளைக் காண்கின்றான். அவைகளின் மீதே ஜீவயாத்திரை நடைபெறுகின்றது. ஒரு சமயம் முடிவில்லாத உயிரினங்கள் பெருகிவருவதும் சிறிது காலம் பொறுத்து இருந்து மரணமென்னும் பெயரால் இறப்பதும் பார்க்கப் படுகின்றது. ஆன்மீக ஒருமைபாட்டு வழிகளில் தூய்மை பெற்ற ஒரு அறிவாளி தன் உச்சநிலையில் இருந்து இந்த வாழ்க்கையில் நேரும் துன்பங்களையும் தொல்லைகளையும் மக்கள்படும் கஷ்ட சுகங்களையும் கண்டு கலங்கி மயங்கி திணறித் தடுமாறுகின்றான்.

தன் சுயதடுமாற்ற நிலையில் அவன் தன்னால் வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்க்க முடியாதெனக் கருதி,

> ஒளியின் செலவே மானிட வாழ்க்கை
> இருளில் இருந்தே ஒளியிற் செல்லும்
> ஒளியில் இருந்தே இருளைச் சாரும்
> ஒருகால் இன்பம் மறுகால் துன்பம். —*R. H. Stoddard*

என்ற தன் முந்திய முடிவுகளைப்பற்றி மீண்டும் நெருங்கி ஆராய்கின்றான்.

வாழ்க்கை இவ்வாறு, பொருளற்ற பைத்தியக் காரத்தனமானால், அவ் வாழ்க்கையில் நாம் எல்லோரும் துன்பப்பாட்டையே பாடவேண்டும். அறிவீனத்திலிருந்து நழுவி கருவிலிருந்து கல்லறைக்குச் செல்லும் ஜீவயாத்திரையை முடிக்கவேண்டும் அப்போது இயற்கை தன் இயல்பு மாறி அபாயகரமான பைத்தியக்காரத் தனமுடையதாகக் கருதப்படும். இவ்வுலக படைப்

பின் மூலம் மக்கள் அர்த்தமற்ற விஷயங்களாய் ஒழுங் கற்று மயக்க தயக்கங்களுக்கு, சண்டை சச்சரவுகளுக்கு உட்படுத்தி முடிவில் நம்மெல்லோரையும் மயானத்திற்கு செலுத்துமேயானால், இந்தப் படைப்பின் கர்த்தாவாகிய இறைவனுக்கு இது ஒரு வீண்வேலையென்றே சொல்ல வேண்டும்.

இவ்விதமாக ஒரு திகைப்புற்ற அறிவாளி தீர்மானித் தால், அது அறிவற்ற ஒருவனின் தீர்மானப்படி தன் னுடைய அஜாக்கிரதையால் நேர்ந்த அபாய நிகழ்ச்சியின் உதாரணத்தை போன்றதாகும். ஆனால் இந்தவிதமான சிக்கலான விஷயங்களை ஆராய்ந்தால், ஆழ்ந்து ஒப்புக் கொள்ளும் விதமாகக்கண்டால், அது நமமுடைய நன் மைக்காகவும் சுய இடத்திற்காகவும் இருப்பதை உணர லாம். அப்படி செய்யும்போது இந்த நவீன காலத்துக் குழந்தைகளாகிய நாம, நமது இக்கால விஞ்ஞான ரீதியாக, நமது ரிஷிகளால் கொடுக்கடபட்ட முறைகளிலிருந்து நம் முடைய உள்முக பழச்சிகளைத் தாராளமாகப் பெறக் கூடும்.

சார்லஸ் டார்வின் என்னும் உயிர்வர்க்க நிர்ணய பேராசிரியர் தம்முடைய காலத்தில் துணிச்சலுடன் ஆராய்ந்து வாழ்க்கைக்கான ஒரு விளக்கத்தைத் தர முயன்றார். அவர் கருத்துப்படி, புதியதாகப் பிறந்த உலகத்தின் மயக்கத்திலும் ஆரவாரத்திலும உயிர்களின் வாழ்வு தொடங்குகின்றது. நீர் நிலைகளின் ஓரங்களில் காணபபடும் துணையான பூண்டின் உறுப்புகளைப் போன்றது. அவைகள் தாமாகவே பெருகி வளர்ந்து தமக்குள் தாமே அறியமுடியாத கலக்கத்தை உண்டாக்கிக் கொண்டன. மேலும் இந்த உடலமைப்பு சிறுகச் சிறுக வாழ்க்கையின் விளக்கம் மிகவும் நுட்பத் தன்மை அறிவும் பெற்றதாக ஆகும். அந்தவிதமான வளர்ச்சிமுறை மனிதனுடன் முழுவளர்ச்சியும் அறிவாற்றல்களுடன் முடி

கின்றது. இந்த தத்துவத்தைக் காண்பதற்குப் பேராசிரிய ரான டார்வின் தம் ஆராய்ச்சிகளுக்கு புதைபொருட் களையும், பொருட்காக்ஷிசாலைகளில் வைத்துள்ளாரிரிப் பொருட்களையும் அடிப்படையாகச் சொல்கின்றார். மேற் கூறியவைகளை யெல்லாம் ஒரு மைக்ராஸ் கோப்பின் வழியாக வாழ்க்கையைப் பார்த்தறிந்து இம்முடிவிற்கு வந்துள்ளார். இது நமது முன்னோர்களும் ஒத்துக் கொள்ளக்கூடியதே. வர்க்கத்தில் மனித உருவம் ஒன்றே முற்றிய வடிவம் என்பது வெளிப்படையாகும். ஆனால் ஆசிரியர் டார்வின் கொள்கையோ பரிணமத்தினால் வரும் ஓர் உச்சநிலை மனிதனுக்கு உண்டு என வலியுறுத்த வில்லை. ஆனால் மனிதன் சிறந்ததும் மிகப் பெரியதுமான ஒரு நிலையை இனித்தான் அடையவேண்டும் என்கிறார்.

நமது ரிக்ஷிகள் இந்த தெய்வீகத் தன்மை இந்த ஜீவி யத்திலேயே தியானம், மனோ ஒருமைப்பாடு இவைகளின் மூலம் அடையக்கூடும் என்று சொல்கின்றனர். அவர் களுடைய பார்வையில், உண்மை அல்லது நித்தியப் பொருள் ஒன்றேயென்றும் அது எங்கும் நிறைந்துள்ள தென்றும் கருதப்படுகின்றது. அவர்கள் வாழ்க்கையின் அடிப்படையிலிருந்தே உலகமாகிய இயற்கையின் எல்லாப் பொருள்களையும் அறியவேண்டும் என்கின்றனர். இவ்வித மாக அவர்கள் வாழ்க்கையை அலசி ஆராய்ந்து அவர்கள் கண்டுபிடித்தது ஜீவன்களின் எல்லா நிலைகளிலும், பொருட்களிலும் உயிர் அல்லது உண்மை பல்வேறு மொழிகளில் பல்வேறு தரங்களில் தன்னைத்தானே தெரி வித்துக்கொள்கின்றது. இவர்கள் தெரிவித்துக்கொள் ளும் இந்த அடிப்படைமீது நாமரூப பேதங்களுடன் அமைக்கப்பட்ட உலகத்துள்ள அனைத்தும் நான்கு பிரிவுக் குள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை (1) அசைதலில்லாத கல்லின் வாழ்க்கை (2) செடிகொடிகளின் வாழ்க்கை, (3) விலங்கின் வாழ்க்கை. (4) மனித வாழ்க்கை என்பன

வாகும். இந்த நான்கு வகையான நிலைகளுள்ள வாழ்க்கையில் அவற்றின் விளக்கங்களைக் காண விழைந்தனர்.

இந்தவிதமாக ரிஷிகள், கல்லானது தன் அசையாமையைத் தெரிவிப்பதையும், செடிகொடிகள் அவை வளர்ச்சி முறைகளால் வெளியுலகத்தை அறிவதைப் போலக் காணப்படுவதையும், விலங்கு வாழ்க்கையில் இன்னும் அதிகமாக தமக்குள்ளும் வெளியும் நிகழும் சம்பவங்களை அறிவதிலும் உண்மைப் பொருளைக் கண்டார்கள். ஆனால் மனிதன் தனக்கு அமையப் பெற்றுள்ள நுட்ப சாதனங்களின் மூலம் மிகப் பரந்த அளவில் வெளியுலகத்தையும் அதுவே போன்று தன் உள்ளிலேயும் உணரக் காண்கின்றோம்.

இவ்வண்ணம் நாம் இயற்கையை உணர்ந்து பார்க்கும் போது, கணக்கில்லாத நாமரூபங்களுக்குக் கீழே அடைய வேண்டிய பொருட்களைப் பற்றிய மயக்கமும் அவிழ்க்க முடியாத வாழ்க்கைச் சிக்கல்களும், தலை தூக்கி நிற்பதாக அறிகின்றோம். ஆகையால் இந்த திட்டத்தை முடிப்பதற்கு நமக்கு வாழ்க்கையில் ஒரு பெரிய நோக்கம் குறிக்கோள் வேண்டும். ஒரு கீழ்ப்பட்ட நிலையிலிருந்து உயர் நிலையிலிருக்கும் மகான்கள் வரைக்கும் ஒவ்வொரு நிலையிலும் அறியவேண்டியவற்றை அறிவதற்கான அறிவு முற்றிய விழிப்பு நிலை யொன்றை நாம் காண்கின்றோம். ஆகையால், அதை அதனுள் காண்பதற்கு முடியுமானால் அது அமைதியான, குறைபாடு இல்லாத தெய்வீக கவர்ச்சிகரமான சக்தியைக் கொண்டதாகும். அது வாழ்க்கையின் லட்சியமாகும். இந்த முறையில் நமது மனமும் புத்தியும், உடலும் அதன் பொருட்களும், தன் நிஜஸ்திதியைக் கண்டுபிடிப்பதற்காக வெளியாக்கப் படவேண்டும். வாழ்க்கையின் துன்பங்களுக்கிடையே நாம் இருப்பதை யுணர்ந்து நமது தூய பிரக்ஞை நிலையை சீராய் அறியவேண்டும். நமது சக்தியின் வரம்பு, உல

கத்தின் குறைபாடுகள், ஆகிய இவைகளெல்லாம் நமது குறிக்கோளை நாம் சீக்கிரமாக அடைவதற்கு தூண்டும ஒரு கருவிகளாக இருக்கின்றன.

எவ்வளவுக் கெவ்வளவு நாம வெளியுலக சுகங்களில் ஈடுபடுகின்றேமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் அதிகமாய்த் துன்பங்களை அனுபவிக்கிறேம. அவற்றினின்று விலகி சரியான வழியில் செல்லும்போது நாம எவ்விதப் பற்றுதலுமின்றி நம் உண்மை ஸ்திதியாகிய தூய்மையான நித்தியத்துவத்தை அடைகிறேம்.

உடலைப்பார்க்கும் போது நாம் ஒன்றிலிருந்து மற்றென்று வேறுபட்டே இருக்கக் காண்கிறேம். உலகத்தில் மிகப்பெரிய சக்தியில் இணைந்து தன்னை தானே அறிவித்துக்கொள்வதையும் காண்கின்றேம். ஆனல் நமது மனமெனனும ஜன்னல்களின் மூலம் பார்க்குமபோது நாம் ஒரு ஒற்றுமை—ஒன்றுந்தன்மை உலகத்தில் இருக்கக் காணலாம. நோயுற்று வருந்தும் குழந்தைக்காக தாய்படும் துன்பம்—தாய் உளளம் எங்கும் ஒரேவிதமாக இருக்கின்றது. அது மிருகங்களிலானலும் அல்லது மேல் நாடுகளில் அல்லது கிழ நாடுகளிலானலும தாயுள்ளம் ஒரே தன்மையதாம. இதனின்று இன்னும் சிறிது நுட்பமாக சென்று அறிவுக்கண் கொண்டு பார்க்கும்போது மேலும் ஒற்றுமைக்காக இணைப்பான ஒன்றுந் தன்மையை உணரலாம். இந்த தற்கால உலக விவகாரப்போக்குகளில் பொருளாதாரம, சண்டை சச்சரவுகள் முதலியவைகள் இத்தலைமுறையினரை மேலும் ஒற்றுமைக்கு அறிவுக் கண் கொண்டு பார்க்குமாறு அறிவுறுத்துகின்றது.

நானுவித உணர்ச்சிகள்—நமது கருத்துப்படி முன்னேற்ற சேர்க்கையில் ஒன்றுபடுமானல் மேலும் நுட்பமாய் உள்ள போர்வைகளான தன்மைகளிலிருந்து பார்க்கும போது அது நம்மை இன்னலுறச் செய்யும் துன்பஙகளைத்

துன்பங்களாகக் கருதாது—விலக்கி, எங்கும் நிறைந்த தெய்வீக ஒருமைப்பாட்டில் ஒன்றச் செய்து அன்பும் அறமும் நிறைந்த இன்பமயமான வாழ்க்கையில் செலுத்தும் என்பதில் ஐயம் வேண்டியதில்லை.

வாழ்க்கை ஒன்றே. ஒரு உயிர் ஜீவித்திருப்பதாக நான் உணருவது எப்பொழுதெனில் அது வெளியுலகத்தையும், தன்னுள் உலகத்தையும் அறியும் நிலையிலேதான். எந்த க்ஷணம் அது வெளி அனுபவங்களையோ உள் அனுபவங்களையோ அறிவதை நிறுத்துகின்றதோ அப்போது அது இறந்துவிட்டதாகக் கருதுகிறோம். ஆகையால் எந்த நிலையிலாயினும் அளவிலாயினும் அனுபவிக்கும் பொருளாயிருக்கும் ஜீவஓட்டம் வெவ்வேறு இடத்தில் வெவ்வேறு நிலைகளிலிருந்தாலும் அந்த ஒன்றுஇல்லாது வேறு எதுவும் இருக்க முடியாது என்று உணர்கிறோம். மனத்தூய்மை எவ்வளவு இருக்கின்றதோ எவ்வளவு மனக் கலக்கங்கள் குறைந்திருக்கின்றதோ அவ்வளவுக்கு இறை நிலையாகிய உயிர் உள்ளீடு பொருள் வன்மை பெற்று விளங்கும். அந்தப் பொருளிலேயே ஒரு தீர்க்கதரிசி, ஒரு சந்நியாசி, அல்லது சாது தனது அன்பால் தூண்டப் பட்டு உலக உயிர்களை தன்னுள் இணைந்து கொள்கின்றார்.

அப்போது அவர் உள்ளுணர்ச்சி பெருக்கில் ஒன்றி வாழும் உணர்வுடன் பழகும் வாழ்க்கை மேற்கொள்கிறார். அவர் ஒரு தெய்வ மனிதன், அவர் நிலை சாதாரண மனித நிலையைவிட உயர்ந்ததாகும், அத்தகைய மனிதனே கிருஷ்ணன், கிருஸ்து, மகமத் அல்லது மகாதேவன், புத்தர், சங்கரர் அல்லது விவேகானந்தர் அல்லது தயானந்தர், ரமணர் அல்லது அரவிந்தர் என்று சொல்லப் படுவர். அவர்களே உலகத்தில் ஒவ்வொரு காலத்தில் உற்பவித்து அந்த தலைமுறையில் இருந்த மக்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாக இருந்துள்ளனர்.

அவர்களுடைய அன்புமயமான மாந்திரீக சக்தியால் அவர்களுடைய அறிவு நுட்பமும் பலமும் கொண்டு மக்களிடையுள்ள மிருகத்தன்மையைப் போக்கி ஜனசமூகம் முழுவதையும் உயர்ந்த நிலைக்கு ஒருவர்க்கொருவர் அன்பாகவும் அறிவாக உணர்ந்து அமைதியாக ஒன்றி ஒழுங்குமாறு செய்கின்றனர்.

வேதம்-வாழ்க்கை விஞ்ஞானம்

நாம் இதுவரை மனமும் புத்தியும முன்சொன்ன நான்கு வழிகளிலே கலந்து ஒன்றுனல் மேன் மேலும் விழிப்பு நிலையும் எதனையும் தெரிந்தறியும் நுட்பமும் ஏற்படும் என்று கண்டோம். இந்த புதிய பார்வையில் அவர்கள் வாழ்க்கையை மதித்து சோதித்தபோது அவர்கள் முழுதும் அதிருப்தி அடைந்து, மேலும் தெய்வீகத் தன்மையும் தூய்மையும் கொண்ட வாழ்க்கைக்காக ஆர்வமுற்றுர்கள். ஹிந்து சாஸ்திரங்களின் மூலம இவ்வாறு காணப்படும் அதிருப்திகரமான விஷயங்கள் கிறிஸ்துவ பிரசாரர்களுக்கு நமது சாஸ்திரங்களைக் கண்டிக்க ஒரு வாய்ப்பாக இருக்கின்றது. இவர்களைப் பார்த்த ஒரு அறிவாளியான ஹிந்து மாணவன் இவர்கள் அறியாமைக்கு இரங்கி பரிதாபப்பட வேண்டியிருக்கின்றது.

இந்த அதிருப்தி நமது முனனேற்றத்தை தடுக்கவில்லை. அது மேலும நமது பொறுமையும ஆன்மிகத்

தூண்டல்களையும் பெற்று வளர்ச்சியையே தருகின்றன. இந்த தற்கால குறைபாடுகளை உணராதிருந்தால், இன் இன்னும் உயர்ந்த நிலைக்கு நம் வாழ்வில் நாம் வளரமுடியாது. குறைபாடுகளைக் காணும்போதே அதன் உச்சநிலை அறுவதற்காக ஒவ்வொரு தலைமுறையிலும் புரட்சிகள் ஏற்படுகின்றன. அப்போது தூய்மையானதும் சிறந்ததுமான திட்டங்களைக்கொண்ட மார்க்கம் தலைதூக்குகின்றது. தற்கால குறைபாடுகளை வற்புறுத்தும் ஒரு வாசா ஞான அறிவாளியாலோ அன்றி உயர்ந்த திட்டங்களை வெளிபடுத்துவார்களோ ஒரு புரட்சியை உண்டுபண்ண முடியாது. ஆனால், அந்தப் புரட்சிக்கு கட்டுப்பாடான திட்டம் ஆதரவும் அறிவும் சமமாக அறிவுறுத்தப்படுதல் வேண்டும்.

தனித்தனியாக ஒவ்வொன்றும் சிறந்ததே. ஆனால் அவை இரண்டும் ஒன்றுபடும் போது அவை தற்கால நிலையிலிருந்து விளக்கமான முன்னேற்ற பாதைக்கு சிறந்ததாக அமையும். ஆகையால் எப்பொழுதாவது சாஸ்திரங்கள், வாழ்க்கையிலுள்ள குறைபாடுகளைக் களைந்து செம்மையான வாழ்க்கையை மனம், புத்தி, அறிவு ஆற்றல்களுடன் மேற்கொள்ளுமாறு வற்புறுத்துமானால் அது தற்கால அநாகரிக குறைபாடுகளின் விளைவாகவே இருக்கும். தெய்வீக உணர்வுகளைக்கொண்டு சிறந்த வாழ்வு நடத்துமாறு ஆணையிடும்போது ரிஷிகள் அதற்கு ஏற்ற ஒருதிட்டத்தை மக்களிடையே பரப்பி அதைக் கைக்கொண்டு ஒழுகி அனுபவிக்கச் செய்வார்கள்.

அத்தகைய ஒருமைப்பாடுடைய மனிதர்கள் வாழ்க்கையில் பெரிய காரணத்தைக் கருதி சமூகத்தில் எப்பொழுதும் இருந்து மக்களுடைய குறிக்கோளுக்கு உதவ பாடுபடுவார்கள்..எந்த சமூகத்திலாயினும, எந்தக் காலத்திலாயினும், மதத்தைப் பற்றி பொதுவான அதிருப்தி

மக்களிடை ஏற்பட்டால் அது அந்த மதத்தை இழிவு செய்ததாகாது; அது அந்தக் காலத்து மக்கள் மேற்கொண்டுள்ள மிருகத்தன்மைகளிலும், இழிவான முறைகளிலும் மக்கள் சென்று ஆழ்ந்துள்ளதை வெளிப்படுத்தும் செயல்களாகவே கருதப்படுதல் வேண்டும். நான் கூட மதம் அவசியமில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன். அதை மேற்கொள்ள வற்புறுத்தப்பட்டால் தொல்லைகளும் பல இடையூறுகளையும் விளைவிக்கும்— மிருகங்களுக்குள். பைபிள் உலகத்துள்ள எருமைகளுக்கு பாட புத்தகமாக இல்லை, குர்ஆன் புலிகளுக்குப் போதிக்கப்படாது. வேதங்கள் கரப்பான் பூச்சிகளுக்கு இரையாக்கலாகாது.

ஆகையால், வாழ்க்கை விஞ்ஞானமாகிய வேதங்கள் முதலில் விஞ்ஞான ரீதியில் செம்மையான ஆன்மைப்பாட்டிற்கு ஏற்ற ஒரு திட்டம் கொண்டு சமூக மக்கள் முன்னேற்றத்திற்குப் போதிக்கின்றது. அதன் பிறகு அவ்வாறு முழுதும் ஒன்றி வாழுவோருக்கு உதவுமாறு உயர் ஆன்ம ஞானத்தை மற்ற எவரும் சொல்லமுடியாத வகையில் தன்னைப்புனிதத்தன்மையில் வைக்க போதிக்கின்றது. சாஸ்திரம் அறிவு சார்ந்த மனிதனுக்கு தன் ஆன்மவிருத்தியில் தானே உழைத்து முன்னேறச் செய்வதற்காக கொடுக்கப்படும் அழைப்புப் பத்திரமாகும்.

ஒரு தனி மனிதன் அல்லது தீர்க்கதரிசியால் ஒரு காலத்தில் ஒருதரமான மக்களுக்கு அக்காலத்து கருத்துக்களில் வெளியிடப்பட்ட ஒரு தலையான கோட்பாடுகளைக் கொண்ட கிறிஸ்துவம், இஸ்லாம், பௌத்தம், ஜைனம் போல அல்லாமல் ஹிந்துமதம் தலைமுறை தலைமுறையாக வரும் சிறந்த ஆசிரியர்களாகும். தீர்க்கதரிசிகள், முனிவர்கள் முதலியவர்களால் தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்ட வாழ்க்கை விஞ்ஞானம் கொண்டதாகும்.

ஹிந்துமதத்தினுள் பல மேதாவிகளும் ரிஷிகளும் தோன்றியிருப்பது இம் மதத்திற்கே பலவீனமென்று கருதுவது அவசர மந்தர அறிவிலிகளாகிய ஒருசிலரின் செயலாக இருக்கும். இந்தவிதமான கண்டனத்தை ஒரு பைத்தியம் பிடித்த ஆவேசக்காரன் அல்லது அரசியல் சரித்திர ஆராய்ச்சியாளன் சொல்லியிருந்தால் அதை நாம் பாராட்டமாட்டாது நகைப்போம். ஆனால் இக்காலத்தில் இதை முழுதும் நம்புவோர்களும், உண்மையான நாகரிகக் குழந்தைகளுமான இந்த எண்ணங்களை ஏற்கவில்லை. இந்த சந்தேகம் அவர்களுக்கு ஏன் உண்டாகின்றதென்றால் அவர்கள் ஹிந்துமதத்தினுள் நுழையும்போது அது உலக மதம் மென்னும் உண்மையை மறந்துவிடுகின்றார்கள். பல வருஷங்களாய்ச் சிறிய கூட்டினுள் அடைப்பட்டிருந்த ஒரு பறவை திடீரென திறக்கப்பட்டு பரந்த வேளியான ஆகாயத்தில் பறக்கும்போது கொள்ளும் எண்ணத்தைப் போன்றதாகும். சாக்கடைகளினின்றும், குகைகளினின்றும் வெளிவரும் ஒருதலை பக்ஷமான மத போதனைகளினின்று வெளிவந்து பரந்து விரிந்த இடத்தைக் கொண்ட இந்துமதத்தில் ஒருவன் நடக்க முற்படும்போது இத்தகைய தடுமாற்றம் உண்டாவது சகஜமாகும். ஒரு குறுகிய காலத்தில் குறித்த இடத்தில் உதித்து குறித்த தலைமுறையினர்க்கு போதிக்கும் ஒரு தலைவரின் போதனையை சிறிது மௌனமாய் நினைத்து பார்க்கும் எந்த மந்த மனிதர்க்கும் அது திருப்திகரமானது அல்லவெனத் தெரியவரும்.

உதாரணமாக, நண்பர்களே ! பௌதிக சாஸ்திரத்துக்கு யார் கர்த்தாவென்று சொல்வீர்களா? அல்லது இரசாயன சாஸ்திரத்துக்கு யார் பொறுப்பு எனச் சொல்வீர்களா ? ஜீவ வர்க்க நிர்ணய சாஸ்திரங்கள் ஒரு ஜெர்மானியரால் வெளியிடப்பட்டதென்றால் அது ஒப்புக் கொள்ளப்படுமா ? அல்லது உடற் கூறுகளை கூறும்

சாஸ்திரம் ஒரு அமெரிக்கரின் தனி மூளையிலிருந்து வெளிப்பட்டதென்றால் சரியாகுமா? மேற்குறித்தவைக ளெல்லாம் குறைபாடுள்ள முட்டாளதனமான அறிவின் மையைக் குறிக்கின்றதல்லவா? குறித்த சில சாதனை கள் அல்லது விஞ்ஞான சாஸ்திரம் முதலியவை குறிப்பிட்ட ஒரு தனி மனிதனுடைய வேலையாய் இருக் காது. இந்த விஷயத்தை மனத்திற்கொண்டு பார்க்கும போது வேத சாஸ்திரங்கள் பல மேதாவிகளால், தீர்க்க தரிசிகளால் கண்டுபிடிக்கப்பட்ட 'விஞ்ஞான நூல்களாக விளங்குகின்றன. ஒருவரும் எதிர்வாத முறையில் அணுகி ஆராய சந்தர்ப்பம் தரப்படாத ஒரு தலைவரால் வெளி யிடப்பட்ட கருத்துக்களடங்கிய இதர நூல்களைப் போல அல்லாது நமது வேத நூல்கள் அவ்வளவு பரந்து விரிந்த பரவம் கொண்டிருக்கின்றன.

ஹிந்து சாஸ்திரக் கருத்துக்களை அறிந்தவர்களும் அவைகளை உண்மையாக அறிய முயன்றவர்களும் இந்து மத சாஸ்திரங்களில் சொல்லியிருப்பன எவ்வளவு சரி யான கருத்துக்களென்பதை தயக்கமின்றி ஒத்துக்கொள் வார்கள்.

வாழ்க்கைக்கும் வழிபாட்டிற்கும் உதவாதுபோனால் அந்த மதம் இறந்துபோனதாக முன்னமே அறிந்துள் ளோம். சமூகம் மிக்க ஆன்மீக கவர்ச்சியுடையது; அது உண்மையாக ஒரு மதத்தை ஏற்கவேண்டுமானால் அதில் சொல்லப்பட்டவை அக்காலத்து மக்களின் எல்லா குறைகளுக்கும தக்கப் பரிகாரம் சொல்லியிருக்க வேண்டும். வேதநூல்கள், மதம் எவ்வாறு ஒவ்வொரு காலத்திலும் ஏற்பட்ட பல்வேறு புரட்சிகளால் உரு மாறி வந்திருக்கின்றது என விளக்கமாய் தெரிவிக் கின்றன.

இங்குமங்கும் திரிந்து வந்த ஆரியர்கள் ஆப்கானிஸ்தானத்திற்கு வந்து, வடமேற்கு எல்லையைத் தாண்டி, தக்ஷிணத்தையும் கடந்து கங்கா நதியின் செழிப்பான சமவெளியை அடைந்து அவர்கள் அங்கு குடியேறி தம் வளர்ச்சியை அகமும் புறமும் செய்துகொண்டார்கள்.

வடதுருவத்தில் உள்ளவர்கள் பனிமூடிய வெளிகளின் அழகிலும், புல்படுக்கைபோன்று தோன்றும் மேய்ச்சல் தரைகளையும் கண்டு வியந்து ஆனந்தப்பட்டார்கள் என்று பார்த்த அளவில் சொல்ல முடியாது. ஆதியில் குடியேறிய ஆரியர்கள் அநேகமாக சரித்திரக்காலத் துவக்கத்தில் இயற்கையான எளிய வாழ்வில் இருந்துகொண்டு அதுவரை பயிர்செய்யப்படாத ஆச்சரியம்தரத்தக்க அழகிய பண்பாடுள்ள நிலத்தின் அழகிலும், ஒலி பெருக்கிச் செல்லும் நதிகளையும், கம்பீரமான காடுகளின் செழிப்பையும் கண்டு அதில் ஆழ்ந்துவிட்டனர். தங்களைச் சுற்றியுமுள்ள அழகால் போஷிக்கப்பட்ட இந்த ஆரிய முன்னோர்கள் அவர்களுக்குள்ளேயே தடுக்கமுடியாத தூண்டுதல்களால் உதயத்தின் காட்சியைப் பற்றி கவிதைகளைப் புனையத் தக்க பழக்கத்தைப் பெற்றனர்கள். ஓடைகளும் அருவிகளும் செய்யும் ஒலியும், கங்கையின் முழக்கமும் பிரம்மாண்டமான இமயமலைச்சாரலிலுள்ள காடுகளில் இலைகளின் சலசலப்பும் சாதகமான பருவமழை முதலியனவும் எங்கெங்கும் அவர்களைச் சுற்றி அழகின் பிம்பங்களாக காட்சி கொடுத்து இன்பத்தில் ஆழ்த்தின. இருதயத்திற்கு உணர்ச்சிகள் பெருகி இனிமையாக பாடவும் ஆடவும் செய்தன. இவ்வழகின் கவர்ச்சி அவர்களை, இவ்வழகினை துதிபாடல்களாகவும், இயற்கைப்பாடல்களாகவும் பாடச்செய்தது.

இயற்கையின் அழகிலும் பலத்திலும் அவர்கள் நாமரூப மற்ற ஒரு தெய்வீகச் சக்தி பொதிந்துள்ளதை அவர்

கள் கண்டார்கள். அதுவே உலகத்திலுள்ள அனைத்தை யும் ஒழுங்காகவும் திட்டமாய் இயங்குமாறு ஆணையிட்டுக் கொண்டு இருப்பதாகவும் கண்டார்கள். இந்தப் போாற் றல் அவர்களுக்குப் பேருதவியாகவும் பேரன்பாகவும் கொண்டார்கள். இந்த சமயத்தில் இன்பமும் மகிழ்ச்சி யும் கலந்த நாட்களில் மெல்ல மெல்ல துன்பமும் தொடரத் தலைப்பட்டது. பிரஜோற்பத்தி, மழையின்மை முதலிய இடக்குகள் கவிதை வாழ்க்கையிலிருந்த அவர்களை துன் பத்தில் ஆழ்த்தின. ஐரோப்பிய சரித்திரம் தொடங்கிய நைல் நதி பள்ளத்தாக்கில் குடியேறிய ஆரியர்கள் கூட நிலத்தை உழுது பயிர்செய்யும் வழிகளைக் கண்டுபிடித் தார்கள். பயிர்செய்யும் பல முறைகளையும் கைக்கொண் டார்கள். அதன் பயனாக அந்த நிலங்களின் உரிமையை யும் கொண்டாடத்தொடங்கினர்.

வாழ்க்கையில் போட்டி ஏற்பட்டவுடன் மனிதன் தீவிரமாக உழைத்து வெற்றியைக்கண்டான். எல்லா சுய உழைப்பிலும் உலகமெங்கும் எல்லா காலங்களிலும் பிறரால் மறுக்கப்படாத எவ்வளவு உயர்ந்த திட்டமாய் அவைகள் இருந்தாலும் எதிர்பாராத சில காரணங்களால் இன்ன இடத்திலிருந்து இடையூறுகள் வந்தன என்று அறியமுடியாமல் மனித முயற்சிகளின் வெற்றிக்குப் பங்கம் வருகின்றது. ருஷ்யா தேசத்திலுள்ள சதுப்பு நிலமும் அகால மழையும் நெப்போலியனது பெரு வெற்றியையும் அவனுடைய வெற்றிமிக்க சேனையையும் அழித்துவிடக் கூடுமல்லவா ?

அத்தகைய சமயங்களில் சமூகத்திலிருக்கும் யோக் கியர்களான வீரர்களின் வாழ்க்கையின் இன்ப துன்பங் களை யொட்டி அவர்களுடைய் உடல் உழைப்பு இயற்கை

யன்னையின் சக்திகளால் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென் பதற்கான உறுதிமொழியைப் பெற விரும்பினார்கள். அவர்கள் சகஜமாகவும் சாந்த முறையிலும் இந்நிலையி லுள்ள ஹிந்து சமூகத்தை வாழ்விக்கவேண்டும் என்றும் எப்பொழுதும் தங்கள் பக்கத்தில் இருந்து உடல் உழைப் புக்கு பயன்தர வேண்டும் என்றும் இயற்கைப் பின்புள்ள இறைவனைத் துதிக்கத் தலைப்பட்டனர்.

உடனே அப் பெருஞ்சக்தி உலக மாறுபாடுகளின் மூலமாக பலவகையான பெயர்களைப் பெற்று பௌதிக சாஸ்திரத்திலுள்ள ஒரு சக்தி 'ஒளி'யென்றும், 'உஷ் ணம்' என்றும் 'மின்சாரம்' என்றும் அழைப்பதைப் போன்று நம்முடைய வேதங்களில் வாயு, வருணன், அக்னி, யமன் என்று பல கடவுள்களைக் காண்கின்றோம். அவர் களைத் தூண்டுவதற்காக விஞ்ஞான முறையில் மனோதர்ம சடங்கு முறைகள் கற்பிக்கப்பட்டன. அவைகளை விவர மாக " பிராம்மணம் " பகுதியில் காணலாம்.

இயற்கையை முதன் முதலில் அணுகிய அந்த ஆதி குடியினரின் இருதயங்களிலிருந்து வெளிவந்த மக்கள் வேதங்களின் மந்திரப்பகுதியாக கோக்கப்பட்டனர். சடங்குகளின் விளக்கங்களை " பிராம்மணம் " என்னும் தலைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. " பிராம்மணங்கள் " கற்பிக்கப்பட்டபோது மந்திரங்களுக்கு எதிர்ப்பாக ஒரு சிறு பூசல் அல்லது சிறு சச்சரவும் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது அழிப்பதற்கான குழப்பமாய் ஆகாமல் நல்ல முறையில் வளர்வதற்கான ஆக்க முறைக்கே பெருத்த துணையாக இருந்ததெனலாம். வேதங்கள் பிராம்மணங்களாய் கொண்டுவந்தபோது தான் மந்திரத்திலுள்ள சிறந்த பகுதிகள் தொகுக்கப்பட் டுள்ளன.

ஒரு காலத்தில் சாதாரண மனிதனுக்கோ அன்றி தியானத்திலே ஈடுபட்டுள்ளவனுக்கோ கிடைக்கக்கூடாத வாறு சிக்கல்களையும் மயக்கத்தையும்கொண்டு இருந்தன. ஆகையால், மீண்டும் ஒரு புரட்சிக்குத் தயாராய் சக்திகள் சேர்க்கப்படுவதைக் காண்கின்றோம். அதற்காகவே வேதங்களின் கடைசி பகுதியாகிய உபநிஷதங்கள் நம் முடன் இருக்கின்றன. அந்த வேதநூல்களை வியாசமா முனிவர் சேகரித்து, ருக், யஜுர், சாம, அதர்வணம் ஆகிய நான்கு வகையாகப் பிரித்து வைத்துள்ளார். ஒவ்வொரு நூலும் வியாசரின் திறமை மிக்க விஞ்ஞான ஞானத்தால் பகுத்து மூன்று தொகுதிகளாக வகுத்து ஒழுங்குபடுத்தப் பெற்றுள்ளன. அவை மந்திரங்கள், பிராம்மணங்கள், உபநிஷதங்கள் என்பனவாம்.

இந்தவிதமாக நான்கு வேதங்களிலும் நமக்கு உபநிஷ தங்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட பிராம்மணம் குறிப் பிட்ட வேதத்தில் காண்பதைப் போலவும் ஒவ்வொரு வேதத்திலும் காணும் மந்திரப் பகுதியைப் போலவும் ஆகும். இந்த உபநிஷதப் பகுதிகள் நான்கு வேதங்களி லிருந்தும் சேகரித்துப் பார்க்கும்போது அவை முழு வேதாந்தக் கருத்துக்களுக்கும் அடிப்படையான சாஸ் திரங்களின் பிரதிநிதியாக இருக்கின்றன. நான் துணிந்து சொல்கிறேன். அந்த உபநிஷதங்கள் வாழ்க்கைக் கான உண்மை இருந்து நாகரிகத்துக்கேயல்லாமல், எல் லாக் காலங்களிலும் எல்லா தீர்க்க தரிசிகளும் எந்த சமயத்திலும் போதித்த போதனைகளுக்காக அவ்வளவு விரிந்து பரந்த முறையில் விளக்கப்பட்டிருப்பதை உபநிஷ தங்களில் காணலாம்.

இந்தவிதமாக ஏறக்குறைய 283 உபநிஷதங்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவைகளில்

108 உபநிஷதங்கள் வைதீகர்களால் ஒப்புக்கொள்ளப்படு கின்றன. அவைகளில் 11 உபநிஷதங்களே மிகவும் சிறந்த வாக்காகக் கருதப்படுகின்றன. ஏனெனில் சமீப காலத்தில் எல்லா ஆச்சாரிய புருஷர்களும் இந்த உபநிஷ தங்களுக்கு விளக்க உரைகள் உதவி இருக்கின்றனர்.

ஈசாவாஸ்ய உபநிஷத்

ஈசாவாஸ்ய உபநிஷத்

அல்லது

வாஜஸநேயி ஸம்ஹிதோபநிஷத்

---

1 3 1 3 1 1 1 3 1 1
ஓம். பூர்ணமத: பூர்ணமிதம். பூர்ணாத் பூர்ணமுதச்யதே

1 1 3 1 1
பூர்ணஸ்ய பூர்ண - மாதாய பூர்ண - மேவவிசிஷ்யதே

ஓம் சாந்தி - சாந்தி - சாந்தி.

அது பூர்ணம். இதுவும் பூர்ணம். பூர்ணத்திலிருந்து பூர்ணம் தோன்றியுள்ளது. பூர்ணத்திலிருந்து பூர்ணத்தை எடுத்ததும் எஞ்சி நிற்பதும் பூர்ணமே.

இந்தச் சாந்திப் பிரார்த்தனையைப் படிக்குமிடத்து இன்பமூட்டும் முரண்பாடுடைய சொற்றொடர் போலத் தோன்றுகிறது. ஆங்கிலத்திலும், சுதேச பாஷையிலும் கிடைக்கக்கூடிய மொழிபெயர்ப்புக்களில் முக்கியமாக இதனுடைய சொல் அர்த்தங்களில் மூழ்கும் தற்கால மாணவன் எவனையும் இந்த ஒவ்வொரு வாக்கியமும் நிச்சயமாக மலைத்துத் தடுமாறச் செய்துவிடும். இது ஒரு தத்துவ ஞான சத்தியப் பிரகடனம். அதனால் சிறப்பு வாய்ந்த முடிவற்றதன் விஷயங்களைப் பற்றியும், அதன் பூரணத்துவத்துடன் உள்ள சம்பந்தங்களைப் பற்றியும் நமக்கு வேதாந்தத்தின் சித்தாந்தங்கள் தெரிந்தாலல்லது

இந்தச் செய்யுள் படிப்பவர்களைக் கலக்கிவிடும் என்பது நிச்சயம்.

வேதாந்திகளின் கருத்துப்படி சத்தியம இரண்டற்ற ஒன்று. எங்கும் நிறைந்தது. நித்தியமானது. இந்த எல்லையற்ற சத்தியத்தைப் பற்றியே உபநிஷத் ஆராய்ந்து அதன் விளக்கங்களின் மூலமாக வெளிப்படுத்தவேண்டும். இமமேன்மையான, நமமுள்ளே உளள ஜீவப்பொறியான சத்தியத்தை அனுபவித்தவர்கள் பழங்கால மேன்மை வாய்ந்த தீர்க்கதரிசிகள். அவர்கள் ஏகோபித்துப் பிரகடனப்படுத்தியதாவது: இந்த உலக ஆவிர்ப்பவங்களாலாக்கப்பட்ட இந்த முடிவுள்ள பன்மை இயல்புகள் சத்தியத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கின்றன. அவற்றிற்குச் சொந்தமான உண்மை இயல்பு இல்லை. சுருங்கச் சொல்லின் அத்தீர்க்கதரிசிகள் எல்லையற்றதின் சிகரத்திலிருந்து பார்க்கும் போது இந்தப் பல ரூப உலகம அவர்கட்குப் பொய். பலவகையான தோற்றங்கள், கம்பத்தில் தோன்றும் பேய் போலப் பொய்யானது!!

களைப்புற்ற பிரயாணி இருட்டில் சாலையில் உள்ள கம்பத்தைப் பேயாக எண்ணுகிறான். அந்தப் பேயினிடம் அதனுடைய அங்கங்களில் வித்தியாசங்கள் நிச்சயமாக இருக்கின்றன. அதனால் திருஷ்டியில் ஒரு அநேகத்துவம் உண்டு. அதனுடைய தலை தெளிவாக அதன் உடலுடன் பொருந்தியிருக்கிறது. மற்றும் அவயவங்கள் அதற்குரியதைப் போல இல்லை. ஆனால் அந்தப் பிரயாணி கம்பம் தான் என்று அறிந்த உடனே அந்தப் பேயின் திருஷ்டியும், அதனுடைய விகற்பமான அங்கங்களும, அறிந்த ஒரு நொடிப்பொழுதில் மறைந்து விடுகின்றன. அதன் பிறகு அந்த ஆறுதலை அடைந்த பிரயாணியின் கூர்மையான பார்வையில் கண்டுகொண்ட கம்பம் மாத்திரமே மிஞ்சி இருக்கிறது.

அந்தக் கம்பம் எப்போதும் பூர்ணம். அந்தப் பேய், ஏமாற்றத்தில் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிற அந்த மருண்ட பிரயாணியிடம் இளித்துச் சீற்றங்கொண்டு வெருட்டும்போது அந்தப் பேய் பூர்ணம். அதாவது பேய் இருந்த இடத்தில் கம்பத்தின் சின்னங்கூட இல்லை. அருகில் சென்று ஆராய்ந்த பிறகு பகுத்தறிவின் ஒளியில் அதே பிரயாணி கம்பத்தைக் கண்டுகொண்டதும், அந்தப் பேய் அவனுடைய பார்வையிலிருந்து முற்றிலும் விலகி விட்டது. அதே பிரயாணியின் அனுபவத்தில் அந்தக் கம்பம் பூர்ணமாக எஞ்சி நின்றது. அந்தப் பேய் அந்தக் கம்பம் இல்லாத இடத்தில் இருக்கவில்லை. அப்பேய் அந்தக் கம்பம் இருந்த அதே இடத்திலேயே இருந்தது. தெளிவாகச் சொன்னால் அந்தப் பேய் அந்தக் கம்பத்திலிருந்து உதித்தது. அந்தக் கம்பத்திலேயே தங்கி இருந்தது. அதன் உண்மையை அந்தக் கம்பத்தினிடமிருந்தே இரவல் பெற்றது. இறுதியாக, அந்தக் கம்பத்தின் உள்ளேயே ஒன்றிவிட்டது.

அதுபோலவே, இந்தச் செய்யுள் கூறுவது யாதெனில் மிக மேன்மை வாய்ந்தது சத்தியம் ஒன்றே. அவன் சத்தியத்தை அறியவில்லை; எனவே எல்லைக்குட்பட்ட மனதும புத்தியுமுள்ள அவனால் அதைப் பார்க்க இயலவில்லை. அதற்குப் பதிலாக இந்தப் பேய் உலகத்தையும, அநேகத்துவத்தையும், ஆவிர்பவங்களையும் காண்கிறான். இந்த ஆவிர்பவ உலகம சத்தியம் இல்லாத இடத்தில் நிலை பெற்றிருக்க முடியாது. காண்பவன் தன்னுடைய சாதனங்களான மனம், புத்திகளை மீறிச் சத்தியத்தை அதன் பரிசுத்தத்துடன் மீண்டும் கண்டுகொண்டபோது மனது, புத்தி இவைகளின் மீது சுமத்தப்பட்டிருக்கிற இந்த அநேகத்துவ உலகின் சங்கேதக் காட்சிகள் மறைந்து விடுகின்றன. அவன் சத்தியத்தை, அதனுடைய

மேன்மை' வாய்ந்த கீர்த்தியை மங்களகரமான திருஷ்டி யில் அனுபவிக்கிறான்.

தனித்த, எல்லையற்ற, இந்த மகத்தான சத்தியம் பொதுவான பிரதிப்பெயரில் "அது" என்று இங்கு கூறப் பட்டிருக்கிறது. இவ்வாறு வழங்கப்படுவதில் ஒரு சிறந்த நோக்கமும், ஆழ்ந்த விசேஷமும் உண்டு.

ஒரு மாணவன் அவனுடைய வாழ்க்கை முற்றிலும் ஜீவகளையுடன் வாழ்கிறான். பின்னர், வாழ்க்கையின் விரைந்து செல்லும் பல காட்சிகளையும், அதனுடைய முடி வற்ற துன்பங்களையும் ஆராய்ந்த முதிர்ச்சியில் ஒரு ஆசிரியரைத் தேடிச் செல்கிறான். அவரிடம் வாழ்க்கை யின் இலட்சியம், துன்பமும் சாவும்தானா என்று வினவு கிறான். அவன் அந்த ஆசிரியரிடம் அர்த்தமற்ற இந்த வாழ்க்கையின் துன்பங்களில் உழன்று சவக்குழியை அடைவதைவிட வேறு அடையத்தக்க மேலான இலட் சியம் வாழ்க்கையில் இருக்கிறதா என்று கேட்கிறான். இந்த இளைஞனின் புத்தியைச் சம்பந்தப்பட்ட வரையில் தானாகவே கந்தையாகிற 'பொருளை'க் கிழித்துத் திறந்து உள்ளே "சத்தியம்" என்று ஏதாவது இருக்குமானால் அந்தச் சத்தியத்தை எட்டிப்பார்க்கத் தனிப்பட்ட முறை யில் இயலாது.

இப்போது அவ்வாசிரியர் விடை கூறுகிறார். அந்த விடை வாழ்க்கையின் சிறந்த இலட்சியத்தையும், இயற் கையின் செயல்களின் இரகசியத்தையும் குறிப்பதாக, இருந்தே தீரவேண்டும். அம்மாணவனுக்கு அவ்வாழ்க்கை யின் இலட்சியத்தைக் குறிப்பிடுவதற்கு ஆசிரியர் பொது வான பிரதிப்பெயரான "அது" என்பதை உபயோகிக் கிறார். வாழ்க்கையின் இலட்சியம்—ஓ! மாணவனே! நீ என்னிடம் கேட்டுக்கொண்டிருந்தது தான். அது தான்

பூர்ணம். உபநிஷத்துக்கள் எல்லாம் அந்த எல்லையற்ற நிலையான இலட்சியத்தை எல்லையுள்ளதின் மொழிகளின் மூலமாகக் குறிப்பிடுவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கின்றன.

அம்மகத்தான 'சத்தியம்' ஒரே இயல்புள்ள அகண்ட பூர்ணம். பெருகியிருக்கும் அநேகத்துவங்கள் சத்தியத்தின் மீது சுமத்தப்பட்டிருப்பவைகளே தவிர வேறொன்றுமில்லை. அவைகளும் கூட பூர்ணத்தில் அடங்கியவைகளே. நிச்சயமாக "இந்தப் பூர்ணம்", "அந்தப் பூர்ணத்"திலிருந்தே உதயமாகிறது.

ஏதாவதொன்று மற்றொன்றிலிருந்து உதயமாகும் போது அந்த நிலையான காரணம் அதன் கருவியை அதனிடமிருந்தே உற்பத்தியாக வசதியளிக்கும் போது ஒரு தீர்மானமான மாறுதலை அடையவேண்டும். அது தான் உலகில் நடைபெறுகிறது. களிமண், ஒரு பானை செய்த உடனே அதன் பெயரையும், உருவத்தையும் மாற்றிவிடுகிறது. ஒரு கட்டித் தங்கம் அதைக்கொண்டு ஒரு ஆபரணம் செய்தபோது மாறுதல்களை அடைய வேண்டுவது அவசியமே. ஒரு மரம் அதன் பூரண வளர்ச்சியை அடைந்தவுடன் அதன் வித்து அதையே அழித்து விடுகிறது.

அதுபோலவே பெருகியிருக்கும் எல்லையுள்ளதின் உலகம் ஒரு மகத்தான எல்லையற்றதினின்றும் உதித்திருக்கிறது. ஒருவேளை அதன் காரணம் இந்த மாறுதலையே கருவியாக அடைந்ததில் தானே அழிந்திருக்கலாம். இப்பெரிய சந்தேகம் உபநிடதத் தீர்க்கதரிசியால் மறுக்கப்படுகிறது. அவர் உறுதியுடன் கூறுவதாவது, "பூர்ணத்தைப் பூர்ணத்திலிருந்து எடுத்துவிட்டதும் பூர்ணமே எஞ்சியிருக்கிறது." இது நிச்சயமாக வாழ்க்கை

யில் ஏற்படும். சாதாரண நோக்கங்களுக்கு முரணனது. ஏதாவதொன்று மற்றொன்றிலிருந்து பிறந்தால், அந்தக் காரணம் கருவியாக ஆகும் மாறுதலை அவசியம் அடைந்தே ஆகவேண்டும்.

ஒரு சாஸ்திரம் எப்போது வாழ்க்கையின் உண்மை அனுபவங்களுக்கு முரணைக் கூறுகிறதோ அப்போது ஒரு வேதாந்தி அந்த சாஸ்திரங்கள் கூறுவதை அப்படியே சொல் அர்த்தத்தில் ஒத்துக்கொள்ளக்கூடாது. ஆனல் அவன் தீவிரமாக முயன்று அதன சரியான கருத்தை, உண்மைப் பொருளை அறிந்து கொள்ளவேண்டும். அது போலவே இங்கு ஒரு முனிவர் எல்லையுள்ளது பிறப்பிக்கப் பட்ட பிறகும், எல்லையற்றது கேடில்லாமலும் மாறுதலற் றும் இருக்கிறதென்று கூறினல் இந்தப் படைப்பு முறை யில் ஒருவிசேஷம் இருக்கவேண்டும். உபநிடதங்களிலெல் லாம் இவ் வேதாந்தக் கோட்பாடான படைப்பு, உண்மை யான பிறப்பித்தல் அல்ல. உலகிற்கும், சத்தியத்திற்கும் உள்ள சம்பந்தம், ஒரு காரணத்திற்கும், அதன் கருவிக் கும் உள்ள சம்பந்தம் போன்றதல்ல என்பதை ஆதரிக்கப் போதிய அத்தாக்ஷிகள் இருக்கின்றன.

வேதாந்தப்பேராசிரியர்களான, பழங்கால திர்க்கதரிசி களும், தற்கால ஆச்சாரியார்களும், இந்தப் பொருள்களா லான அநேகத்துவ உலகமானது சத்தியத்தின் மீது சுமத் தப்பட்டிருப்பவைகளேயென்று, ஏகோபித்துக் குறிப் பிட்டுக் கூறுகிறார்கள். பேயைப் பிறப்பித்ததில் அந்தக் கம்பம் எவ்விதமாறுதலையும் அடைந்து விடவில்லை. ஆகையால் இந்த எல்லையுள்ள அநேகத்துவ உலகத்தின தோற்றமானது எல்லையற்றதை அறிந்த உடனே உருண் டோடி விடுகிறது. எல்லையற்ற ''அது'' பூர்ணமாக எஞ்சி நிற்கிறது.

இவ்வாறு குருவும் சீடர்களும் ஒவ்வொரு நாளும் பாடங்களைத் தொடங்கும் போது தங்களுடைய உண்மையான இயற்கையை ஞாபகப்படுத்திக்கொண்டார்கள். இவ்வாறு சத்தியத்துடன் தங்களை இணைத்துக்கொண்டார்கள். தெய்வத்துடன் தன்னை முற்றிலும் பொருத்திக் கொள்ளுகிற எந்த முயற்சியும் சிறந்ததே. திருப்பாக்களை ஓதுதல், தெய்வத்தின் உருவம், குணங்கள், இவற்றின் கீர்த்திகளை நினைத்தல் ஆகியவைகளே உண்மையான பிரார்த்தனை முறைகளாகும்.

இவ்வாறு சேர்ந்து செய்யும் பிரார்த்தனையினால் அவர்கள் தங்களிடையே சாசுவதமான சத்தியத்தின் மகத்தான பேரருளை வேண்டிக்கொண்டனர். அவர்கள் மீது அருளைப் பொழிந்து, இடையூறுகளினின்றும் காப்பாற்றி உறுதியான மனோநிலையை அளிக்கவும், அவர்கள் மிக்க பணிவுடன் சரணமடைந்தார்கள்.

இப்பிரார்த்தனைச் செய்யுள் எப்போதும் மூன்று சாந்தி வேண்டுகோளுடன் தொடர்ந்தே இருக்கும். மும்முறை அடுத்தடுத்துக் கூறும் சாந்தி வேண்டுகோளானது பெரிய ஆச்சாரியார்களால் விளக்கிக் கூறப்படுகிறது. நாடுபவர்களால் பிரார்த்தனை, புரியப்படும இந்தச் சாந்தி வேண்டுகோள் அவர்கள் பேராசிரியரின் பாதத்தின் கீழ், வேத நூல்களைப் பயிலும் போது ஏற்படக்கூடிய மூன்றுவித இடையூறுகளைத் தடுப்பதற்காகவே.

ஒருவகை இடையூறுகள் எதிர்பாராத காரணங்களால் ஏற்படக் கூடும். மற்றொரு வகை அறிந்துள்ள காரணங்களினால் வரக்கூடும். மேலும் மற்றொரு வகையான இடையூறுகள் நம்முள்ளேயே யிருந்து எழக்கூடும். இங்கு இந்த இடையூறுகளின் காரணங்களெல்லாம் தற்போது சாந்தியை மாத்திரம் பரப்பக் கட்டாயப்படுத்தப்

படுகிறது. அதனால் நம்முடைய படிப்பு எவ்வித இடையூறுமின்றி பயனுடனே முற்றுடபெறும்.

இந்தச் சாந்திப் பிரார்த்தனைக்குப் பிறகு ஆசிரியர் தன்னால் அறியப்பட்டுள்ள சத்தியத்தின அனுபவங்களைச் சிறப்பாகச் சொல்ல ஆரம்பிக்கிறார். இவையே உபநிடதங்கள் முற்றிலும அடங்கியுள்ளவை. இந்த ஈசாவாஸ்ய உபநிடத எண்ணத்தின ஓட்டம அதனா உயிர்ப்புள்ள இலட்சியத்தின் மீது ஐந்து தெளிவான அலைகளாகப் பாய்ந்து ஓடுகிறது. அவற்றின் வார்த்தைகளின சுருக்கம் காரணமாக அவை இந்த நிறைவான தத்துவ ஞானக் கலைகளையும கொண்டு செல்கின்றன; ஆகவே எண்ணத்தில் மிகச் சிறந்தது, மனோபாவத்தில் தெய்வீகமானது; சிகிச்சையில் சாஸ்திரீயமானது; அவசரமாகப் படிப்பவர்களுக்கு இந்த ஈசாவாஸ்ய உபநிஷத்து தடுமாறித் திரிகிற எண்ணங்களாக—கலக்க மூட்டும குழப்பமாகவே இருக்கும். ஒரு வேளை சிதறிய அரைகுறையான கருத்துக்கள் கொண்டதாகவும் காணப்படலாம.

இம் முடிவு, சிறப்பாக அந்நிய விரிவுரை ஆசிரியர்களுக்கு மிகவும் இயல்பாகிவிட்டது. மிக்க துணிவுடன் வேத நூல்களின் வாயில்களை அடையும ஒவ்வொருவனும் அதிகக் குழப்பத்தையே அடைகிறான். ஏனெனில் உபநிஷத்துக்களில் வழங்கப்பட்டுள்ள சில வார்த்தைகள் பழக்கமுடையன போலக் காணப்பட்ட போதிலும, அவை முக்கியமான கருத்துக்களையும நுட்பமான கூடார்த்தங்களையும் செய்யுள் அமைப்புகளில் கொண்டுள்ளன.

முதல் அலையில் ஒரு அத்தியாயத்தின் கருத்துக்கள் முற்றிலும் சத்தியத்தின் கோட்பாடுகளை வெளிப்படுத்த அந்தப் பேராசிரியர்களால் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. துறவற மார்க்கத்தால் அதை எவ்வாறு அடைய

முடியும் என்பதும், எல்லாவிதப் பொருளாதாரக் கீர்த்திகள், கடந்த வெற்றிகள், அற்ப புகழ்கள் இவைகளின் மீது முற்றிலும் பற்றற்ற தன்மையின் மீது நிலை பெற்றிருக்கும் வாழ்க்கையின் மதிப்புகளின் மூலம், எவ்வாறு சித்திபெற்ற சத்தியத்தைப் பராமரித்து தகுந்தபடி இன்புற முடியுமென்பதும் கூறப்பட்டுள்ளன.

இரண்டாவது அலையில் ஆசிரியர் கர்ம மார்க்கத்தைக் குறிப்பிடுகிறார். அது தீர்க்கதரிசிகளின் சொற்படி முன் கூறப்பட்டத் துறவற மார்க்கத்தைப் பின்பற்ற இயலாதவர்கள் அனைவரும் மிகவும் உண்மையுடன் பின்பற்ற வேண்டும். மூன்றாவது செய்யுளில் இந்த இரண்டு மார்க்கங்களிலும், செல்லுவதற்கு மறுப்பவர்கள் வழி தப்பி துன்பக் குழியையும் இருளையும் அடைவார்கள் என்று குறிப்பிட்டுக்கூடச் சொல்லப்பட்டிருக்கிறது.

மூன்றாவது அலையில், தீர்க்கதரிசிகளின் கவிகளில் அவருடைய வார்த்தைகளின் வர்ணங்கள் ஒன்றுசேர்ந்து ஒரு சிறப்பான ஒளியுடன் அவருடைய மாணக்கர்களுக்கு முதல் செய்யுளில் முன்னதாகவே குறிப்பிட்டுள்ள உண்மையான வாழ்க்கையின் இலட்சியமென்ன? இந்த இலட்சியத்தை அடைந்தவர்கள் அதன் பிறகு எவ்வாறு அவர்களுடைய மானசீக உள் உலகில் சத்தியத்தை அனுபவித்து வாழ்வார்கள் என்று நுட்பமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த நித்தியமான வாக்கியங்களுக்கு அடுத்தபடியாக, ஆத்மாவின் எல்லையற்ற தன்மைகளை விளக்கி, அந்த முனிவர் அடுத்த ஆறு செய்யுட்களில் (—9—14) நான்காவது அலையை முடித்துவிடுகிறார். அங்கு அவர் மாணக்கர்களுக்கு அறிவும், செயலும் (தியானமும்-பிரார்த்தனையும்) அவற்றைத் திருப்தி செய்யும் வகையில்

அதிக பலனை அளிப்பதாயிருந்தால் அவை இரண்டையும் சேர்த்துக் கையாள வேண்டும். அவை இரண்டிலும் ஒன்றைத் தவிர்த்துச் சாதனை புரியக் கூடாது. ஆனால் அவை விசுவாசத்துடன் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து, இசைந்து நேர்மையாக வரிசையில் வர வேண்டும். அப்போதுதான் ஒன்றினால் மற்றொன்று உதவி பெற முடியும். ஒன்றுடன் மற்றொன்று இசைந்த கூட்டுறவால் அதனுடைய முறையில் மற்றொன்றை வல்லமையுறச் செய்யும். இவ்வாறு அந்நியோன்னியமாக ஒன்று மற்றொன்றை வலிமையுறச் செய்து, இறுதியாக, அவை இரண்டும் அந்தத் தனிப்பட்ட நாடுபவரைத் தன்னை மீண்டும் அறியும் நிலைக்கு அல்லது ஆத்ம ஞானத்திற்கு அழைத்துச் செல்லுகிறது என்று குறிப்பிட்டு கூறுகிறார்.

இவ் வுபநிஷதத்தின் முடிவிலேவரும் நான்கு செய்யுள்களும் சேர்ந்து வேதநூல்களின் ஐந்தாவதாய் அமைந்ததும் முடிவான எண்ணத்தின் எழுச்சியாயிருப்பதையும் கொண்டது. அவனிடமேயுள்ள நித்தியமான ஆத்மாவின் கீர்த்திக்குத் தன்னை அது ஆத்ம அனுபவ மகிழ்ச்சியில் வெளிப்படுத்த இதுவே அநித்திய மனிதனின் அறைகூவல். நாம் இப்போது செய்யுட்களை ஒன்றன்பின் ஒன்றாக மேல்நோக்கிச் செல்லுவோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

3
ஓம். ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம்

1 1 1 3 3 1 3 3 1
யத்கிம்ச ஜகத்யாம் ஜகத்

1 1 1 1 4 3 2
தேன த்யக்தேன புஞ் ஜீதா

3 4 1 3 4
மா க்ருதஹ கஸ்யஸ்வித் - தனம்.

இந்த உலகில் அசையும் பொருள், அசையாப் பொருள் ஆகிய அனைத்தும் ஆண்டவனிடத்தேயே தங்கியிருக்கின்றன, அல்லது அவரால் வியாபிக்கப்பட்டிருக்கின்றன, அல்லது சுற்றப்பட்டிருக்கின்றன, அல்லது உடுக்கையாக உள்ளன.

இந்த விலக்கப்பட்டதை நீ அனுபவிக்கக் கூடாது. மற்றவர் பொருளை நீ இச்சிக்காதே.

இந்தத்தீரமான விவரத்துடன் கூடிய மகிமை பொருந்திய சத்தியத்தை, மாட்சிமை மிக்க சத்தியத்திலே வாழ்கின்ற, ஜீவ அநுபவமுள்ள தீர்க்கதரிசிகள் இந்த உபநிடதத்தை வெளியிட்டனர். "வாஸ்யம்" என்னும் சொல் சமஸ்கிருதத்திலே கருக்கொண்ட வார்த்தை. அதற்கு அளவு கடந்த எண்ணங்களை மூட்டுகிற தன்மையும், எண்ணிறந்த அர்த்தங்களுமுண்டு. உடுக்கையாக அணிய, ஒரு ஆடையாக அணிய, வாசம்பண்ணுவதற்கு, சுற்றப்பட்டிருத்தலுக்கு அல்லது வியாபித்திருப்பதற்கு என்பது அச் சொல்லின் பொருள். இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த எல்லா அர்த்தங்களும் பொருத்தமானவைகளே. அந்தப் பெரிய ரிஷி மறையிடுவது, இவைகளெல்லாம் புலன்களால் நுகரக்கூடியவைகளும் அல்லது மனது புத்திகளின் குறுக்கீடுகளினால் அறியப்படுபவைகளும் இவைகளெல்லாம் காணப்படுகிற உலகிற்கெல்லாம் கர்த்தரான ஆத்மாவின் அகத்திலேயே வசிக்கின்றன.

ஆத்மா, பொருள்களினால் மூடப்பட்டிருப்பதே ஜீவிக்கிற மனிதன். பொருள்களாலாக்கப்பட்ட ஒவ்வொரு வஸ்துவின் அகத்திலும் ஆத்மா வசிக்கிறது. அது எங்கும் ஊடுருவிச் சென்று ஒரே இயல்புள்ள எங்கும் வியாபித்திருப்பதில் வசிக்கிறது. வஸ்து ஒரு சாதனம். அதன் மூலமாக சத்தியம் அதனுடைய தத்துவ உருவத்தை வெளிப்படுத்துகிறது. நாம் எல்லோரும் அறிந்

துள்ள ஜீவன் அதுவே. ஆனால் உண்மையில் இதற் கெல்லாம் அடிப்படையாக எங்கும் வியாபித்திருப்பதில் ஜீவனின் வித்து இருக்கிறது. அது தான் இந்தப் பொருள்கள் வசிப்பதற்கு கர்த்தாவான ஆத்மாவின் சைதன்யம்.

இது நமக்கு நன்றாக தெரிந்ததே. சரீரம், மனது, புத்தி, இவைகளைச் சுற்றி இருப்பவைகள் சுயமாக இயங்க இயலாது. அவைகள் ஜடப்பொருள்கள். ஜீவசக்தியால் தான் வலிமையைப் பெறவேண்டும். அதனால் தான் "ஆத்மா" பொருள்களின் கர்த்தா என்று அழைக்கப் படுகிறது. அதனுடைய பிரசன்னத்தால் தான் ஜடப் பொருள்கள் ஜீவகளையை அடைகிறது.

சத்தியத்தை அடைவதற்கு உபநிடதங்களில் இரண்டு மார்க்கங்கள் கூறப்பட்டுள்ளன. ஒன்று வெளி உலகப் பொருள்கள் மூலமாக; மற்றொன்று அந்த ஆராய் பவன் தவறுகளினால் பழக்கத்தினால் தானே என்று கூறுகிற இந்தக் கூட்டங்களின் உள்ளே, மானசீகமாக விசாரிப்பதன் மூலமாக இந்த உபநிஷத்தின் முதல் மந்த்ரம் இந்த ஆராய்பவனுடைய சொந்த பலவகைப் பட்ட தன்மைகள் ஈசனுடைய, ஆண்டவனுடைய தலைமை யின் கீழ் உள்ளதென்ற பிரகடனத்துடன் ஆரம்பமாகிறது. மாணாக்கன் தவறுதலாக "ஆத்மா" தெய்வீக ஒளியுடன் தன்னிடம் மாத்திரமே இருக்கிறதென்று எண்ணக்கூடும்! அவனுக்குப் போதிய விசால மனது இருக்குமானால், அவனுடைய கருத்தில் எல்லா மானிட வர்க்கத்தையும் சேர்த்துக்கொள்ளக் கூடும். தெய்வீகம் மனித உருவத்தி லுள்ளவர்களிடத்து மாத்திரம் தான் தலைமை வகித்த தென்று கருதவும் கூடும்!

ஆராய்பவனிடமுள்ள இந்தத் தப்பெண்ணத்தைப் போக்க இந்த மந்த்ரத்தின் முதல் வரி "இந்த" என்கிற

பிரதிப் பெயரை மாற்றுவதற்கு ஒரு வினையுரிச் சொல் வசனத்துடன் தொடர்கிறது. "இந்த" என்கிற பதம் உலகத்தில் அசைவுள்ள பொருள்கள் அனைத்தையும், அசைவற்ற பொருள்களையும் ஒன்று சேர்த்து உட்படுத்து கிறதென்று அது கூறுகிறது. எல்லாவிதமான அலைகள், குமிழிகள் நுரை, சுழல்களெல்லாம் எவ்வாறு கடலிலேயே மாத்திரம் நிலைத்து உள்ளனவோ அதுபோல காணப்படும் உலகமெல்லாம், உணர்ச்சிகளும், கருத்து களும், பகத்தான சத்தியத்திலேயேதான் நிலைபெற்று இருக்கின்றன. கடலிலேதான் நாம் அலையை அடைய முடியும். உண்மையாக இந்த அலையும் கடலைத் தவிர வேறொன்றுமில்லை. அலைகள், கடலின் வலிமை, சக்தி, வீரியம் இவைகளின் தோற்றங்கள். இதேப் போல உல கத்திலுள்ள பெயர்களும், உருவங்களும், சாசுவத சத்தி யத்தின் மகிமையின் தோற்றங்களே. அவை சைதன் னியமே தவிர வேறொன்றுமில்லை.

உதாரணமாக அதோ ஒரு மரம் நிற்கிறது. நாம் அந்த மரத்தைப் பற்றி நம்முடைய அநுபவத்தை கூறு படுத்தி பார்ப்போமானால் அந்த மரத்தைப் பற்றிய மனோ பாவம் அதனுடைய, உருவம், சப்தம், ருசி, மணம், ஸ்பர் சம் இவைகளைப்பற்றிய நம்முடைய அறிவின் முழுமையுமே என்று நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். இவைகளெல்லாம் நம்முடைய புலன்களால் நமக்கு மனதில் பதியும்படி விளக்குகின்றன. புலன்கள் இல்லாவிட்டால் இந்த எண்ணங்கள் ஏற்படாது. ஆனால் அந்தமரம் அழிக்கப் பட்டதும், அது நம் மனத்திலே எவ்வித எண்ணத்தையும் இனி ஏற்படுத்தாது. அது ஒரு சூனயகுணங்கமன்று. ஏனென்றால் நாம் இந்த மூல அம்சங்களை பார்த்துக் கொண்டிருக்கும்போது நாம் அறியாதபடி மற்றொரு பொதுவான தன்மை இந்த மூல அம்சங்களின் மூலமாக

ஒரே சீராக ஓடிக்கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தோம்.

அங்கு ஒரு உருவம், ஒரு ருசி, ஒரு சப்தம், ஒரு வாசனை, ஒரு ஸ்பர்சம், அந்த மரத்திற்கு உண்டு என்று நாம் அறிந்தோம். புலன்களால் விளக்கப்பட்ட எல்லா தன்மைகளுமில்லாமல் அந்த மரத்திற்கு ஜீவிய ஆதாரம், நிலைபெற்றிருப்பதின் உறுதியை நாம் அறியாதபடியே நாம் கூறியபடி இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. இந்தக் குணங்கம் தெய்வீகமான நிலைபெற்றிருக்கும் தத்துவம், எதனாலல்லது இந்த எண்ணங்கள் எழாதோ அது பொதுவாக அறியப்படுகிறதில்லை. ஏனென்றால் ஆராய்பவன் தன் உணர்ச்சியின் அலுவல்களின் முன்னீட்டில் மூழ்கிறதால் புலப்படுகிறதில்லை.

இந்த திருஷ்டியின் கீழ் இந்த மகத்தான பரிசுத்தத்தின் சைதன்னியம், ஒரு சூட்சும தெய்வீக சக்தியாக, எங்கும் நிறைந்ததாயும், சாசுவதமாகவும் வசிக்கிறது. இந்த உபநிஷத்து இந்த பத்தியுடன் ஆரம்பமாகிறது. அதில் ரிஷியானவர் இந்த சைதன்னியத்தை நம்முடைய திருஷ்டியின் பூர்வ அலுவல்களை விலக்கிவிடும் முறைகளின் மூலமாக நாம் கண்டறிய முடியுமென்று உபதேசிக்கிறார். காட்சிகள் மாறும், ஆனால் அதனுடைய அடிப்படைத் தத்துவம் மாறாது. காட்சிகள் அழியும் ஆனால் அதனுடைய தத்துவம் அழியாது. காட்சிகள் அநேகத்துவம் ஆனால் சத்தியம் இரண்டற்றது.

எங்கும் நிறைந்த சத்தியத்துடன் நம்மை ஒன்றுபடுத்திக் கொள்ளுவதே அகத்தில் "தன்னை" அறிவது. புதுமையின் தோற்றங்களையுடைய உலகத்தின் அல்லல் படுத்துகிற திரைகளின் மூலமாக உள்ளே ஊடுருவிப் பார்ப்பதுதான் அநேகதத்துவத்தையுடைய வெளியுல

கத்தின் உண்மையை அறிவதாகும். இது எவ்வாறு இசைவுடன் நடைபெறுகிறதென்பதே "ஈசாவாஸ்ய" உபநிஷத்தின் முழு விஷயமுமாகும். நீங்கள் மேலே செல்லும்போது இதைக் காண்பீர்கள்.

பொருள்களாலான உலகத்தின் மீது, ஒரு மகத்தான தெய்வீக சக்தி தலைமைவகிக்கிற தென்று நமக்கு கூறப்பட்டபோது, அந்த ஆசிரியர், நாம் நம்மிடம் நம்முடைய திருஷ்டியின் காடுகளிலே, பழக்கப்படுத்திக்கொண்டுள்ள தவறானமதிப்புகள், பற்றுதல்கள் இவைகளை ஒழித்து விடுவதன் மூலம் நாம் இந்தப்பெரிய இன்பகரமான பரிசுத்தத்தை அநுபவிக்க முடியுமென்று பரிந்துபேசுகிறார்.

பேயின் தோற்றம் மருண்டவனை பயமுறுத்துகிறது. அதனால் அவன் மனது அபாயமான நிலையில் பதட்டங் கொண்டு கலக்கமடைகிறது. அவனைச் சாந்தப்படுத்தி அவனுடைய மனதிற்குச் சாந்தியையும் அமைதியையும் அளிக்க ஒரே வழிதான் உள்ளது. அதாவது அவன் அந்தக் கம்பத்தைக் கண்டுகொள்ள உதவவேண்டும். பேயின் தோற்றத்தில் கலங்கியிருக்கும் என் நண்பனுக்கு அந்தக் கம்பத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் நானும், அவனுடைய தோழர்களும், அவனுக்குப் புத்திமதி மாத்திரம் கூறலாம். "அருமை நண்பனே! பேயின் உருவத்தையும் தன்மைகளையும நீ யூகத்திலிருந்து ஒழித்துவிட்டால் இன்பத்தை அடைவாய்" பேயின் அடியில் கம்பம் இருக்கிறது. நம்முடைய மனதில் முன்னதாக குடிகொண்டிருக்கும் பேயின் தோற்றத்தில் நாம்-பூராவும் ஈடுபட்டிருக்கும் வரையில் நமக்கு அமைதியோ, அல்லது புத்தியின் சாந்தமோ, அந்தக் கம்பத்தைக் காண்பதற்கு ஏற்படாது. கம்பத்தைக் கண்டுகொண்ட உடனே பேய் இருக்காது. கம்பத்தைக் காண்பதே உள்ளத்து அமைதியை அடைவதாகும். ஏனென்றால் தற்போதுள்ள

மனக் கலக்கங்கள் எல்லாவற்றிற்கும் காரணம், காண பதில் ஏற்பட்ட தவறுதலும் அதனுல் அடைந்த பயமுமே.

உபநிடதப் பேராசிரியர்கள் இந்த ஆரம்ப மந்த்ரத்தி லேயே தங்களுடைய மாணவர்களுக்குப் பொய்யானவை களை ஒழித்துவிட்டு சத்தியத்தை இன்புறவாருங்கள் என்று உபதேசிக்கிருர்கள்.

இந்த முதல் மந்த்ரத்தில் சத்தியத்தின் விளக்கமும் அதன் விரிவுரைகளும் மாத்திரமேயல்லாது, தன்னையறிய தீர்மான முறையும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த மந்த்ரத்திலுள்ள கல்வியின் பரிபூரணம், தத்துஞானத் தின் அழகு, எந்த பாஷையிலும் சரிசமானமற்று இருப் பது ஆகியவற்றின், சிகரத்தில் உயர்த்துவதற்கு இவ் வளவே போதுமானதாகும். ஆனுல் இதுமட்டுமல்ல. முயற்சிகள் அனைத்தினும் மகுடம்போன்று இங்கு இதே மந்த்ரத்தில் ரிஷியானவர் பரிசுத்த நிலையை அடைந்த தன் பிறகு எவ்வாறு வாழ்வார்? ஒரு நாடுபவர் எவ் வாறு தன்னுடைய யாத்திரையில் வாழ முறபடவேண்டு மென்பவைகளை ஒரு தொடர் மொழியில் குறிப்பிட்டிருக் கிருர். நாடுவோருக்கு ஒரு கட்டளை போன்றும், பரிசுத்த நிலையை அடைந்தவர்களின் மனோ நிலையின் விளக்கம் போன்றும், செய்யுளின் கடைசி பாதத்தில் விவரம் கூறப் பட்டிருக்கிறது. மற்றவர் பொருளை விரும்பாதே. பொருளாசை "இச்சை" என்னும் குட்டையின் சேற்றி லிருந்து உதிக்கிறது. ஆசை எண்ணங்களை பிறப்பிக் கிறது. எண்ணங்கள் இழிவான செயல்களாக ஆகிறது.

உபநிடத தீர்க்கதரிசி மற்றவர் பொருளை விரும் பாதே என்று உபதேசிக்கிருர். அதனுல் அவர் நாடுபவ னுக்கு அவன் ஆசைகளை அடக்குவதற்குக் கடினமான

பயிற்சியை விதிக்கிறார். ஆசைகளை கட்டுப்படுத்துவது செய்கைகளைக் கட்டுப்படுத்துவதாகும். அந்த அளவுக்கு அது நம்மிடமுள்ள "அறியாமையினாலும் பிழைகளாலும்" ஏற்படும் செயல்களை ஒழிப்பதற்கான முயற்சியாகும்.

ஸ்ரீ சங்கரர் இன்னும் ஒருபடி மேலே செல்லுகிறார். இந்தச் செய்யுளின் கடைசி அடியை ரிஷிகள் வியப்புக் கூறுதல் என்று பொருள்படும்படி வியாக்கியானம் செய்கிறார். "பொருள் யாருடையது?" இந்தக் கேள்வியினால் அவர் குறிப்பாலுணர்த்துவது யாதெனில் எவருக்கும் சொந்தமான பொருள் ஒன்றும் கிடையாது. இவ்வுலகில் நம்முடன் என்றும் நிலைத்திருப்பது ஒன்றுமில்லை. நாமும் சென்றுவிடுகிறோம். உலகப் பொருள்கள் அற்பாயுளுள்ளவை. இந்த நிரந்தர மாறுதலில் யார் விரும்புவது? எதற்காக? இவ்வாறு இவ்வுலகில் நாம் விரும்பத்தக்கது எதுவுமில்லாததனால் இந்த உலகில் நாம் ஏதாவதொன்றை விரும்புகிறோமென்கிற எண்ணத்தையே அவர் பரிகசிக்கிறார்.

இந்த ஒப்பற்ற உபநிஷத்தின் முதல் செய்யுளிலேயே, ஒரு சிறிய உருவுடன் தத்துவஞான மூலபாடம், சத்தியத்தை அறிவிக்கும் தத்துவஞானத்துடன் பூரணமாக அதனிடத்தே இருக்கிறது. அந்தச் சத்தியத்தை அறியும் சாதனையையும், வாழ்க்கையின் மதிப்புகளைப் பற்றிய நுட்பமான தெளிவுரைகளும், சத்தியத்தின் பரிசுத்த நிலையை அடைந்த ஒரு மனிதன் அதன் பிறகு அவன் அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு நடந்துகொள்ளுவான் என்ற வியாக்கியானங்கள் கூறப்பட்டுள்ளன.

இந்தத் தலையங்கங்கள் ஒவ்வொன்றும், அவைகளே அத்தியாயங்களின் விஷயமாக எல்லா வைதீக மூலபாட

புத்தகங்களிலும் விவாதிக்கப்பட்டுள்ளன. இங்கு அவை ஒவ்வொன்றும் செய்யுளின் ஒருபதமாக அமைந்து எளிய தொடர்மொழிகளால் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக் கின்றன. இவ்வாறு இந்தச் செய்யுளின் நான்கு வரிகளி லும் தத்துவ ஞானத்தின் நான்குவித நோக்கங்களும் குறிப்பிடப்பட்டும் கருக்கொண்ட தொடர்மொழிகளாலும் முற்றிலும் விவாதிக்கப்பட்டுள்ளன.

இந்தச் செய்யுள் "துறவற மார்க்கம்" அல்லது "ஞானமார்க்கத்தில்" நம்பிக்கையுள்ள சந்நியார்களுக் காக ஏற்பட்டது. அடுத்த செய்யுள் கர்மத்தின் கோட் பாடுகளின் பூரணமான விளக்கத்தைக் கொண்டது. இது எதிரான சித்தவிருத்திக் கூட்டத்தினரால் பரிந்து பேசப் படும் பிரசித்த வெளியீடுகள்.

இது ஒரு நித்திய சாசுவதமான விவாதம். மனித னுடைய அமைப்பு இப்போது உள்ளதுபோல இருக்கும் வரையிலும், இந்தப் பெரிய விவாதம் பொங்கி பலவித மான உக்கிரத்துடன் சரித்திரத்தின் வெவ்வேறு காலங் களில் நிச்சயமாக ஏற்படும். அலைகளைப்போல அவைகள் மாறி மாறித் தோன்றி சமூகத்தைத் தங்கள் பிடியின் கீழ் வைத்துக்கொள்ளும். சரித்திரத்தின் ஒருபகுதியில் மனி தர்கள் துறவற வாழ்க்கையையும், சுத்த ஞானமார்க்கத் திலும் வாழ்ந்து அவற்றைப் பரிந்துபேசி ஆதரவு அளிக்கவும் செய்யலாம். அடுத்தபடி அதைத் தொடர்ந்து மற்ற அலைகள் வந்து சாந்தமான வளர்ச்சியின் வாழ்க் கைக்கும் ஆத்மீகப் பண்பாட்டிற்கும் எதிராகக் கலகத்தை மூட்டும். அதன் இடத்தில் சரித்திரமானது, வெளித் தோற்ற, நாகரீகமான, பொருளாதார லாபங்களையும், ஸ்தூல சுகாநுபவத்தையும் சித்திரிக்கிறது. இவைகள் "வியர்வை, உழைப்பு, வேலை" சகாப்தத்தில் ஏற்படு கின்றன.

இந்த ஈசா உபநிஷத்து ஞானமார்க்கம் கர்ம மார்க்கம் இந்த இரண்டு மார்க்கங்களையும் ஒன்று படுத்தும் ஒரு முயற்சியென தோன்றுகிறது.

"குர்வன் ஏவ இஹ கர்மாணி
ஜிஜீவிஷேத் சதம் ஸமாஹா
ஏவம் த்வயிந அன்யத இதஹ அஸ்தி
ந கர்ம லிப்யதே நரே."

இவ்வுலக கர்மங்களை உண்மையாகச் செய்து கொண்டிருப்பதற்கு ஒருவன் நூறாண்டுவரையிலும் வாழ விரும்பவேண்டும். இதுவே தக்கது. ஏனெனில் வேறு ஏற்ற மார்க்கம் இல்லை. இத தன்மைவாய்ந்த மனிதனைக் கர்மம் பற்றிக் கொண்டிருக்கவில்லை.

முன்னையச் செய்யுளில் குறிப்பிடப்பட்ட இலட்சியம் நிச்சயமாக நிலையானது. மேலும் ஒன்றேயானது. அன்றியும ஒவ்வொருவருடைய இலட்சியமுமாகும். இப் பெரிய இலட்சியத்திற்கு ஒரு நேரான ஒழுங்கான வழியை ஏற்படுத்த, அந்தப் பிரயாணிக்கு அதிகமான மனோபுத்தி, ஆற்றல் தேவை. மூட்டை முடிச்சுகள் இலகுவானதாகவும உள் உறுப்புகள் வலிமை வாய்ந்தனவாயும் கம்பி போன்றதாயும இருக்கவேண்டும். அவன் துறவு பூண்டவனாகவும், பகுத்தறியும் நுட்பமான சுபாவமுடையவனாகவும் இருக்கவேண்டும. வலிமையான மனோதிடமும், தீவிரத் தன்னம்பிக்கை கொணடவனாகவும இருகக வேண்டும். சுருதியினுடைய கருத்து, சமபநதம இவைகளைச் சரியானபடி விளக்குகிற ஒரு பெரிய குருவினால் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவும் அவன் நிச்சயமாக இருக்க வேண்டும்.

நாம் அனைவரும் ஒரே விதமான தன்மையுடையவர்களல்ல. நமமில் சிலர் ஒரு பிரயாணி ஞானமார்க்கத்தில் நடப்பதற்குத் தேவையான தவிர்க்க முடியாத முக்கியமான சுபாவங்கள் குறைந்தவர்களாக இருக்கிறார்கள். பல முறையும் உறவினர்க்கும, புகழுக்கும் ஆரவாரமான வற்றிற்கும் பொருளை நாம் விருமபாமல் இருப்பதில்லை. இவ்வித உலக வாழக்கையை விருமபுகிறவர்கள் உண்மையுடனும், முயற்சியுடனும் கர்ம மார்க்கத்தைப் பழக வேண்டுமென்று வேதநூல் கூறுகிறது.

பெரிய முனிவர்கள், உலகம அதன் நிகழ்ச்சிகள் இவற்றிலிருந்து தம்முடைய தெய்வீகமான பற்றற்ற நிலையில் சுவடியில் சரித்திரத்தின் சுருள தானாகவே விரிந்து கொள்வதைக் கண்டனர். நாமும பற்றற்று வரலாற்றைப் படிப்போமானால், மனிதனுடைய மாறுகிற விதிகளின் நடுவே, சில மூலாதார உண்மைகள் நிரூபிக்கப்படுவதை நாம மிக எளிதாகக் காணலாம. மேன்மை வாய்ந்ததும், நிலைபெற்றதுமான வாழ்க்கையின் மதிப்புகள் மறுக்கப் பட்டு, இகழப்பட்டதும், சந்ததியார்கள் கீழே விழுந்து சின்னாபின்னமடைகின்றனர்.

அவர்களுடைய மறுமலர்ச்சி முழுமையும் எப்போதும் உண்மைக்கும, தீவிரத்தன்மைக்கும, வலிமைக்கும் நேராகப் பொருத்தமானதாக அமையும. இவைகளுடன் இந்த எழுச்சியடைகிற சந்ததியார்கள் மேற்கொள்ளுகிற தத்துவ ஞான, ஆத்மீக பரிசுத்தத்தின் மேன்மையான சகிப்புத் தன்மைகளைப் பொறுத்து அவர்களுடைய மறுமலர்ச்சி ஏற்படுகிறது. இவ்வாறு வாழ்க்கையையும, அதன் மாறுபாடுகளையும கூர்ந்து கவனித்து, இந்தப் பெரிய ரிஷிகள் அவர்களுடைய நுட்பமான அறிவினால், செய்கை, செயல் புரியாமை, செயலற்றவைகளின் முடிவுகளை மதிப்பிட்டனர். அவர்களுடைய முடிவின்படி செயலற்ற தன்மை

யானது ஸ்தூலச் செயலின்மையாகத் தோன்றுவது, அது உண்மையாக .கடைசியான உட்புறச் செயலைச்சுற்றி ஒரு கனத்த மூடியை அணிந்துள்ளது. இதுவே மிக மேலானது. இது துறவறம அல்லது ஞானமார்க்கத்தில் செல்லும் நாடுபவர்களின் நிலையாகும். இதற்கு எதிரானது செயல்புரியாமை, உள்ளும, புறமும ஆரோக்கியமற்ற நிலைமை, உணர்ச்சியின்மை, சோம்பேறித்தனமுமாகும. இந்த செயல்புரியாமை, சந்தியார்களைக் கொன்று விடுகிறது. ஒரு கொடுக்கப்பட்ட அறிந்துள்ள விருப்பத்தை நிறைவேற்றவோ, அல்லது அதே செய்கையையே அதனுடைய சொந்த நோககமாக இன்புறவோ, செயலே பலமான நெஞ்சறிந்த வேலையாகும்.

வேத நூல்களின் போதகாசிரியர்கள் கூறுவதாவது:-- ஏதாவது ஒரு தனிபபட்ட சந்தியார், கொடுக்கப்பட்ட சரித்திரகாலங்களில், முன்பத்தியில் விவரிக்கப்பட்டுள்ளபடி ஞானமார்க்கத்தைப் பின்பற்ற "செயலற்ற" தன்மைக்குத் தேவையான நோக்கமுடையவர்களா யில்லாவிட்டால், அவர்கள் பலம பொருந்திய தன்னெஞ்சறிந்த கர்ம முயற்சியில் உடனே ஈடுபடவேண்டும். அவர்கள் உறுதியுடன் கர்ம மார்க்கத்தில் செல்லவேண்டும். இங்கு இந்த இரண்டாவது செய்யுள் கர்ம மார்க்கத்தை பாராட்டுவதற்கே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

போதனுசிரியர் கூறுகிருர்: "உண்மையாக கர்ம மார்க்கத்தில் நடப்பதற்கு இவ்வுலகில் ஒருவன் நூறுண்டு வாழ விரும்பவேண்டுமா?" முன் செய்யுளில் தியான மார்க்கத்தைத் திறமையுடன் பின்பற்ற, செல்வத்திலும், சந்தியிலும், கீர்த்தியிலும் விருப்பமற்றவர்களால் மாத்திரம் தான் முடியுமென்று நமக்கு கூறப்பட்டிருக்கிறது. ஆனல் ரிஷிகள், சந்தியார்கள் எல்லோரும் பகுத்தறிவிலும், பற்றற்ற தன்மையிலும் ஒரே வித மனோநிலையைப்

பராமரிக்க இயலாது, முடியாது என்று உடனே அறியலாயினர். பெருமபாலோர் முக்கியமாக மிகுந்த பலமான விருப்பத்தை உடையவர்களாக இருக்கவேண்டும். அதனுல் அவர்கள் சுலபமாக அருள் நிறைந்த அப்பால் பறந்து செல்லுவதற்குத் தேவையான மனே புத்தி சமநிலையை யடைந்தவர்களாகமாட்டார்கள். அவாகளுக்கு இந்த சாசுவத போதகர் ஒரு திறமையான கர்ம மார்க்கத் தருமசாஸ்திரத்தை விதித்துள்ளார். இந்தவார்த்தைகள் "நடப்பித்தல்" "உண்மையாக" "கர்மம்" முதலிய சொற்கள் உண்மையாக சக்தி வாய்ந்ததாக இருக்கின்றன. அது மனிதனுகப் பிறந்த பிறகு வேலைசெய்வதைத் தவிர வேறு கதி கிடையாதென்று சொல்லுவதேயாகும்.

இவ்வாறு உபநிடதங்கள், பிரயாசையையும் உழைப்பையும அறிந்துகொள்ளப்படும் உயரிய சிகரத்திற்கு புகழ்ந்துவிட்டன. தொழிலின் பெருமையை ஹிந்துமத நூல்களைப்போல வேறு எந்த மதத்திலும் வெளிப்படையாக புகழப்படவில்லை. புனிதமான காரியங்களுக்காக ஒதுக்கபபட்ட சிறந்த வேலைகள் மாத்திரம் தான் மிருக மனிதனை உயரிய பண்பாடுடைய, சிறந்த ஒழுக்கமுள்ள இந்த நிலைக்குத் திருத்தக்கூடும். அது என்ன வென்று அறிந்துகொள்பவர்களுக்கு உழைப்பு ஒரு அடிமைத் தளையாகவோ அல்லது குற்றேவலாகவோ ஆகாது. ஆனல் அது வாழக்கையின் சாரம். எப்போது ஒரு கெட்ட நடத்தையுள்ள இழிவுபடுத்தும் தன்மை கொண்ட சந்ததியார், தங்களுடைய தவருன கருத்துக்கொண்ட மதாவேசத்தால், நெறிதவறி அபாயகரமான சிதைவுகளில் விழுவார்களானல் அவர்கள் "அதிக ஊதியம் குறைந்த நேரம" என்கிற குழியில் விழுகிருர்கள். அவர்களுக்கு வேலையே செய்யாமல் எல்லாப் பணத்தையும் கொடுத்தாலுங்கூட அவர்கள் பயங்கர வேதனையான

அதிருப்தி நிலையிலேயே யிருப்பார்கள். மனிதன் சோம்பேறித்தனத்தில் களியாடுவதற்கு பிறக்கவில்லை. தமோ குணமுடையவர்களை, இயற்கை சரியான மார்க்கத்தில் செலுத்துவதற்கும், தவறுன செயல்புரிவதற்கும் சாட்டையடி கொடுக்கும். அதனுல் அவனை நிலையாக நாம் முன் சொன்ன செயலற்ற நிலை அதாவது செய்கையில் செயல் புரியாமைக்கு வளர்ச்சியுறச் செய்யும்.

வழக்கம்போல நான் வழியினின்று ஒதுங்கிச் சென்று விட்டேன். ஆனுல் இந்தக்கால சந்தர்ப்பத்தில் நான் வருத்தப்படவேண்டியதில்லை. நம்முடைய யாகசாலை யானது, சர்வகலாசாலை இயந்திர விளைவுகளினுல் புறக்கணிக்கப்பட்ட பண்டிதர்களை நாகரீகப்படுத்துவதற்காக ஏற்படவில்லை. ஆனுல் அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரேமாதிரியான பரிசுத்தத்தின் குவியல்களை ஒன்று சேர்த்து புகுத்தப்படுவதற்காகவே இங்கு கூட்டப்பட்டிருக்கிறுர்கள். இதுதான் ஹிந்துமதத்தின் வியாக்கியானம்.

சிதைவுற்ற ஹிந்துமதம் கிரமமற்ற நடையுள்ள தத்துவ ஞானத்தைப் பிரசாரம் செய்கிறதென்று வேதாந்தத்தைப் புரிந்துகொள்ளும நிலைக்கு வந்துவிட்டது. இது நம்முடைய மூட நமபிக்கை. ஒருவேளை இதற்கு ஆதாரமாக இந்தக் காலத்திய பாமர பண்டிதர்களிடம் நாம் கேட்டுள்ளவைகளாகவும் இருக்கலாம். கிளிப்பிள்ளைகளைப் போல திரும்பத் திரும்ப இதிகாச புராணக்கதைகளைப் புகழ்ந்து பேசி இக்காலங்களில் இதுவே, ஞானம், படிப்பு, பாண்டித்தியம், இவைகளின் உண்மையான மேன்மையென புகழப்படுகிறது. இவ்வாறு தவருக புரிந்து கொண்ட கருத்துக்கள் ஒரு நிலையான வீழ்ச்சியை ஏற்படுத்தி நம்மை வேதாந்தத்தை அறிந்துகொள்ளமுடியாதபடி செய்துவிட்டது. மற்றும் நாம் வேதாந்தத்தைத் தவரு

கப் புரிந்துகொண்டபடியே அதன்மீது நம்முடைய முடிவான தீர்ப்பையும் கூறுவதற்கு வெட்கமில்லாதபடி நம்மை ஆக்கிவிட்டது. இங்கே வேதாந்த மூலபாட புத்தகத்திலேயே ஒரு செய்யுள் இருக்கிறது. முதலாவது உபநிஷத்தின் இரண்டாவது செய்யுளில் அது கூறுவதாவது: எவனொருவனால் மேன்மையான வாழ்க்கையானது துறவறத்திலும், தன்னடக்கத்துடனும் வாழ இயலவில்லையோ அவன் தவிர்க்க முடியாதபடி தீவிரமாக கர்ம மார்க்கத்தில் அவனுடைய முழு முயற்சியுடனும், பிரயாசை உழைப்புகளின் மூலமாக அவனுடைய விருப்பங்களைப் பூர்த்திசெய்ய வாழவேண்டும். அவன் தனக்குத் தானே கடும்பசியுள்ள பூர்ண ஊக்கத்துடன் வாழ்க்கை பூராவும் "ஒரு முழு நூறாண்டு" வாழப் பயிலவேண்டும்.

உபநிஷத்து மீண்டும் கூறுகிறது. இது உனக்குச் சரியானது. இதைத் தவிர்த்து வேறு இல்லை. மூல கிரந்தம் இது ஒன்றேதான் மார்க்கமென்று வற்புறுத்துகிறது. இதர சம்பாவியமான அல்லது கற்பனைக்குகந்த எல்லாவற்றையும் மறுக்கிறது. இவ்வாறு எவனொருவன் தீவிரமாக வாழ்க்கையில் புகுந்து, அன்றுடம் அதன் புதிய போட்டிகளை விருப்புடனும் கவலையுடனும் எதிர்க்கவும் ஒவ்வொரு தடையையும் தன்னால் இயன்றமட்டில் ஒவ்வொரு போட்டியையும் சத்தியத்துடனும், பரிசுத்தத்துடனும இவைகளையே தன்மதிப்பின் திட்டங்களாகக் கொள்ளுகிறானோ அத்தகைய ஒருவனை கர்மப் பற்று பிடிக்காது.

முடிவு, செயலற்ற துறவறமார்க்கமாக இருந்தாலும் முன்னேற்றத்தின் நிலைகள் "மிருக மனிதன்" தேவ மனித நிலையை யடைவதற்கு ஒரு மத்திய சந்திப்பான "மனித மனித" நிலை மூலமாகத்தான் ஏற்படும். மிருக மனிதன் செயல் புரியா நிலையில் கேளிக்கையாடுகிறான். முதலாவ

தாக விருப்பத்தின் நோக்கமே திட்டமாக தீவிரமாகக் கர்மம் புரிவதின் மூலமாகவும் பிறகு நோக்கமும் விருப்பமற்ற நாட்டத்துடன் ஒரு சூட்சும வாழ்க்கையின் கர்ம மூலமாகவும் அவன் மனித மனித நிலைக்கு வளர்ச்சியுறுகிறான். சுயநல உழைப்பு, தானாக சுயநலமற்ற உழைப்பில் முடிவுறுகிறது. சுயநலமற்ற உழைப்பு அதன் முடிவை அந்த மனிதனின் மனத்தையும் புத்தியையும் பரிசுத்தப் படுத்துவதில் வந்தடைகிறது. அவன் அதன் பிறகு தியான மார்க்கத்தில் ஒரு ஆரம்ப பேற்றையடைகிறான்.

புராதன வேதநூல் அமைப்பில் "கர்மா" என்கிற சொல்லானது கிரியைகள் புரிவதைக் குறிப்பதற்காக மாத்திரம் வழங்கப்பட்டு வந்தது. அதன் பிறகு இதிகாச புராணகாலங்களில் "ஆச்ரமதர்மம்" என்று வியாக்கியானம் செய்யப்பட்டது. தற்கால சந்தர்ப்பத்தில் நாம் நம்முடைய உபநிடத மூல பாடங்களை தக்கபடி சக்தியை மீண்டும் அளித்து, 'கர்மா' என்கிற பதத்தை நம்முடைய அன்றாட செயல்களான, சமூக, பொருளாதார' ராஜீய, குடும்பக் கடமைகளை எல்லாம் சேர்த்துப் பொருள் படும்படி அறிந்து கொள்ளவேண்டும். இந்தச்செயல்களைப்பற்றற்ற தன்மையுடன் மனிதர்கள் நாடுவார்களானால் அவர்களுக்கு இந்தச்செயல்களின் பிரதிபந்தம் பாதிக்காது. ஆனால் இந்தக்கடமைகள் தீர்மானமான முடிவை எதிர்பார்த்துச் செய்யப்படுமாயின் அவர்களுடைய கடமைகள் பிரதி பந்தமாக அவர்களைப் பற்றுகிறது. ஆகையால் அந்த மனிதன் புத்திசாலியாயிருந்தால் வேலையை வேலைக்காகவே பரிசுத்தமான ஊக்கத்துடன் செய்ய வேண்டும்.

பலனில் பற்றுக்கொள்ளுவது, அந்த மனிதனுக்கு வேலையைச் செய்யும் திறமையை சீர்குலையச் செய்கிறது. ஆனால் அது மனத்தில் சில சிந்தனைகளை நிறுத்துகிறது.

அவை சம்பந்தப்பட்ட மனிதனின் வருங்கால முயற்சிகளைப் பலவீனப்படுத்தி இழிவு படுத்துகிறது. பாவனையற்று இருத்தலே எழுச்சியின் இரகசியமாகும். எழுச்சியின் கீழ் செய்யப்பட்ட ஒரு காரியம் நிச்சயமாக ஒரு ஆயிரம் மடங்கு அதிகமாகத் தடை செய்ய முடியாத காரிய சித்தியுடையதாக இருக்கும். சகிப்புத்தன்மையுடன் செய்யப்படும் எல்லா வேலைகளின் இரகசியமும் அந்த வேலைகளைச் செய்பவன் அவ்வேலையிலிருந்து மேற்கொள்ளும் பாவனையைப் பொருத்திருக்கிறது. வேத நூல்கள் இங்கு பரிந்து பேசுவதென்னவென்றால், சக்தியும முயற்சியும் உடைய ஒவ்வொரு மனிதனும், களைப்பின்றி இவ்வுலகில் தொடர்ந்து இடைவிடாமல் உற்சாகத்துடன் உழைக்க வேண்டுமென்பதே.

இத்தகைய முயற்சிகளை நீண்டகாலம் பற்றற்ற தன்மையுடன் மேற்கொண்டால், பெரிய அளவில், மனமானது, விருப்பங்கள் பற்றுகள், வெறுப்புகள், சுயநலங்கள், பொறாமை, பேராசை முதலிய அதனுடைய அசுத்தங்களிலிருந்து சுத்தம் செய்யப்படுகிறது. இவ்வாறு பரிசுத்த மடைந்த மனம் மாத்திரமே ஆத்மீக உறுதியுடன், தீவிரமான உயரிய தியானத்தின் மூலமாக, தர்ம மார்க்கத்தைப் பின்பற்றுவதற்குத் தேவையான புத்தி பூர்வமான நிலையை அடைய முடியும்.

அஸூர்யா நாம தே லோகா[1]

அ[4]ந்தேன த[1]மஸா அவ்ரு[1]தாஹா :

தா[1]ம் ஸ்[1]தே ப்ரேத்[1]யாபி[4]க[3]ச்ச[2]ந்தி[1]

யே[1] கே[1] சாத்ம ஹனோ ஜ[3]னாஹா :

அவ்வுலகங்கள் சூரியனற்றவை, மறைக்கும் இருளி னல் சூழப்பட்டவை. இங்கிருந்து புறப்பட்டு ஆத்மஹத்தி செய்துகொள்ளும் எல்லோரும் அங்குபோய் சேரு கிருர்கள்.

ஆத்மீக தற்கொலை புரிந்துகொள்பவர்கள் சேருகிற இடம் அல்லது இலட்சியத்தை அடைகிறதைப் பற்றி இங்கு கூறப்படுகிறது. உபநிஷத்துகளின் உபாயங்களில் முதல் செய்யுள், துறவறமார்க்கத்தில் நடக்கிறவர் களுக்குப் போக்கையும், பயிற்சியுமான இலட்சியத்தையும் பற்றி விளக்குகிறது. இரண்டாவது செய்யுளானது தியான மார்க்கத்தைப் பின்பற்றத் தகுதியற்றவர்களுக் காகவே முக்கியமாக, கர்ம மார்க்கத்தை விளக்குகிறது. பெரியரிஷிகள் இவ்வாறு மனித இனத்தை இரண்டு பிரிவு களாக, தியானம் புரிவோர், முயற்சியுடன் உழைப்பவர்கள் என வகுத்தனர். மானிடராகப் பிறந்தவர்கள் தியான மார்க்கத்திலாவது, கர்மமார்க்கத்திலாவது, சிறந்த பெரிய மனிதர்களைப் பின்பற்றவேண்டும். கர்மமார்க்கத் தைச் சரியானபடி கடைப்பிடித்தால் அந்த மனிதன் மேல் நிலையையடைந்து, அங்கிருந்து அவன் சௌகரியமாக தியானமார்க்கத்தை ஆரம்பிக்கலாம்.

இப்போது ஒரு சந்தேகம் எழக்கூடும். தியான மார்க்கத்தையோ அல்லது கர்மமார்க்கத்தையோ பின் பற்ருதவர்களின் கதி என்ன? அவர்களைப்பற்றியும் அவர்கள் யாத்திரையைப் பற்றியும் இந்த விசேஷமான செய்யுள் விளக்குகிறது. இந்த உபநிடத பேராசிரியர்கள் கூறுவதாவது, மனிதஞக பிறந்தபின்பு, ஒரு தனிப்பட்ட மனிதன் அல்லது குலத்தவர்கள், அல்லது சமூகத் தவர்கள் அல்லது தேசத்தவர்கள், தியானவாழ்க்கை யையோ அல்லது தீவிரமான, தொடர்ந்த கர்ம மார்க் கத்தையோ மறுக்கும், அந்த மனிதன் அல்லது சமூகத்

தவர்கள் தற்கொலை செய்துகொண்டவர்களாவார்கள். அத்தகைய தேசத்தவர்கள நிச்சயமாக இருண்ட பாதாளத்தில் விழுந்து, ஏங்கித் தவிப்பார்கள். அந்த மனிதனே அல்லது சமூகமோ அதன் பிறகு தன்னுடைய பண்பாடுகளிலும ஆத்மீக உயர்விலும ஒரு பயங்கர வீழ்சசியை அடையும.

இந்த சிதைவுற்ற வீழ்ச்சியும் சாவும இஙகு, 'சூரியனற்ற உலகம' எனனும அழகான பதஙகளால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சூரியனற்ற உலகம என்பன மிகப் பழமையான சொற்கள். காலியான, ஒன்றுமேயில்லாத என்று எண்ணுவது அதனுடைய முழுக் கருத்தையும விசேஷத்தையும அறிந்துகொளளத் தவறியது தான. ரிஷிகளுடைய மொழி பழமையாகவிருந்தாலும, இன்று முற்றிலும செத்துவிட்டாலும, அது சாசுவதமான கருத்துக்களை வெளியிடுகிறது. அதனுல் அது வாழக்கையில் மாணுக்கர்களுடைய கல்வியறிவின் எழில் என்றும் புதியதாகவே இருக்கிறது. சூரியனற்ற உலகம அவசியமாக அதனுடைய கூடார்த்த சமபந்தஙகளினுல் நமமை குழப்பவேண்டியதில்லை. தறகாலத்தில் நாம சில சிதைவுறற காலஙகளையும பண்பாடுகளின் க்ஷீணத்தையும் இருடகாலமென்று பணபை விளக்கவில்லையா?

ஒரு சந்ததியார் தியான மார்க்க உயர்ந்த வாழ்க்கையின் மதிப்புகளான தெய்வீக வாழக்கையை வாழ மறுத்தால், அவர்களுடைய பயிர்த் தொழில் முயறசிகளையும் உற்பத்தித் திட்டங்களையும் ஒழுங்குபடுத்தி, குறைந்த பக்ஷம் அவசியமாக உலகினிலே உற்சாகத்துடனும ஊக்கத்துடனும உழைத்துப் போதிய அளவுக்கு உற்பத்தி செய்து, சமமாகப் பங்கீடு செய்து, தாராளமாக வழங்கி இன்புற வேண்டும. சுருக்கமாக ஒரு உலகமானது ஆத்மீக வாழ்க்கையிலோ அல்லது அதனுடைய திட்டமுள்ள

பொருளாதார ஜீவியத்திலோ முயற்சியுள்ள செய்கைகளின் மூலமாக மாத்திரம்தான் தன்னைத் தாங்கி நிற்கும்.

இந்தக் குறிப்பிட்ட, விவாதிக்கப்படுகிற செய்யுள் நம்முடைய சமூக வாழ்க்கையில், நன்ருக அறிந்துள்ள ஒரு அபாயத்தை நமக்கு தோற்றுவிக்கிறது. ஒரு ஜன சமூகம் உயரிய வாழ்க்கையை வாழ விரும்பாவிட்டாலும், பொருளாதார முன்னேற்ற திட்டங்களில் திறமையுடன் இல்லாவிட்டாலும் அத்தகைய சந்ததியார்கள் மெள்ள மெள்ள புத்தியிலும் இருதயத்திலும் தளர்வுற்று, மித மிஞ்சிய மூர்க்கத்தனமான வாழ்க்கையை அடைவார்கள். அதன் பிறகு அவர்களுக்கு மிருக தத்துவ சாஸ்திரம் இருக்கிறது. அவர்களுடைய பூர்வ தொழில் அதன் பிறகு சொற்ப வேலைக்கு அதிக ஊதியம் தேடும் பல சந்தர்ப்பங்களை வேண்டுதலில் மாத்திரமே . இருக்கும். அதிகமான சோம்பேறித்தனம், முடிவற்ற ஓய்வு, பகுத்தறிவற்ற வளர்ப்பு, தங்கள் குழந்தைகளிடமே கடமையில்லாமை, இவை ஏற்படுகிறது. இதுவே ஏதாவதொரு சமூகத்தின் ஜீவிய நிலையானல் நிச்சயமாக அந்தச் சமூகம் சரித்திரத்தின் பாதையிலே அதனுடைய ஆன்மாவை இழந்துவிட்டதாகக் கருதப்படும். அது தனக்குத்தானே ஒரு நாகரீகத்தைச் சித்தரித்துக்கொண்டு, இருட்கால துக்கங்களுக்கு அவசரமாகக் கூக்குரலிடும்.

ஒரு சரித்திர பூர்வமான உண்மை, ஒரு தனிப்பட்ட மனிதனைப் பாதிப்பதானது அத்தகைய மனித சமூகத்தின் வாழ்க்கையைப் பாதிக்கும். ஒரு தனிப்பட்ட மனிதன் நேரான வேலையில் முன்னேற்றமடைந்து அதில் தன்னை நிலைபெற செய்து என்றும் மேலுக்கு வாழ்க்கையிலே இசைந்திருக்க மறுப்பானேயானல், அவன் ஒரு முடிவற்ற களைப்புள்ள முயற்சியில் ஈடுபட்டு, ஜாக்கிரதையாகவும் உற்சாகத்துடனும் வாழ்க்கையின் கடமைகளைப்

புரிந்து உரிமைகளை வேண்டலாம. அந்த மனிதன் முன் கூறியவைகளுக்கோ, அல்லது பின் கூறியவைகளுக்கோ தயாராகவில்லாமலோ அல்லது தகுதியறறோ இருந்தால் அந்த மனிதன், செத்த பிணமாகவும, ஜட மலமாகவும், சோம்பேறித்தனத்தில் தோய்ந்தவனாகவும, மனித உருவத்துடன் வசிப்பவனாகவும, உண்மையாக ஒரு சோர்ந்து போன ஜடப்பொருள் மனிதன் மாத்திரமே, எனக் கருதப் படவேண்டும. உண்மையாக பெரிய ரிஷிகள் அத்தகைய மனித ஜந்துக்களை நடைப் பிணமாகவே கருதுகிறார்கள். அத்தகைய இழிவடைந்த புண்ணான வஸ்துக்களை இங்கு வேத நூல்களில் ஆத்ம ஹத்தி செய்தவர்களென்று கூறப்படுகிறது.

ஞானவானகள் வேத நூல்களில், ஆத்ம ஹத்தி புரியும அத்தகைய மனிதர்கள் அவர்கள் இறந்த பிறகு சூரியனற்ற உலகிற்கு செல்லுவார்களென்று வருங்கால திருஷ்டியில் கூறுகின்றனர்.

இங்கு ஒரு தெளிவான குறிப்பு கீழ்நாட்டு பெரிய சமயங்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட மறு பிறவிக் கொள்கை இருக்கிறது. ஆத்மாவின் மறு பிறவி கேள்விக்கிடமில்லாமல் மேல் நாட்டு வேத நூல்களில் ஒப்புகொள்ளப்படுகிறது. இங்கு வேத நூல்கள் தெளிவாக இறந்த பிறகு அந்த ஆத்மாவின் வாழக்கையைப் பற்றி குறிப்பிடுகிறது.

நான் என்பதின் மத்தியத்தின் சாதனம், இந்த ஸ்தூல சரீரத்தை விட்டு இறக்கும் தருவாயில் பிரிந்ததும் அதன் பிறகு, அதனுடைய சொந்த சிந்தனைகளின் ஊக்கத்தினால் உதவப்பட்ட எண்ணங்களால், தூண்டப்படுகிறது. மனமானது முன் அநுபவங்களிலிருந்து சேகரம் செய்யப்பட்ட சிந்தனைகளிலிருந்து ஒரு வேகத்தையும்

சக்தியையும் முன்னே செல்ல சேகரித்துக் கொள்ளுகிறது. இவ்வாறு ஒருவன் தூக்கத்திலும், சோம்பலிலும் வாழ ஏற்பட்டால், அது சூட்சும தியான முயற்சியிலோ அல்லது ஸ்தூல உலக பிணக்குகளிலோ முயற்சிக்காமல் அது தன்னை மிருக ஜீவியத்திற்குச் சீரழிக்கிறது.

இவ்வாறு 'மனமானது சரீர உணர்விளின்று விடுபட்டு, எண்ணங்களாலும், ஊக்கத்தினுலும் தூண்டப்பட்டு ஜீவியத்தின் கீழ்த்தர நிலையான மிருக உலகம் அல்லது தாவர உலகம் அல்லது கல்லின் ஜீவிய உலகத்தில் மூழ்குகிறது. இந்த ஜீவர்கள் அல்லது வஸ்துக்களின் மேற்படலங்கள் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து சூரியனற்றவையே, ஏனென்ருல் அவைகள் அறிவற்றதின் அடுக்குகளே. சூரியனே ஜோதி, அறிவு. சுருக்கமாக, எப்போது ஒரு மனிதன் ஆத்மீக மார்க்கத்தையும் உலக சம்பந்த முயற்சிகளையும் புறக்கணிக்கிருனே அந்தச் சோம்பேறி மெய்மறந்து தன்னையே அழித்துக் கொள்ளுகிருன். ஒரு மனிதன் அழிவதுபோல இந்த மாதிரியான வாழ்வையே வாழுகின்ற தேச மக்களுக்கும், சமூகத்தார்களுக்கும் மொத்தமாக இதே தலைவிதிதான் ஏற்படும்.

அனேஜதேகம் மனஸோ ஜவீயோ

நைனதேவா ஆப்னுவன் பூர்வமர்ஷத்

தத்தாவதோ அன்யன் அத்யேதி

திஷ்டத் தஸ்மின்அபோ மாதரீஷ்வா ததாதி

ஆத்மா அசைவற்றது. மனதைவிட வேகமுள்ளது. தேவர்களும் அதைத் தாண்டிவிட முடியாது. அது அவர்களுக்கும் முன்னல் ஓடிவிட்டது. உட்கார்ந்து கொண்டே

அது அதனிடத்து ஓடி வருபவர்களைவிட வேகமாகப் போகிறது. அதனால் மதரிஸ்வன் எல்லா உயிர் வாழும் ஜீவர்களுடைய முயற்சிகளையும் ஆதரிக்கிறது.

இந்தச் செய்யுளிலிருந்து நான்கு மந்த்ரங்கள் தொடர்ச்சியாக அதனுடைய தன்மைகளின தரத்தின்படி குறிப்பிடப்பட்ட பரமபொருளின் வர்ணனைகள் உள்ளன. சாசுவதமான பரமபொருளுக்குச் சொந்தமான தன்மைகள் இல்லாவிட்டாலும, பாஷையானது, குணங்கள் அல்லது அநுபவங்களின் முறையிலே மாத்திரம்தான் விவரிகக முடியும. ஆத்மாவின் தன்மைகள் இஙகு குறிப்பிடப்படுகின்றன. ஆனால் அவைகளை இங்கு சொல் அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளக்கூடாது. நிச்சயமாக எல்லையறறதை, எல்லையுள்ளதின் பாஷையில் விளக்குவது வியர்த்தமான முயற்சியே. பாஷையினால் சொல்ல முடியாததைச் சொல்ல இயலாத தன்மையை உபநிஷத்தானது ஆத்மாவைப் பற்றி இந்த நான்கு செய்யுள்களில் விளக்க முயற்சித்ததானது அந்த பாஷையிலேயே அதிகபபடுத்தப்பட்டு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

“ஆத்மன்” அல்லது “அகம்” அசைவற்றது என்று உபநிஷத்து கூறுகிறது. அது அசைவறறது என்று சொல்லும்போது பரமபொருளின் இயலாத் தன்மை அல்லது சக்தியற்றது என்று விவரிப்பதாகப் பொருள் கொள்ளக் கூடாது. “அசைவற்றது” எனற பதம பரம் பொருளான சத்தியத்தின் எங்கும வியாபித்திருக்கும் தன்மையை மாத்திரமே குறிப்பிடுவதாகும.

அசைவு, காலத்திலும இடத்திலும ஏற்படும மாறுதல். நான் இந்த நாறகாலியிலிருந்து மற்றொரு நாற்காலிக்குச் செல்லலாம. மறற நாற்காலியில் நான இப்போது அமர்ந்திருக்கவில்லை. ஒரு வஸ்து, அந்தக்

குறிப்பிட்ட இடத்தில் இடங்கொள்ளாமலிருக்கும்போது மாத்திரம்தான் அது மற்றொரு இடத்திற்குச் செல்லக் கூடும். நான் இந்த நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் போது நான் இதே நாற்காலியினுள்ளே செல்ல முடியாது. ஏனென்றால் நான் இந்த நாற்காலி பூராவையும நானே அடைத்துக் கொண்டிருக்கிறேன். அதுபோலவே ஆத்மா அசைய முடியாது. ஏனென்றால் அது எங்கும நிறைந் திருக்கிறது. எங்கும் நிறைந்துள்ள சத்தியம எங்கும் அசைய முடியாது. ஏனெனறால் அது நிறைந்தில்லாத இடமேயில்லை. இந்தக் கருத்தை இங்கு "அசைவற்ற" என்ற குணத்தால் குறிப்பிடப்பட்டு இங்கு பெரிய ரிஷி களால் வழங்கப்பட்டுள்ளது.

உபநிஷத்து, ஆத்மாவானது மனதைவிட வேக முடையதென்று உறுதி கூறுகிறது. அசைவை மறுப் பதனல் வேகம என்னும் அதனுடைய அசைவின் அளவை மறுக்கவில்லை. உலகினிலே மனமே அதிக வேகமுடையது. ஆனால் ஆத்மா இன்னும் வேகமாக ஓடுகிறது. ஏனென்றால் மனமானது அதனுடைய சிந்தனையில் அது உருவமாக நிலைத்திருக்கும் இடத்தை அடையு முன், மனம் போய் சேருமிடத்திலே முன்ன தாகவே அந்தச் சத்தியம் அங்கே இருக்கிறது. இந்த நிமிடம் சிந்தனையில் நீ முன்பு சென்றிருந்த தொலைவி லுள்ள இடத்தைக் காணலாம். அந்த நினைவு நிச்சய மாக முன் அநுபவமுள்ள அந்த இடத்துக்கு ஒரு க்ஷண நேரத்தில் செல்லலாம். ஆனால் நினைப்பு அந்த இடத்தை அடையு முன்னே அந்த இடம் நிலைத்திருக்கும தத்துவத் தினல் அல்லது தன்மையினல் முன்னதாகவே அருளப் பட்டிருக்கிறது. இவ்வாறு மனமானது எக்காலத்தும் அது எய்கிற அம்புப் பாய்ச்சலில் அடையுமிடத்தைச் சத்தியமானது முன்னதாகவே அடைந்து விட்டதாகக் காணப்படுகிறது.

சுருக்கமாக ஆத்மாவானது எங்கும நிறைந்ததென்று விவாதிக்கப்படுகிறது. நாம உலகப் பொருள்களில் ஒரு வஸ்துவை அறியும முறையில் இரண்டு விதங்களில் அது தெளிவாக்கப்படுகிறது. நாம அசைவை அறிகிரும. வேகத்தை அறிகிரும. முன கூறிய அசைவை மறுத்து பின கூறிய வேகத்தை வறபுறுத்தலுடன் ரிஷிகள் நமக்குத் தனனறிவு அல்லது ஆத்மா ஒரு குணுஙகம; அது தனக்குத் தானே 'அசைவறற வேகமா' யிருக்கிறது என்று நமககு விவரித்துக் கூறுகினறனர். இது ஒரு சாஸ்திரீயமான உண்மை. ஆனல் ஒரு நிபந்தனையின மறுப்பு. ''எஙகும நிறைந்த'' என்ற எளிய பதத்தின் மகத்துவத்தையும, சமபந்தத்தையும, நமமுடைய உண்மைக்கு வேடடையாடும புத்தியையும, ஆராயும தாக அறிதலையும கொண்டு, உறறு அறிவதற்குத் திடுக்கிடக் கூடிய ஒரு வழி மாத்திரமதான உள்ளது. தன்னறிவு எஙகும நிறைந்திருப்பதால் அதனல் அசைய முடியாது. இவ்வுலகில் அசைவுள்ள எதுவும தனனறிவின சாதன மினறி அசைய முடியாது. இந்தக கருத்தானது செய்யுளின் முதல் வரியில் ஊனறிச் சொல்லப்பட்டிருக்கிறது.

''தேவர்களும அதை முந்த முடியாது. அது அவர்களுக்கு முந்தியே ஓடிவிடுகிறது.''—இது ஒரு வாக்கு மூலம். இது அவசியம ஒரு சாதாரண படிப்புள்ள புத்தி நுட்பமான படிப்பாளியைககூட கலக்கிவிடும. இத்தகைய வாக்கு மூலங்கள் ஒரு ஆயத்தமறற மாணுக்கன, சொல் அர்த்தத்துடன் அறிந்துகொள்ள முயறசிக்கும்போது இந்தப் பெரிய வேத நூல்களைத் தெரிந்துகொள்ளுவதற்குத் தகுதியற்றவனென்று சஞசலமடையுமபடி செய்துவிடுகிறது வேதநூல் மத சாஸதிரங்கள். அதைப் படிப்பதறகு ஒரு ஒழுஙகு உண்டு. இதன பாஷைகள் சாஸதிரார்த்தமானவை.

'தேவர்கள்' என்ற சொல் அதன் சொல் இலக்கண உற்பத்தியில் 'பிரகாசம்' என்பதைக் குறிக்கும் மூலத்தி லிருந்து உதித்தது. இவ்வாறு தேவர் என்னும் சொல் பிரகாசமாக உள்ளதைக் குறிக்கிறது. ஆகையால் இந்தச் சந்தர்ப்பத்தில் தேவர்கள் என்றால் இந்திரியங்கள் என்று பொருள். வேத நூல்களில் வார்த்தைகள் இந்த அர்த்தத்துடன் பன் முறை வழங்கப்படுகின்றன.

இவ்வித அர்த்தத்துடன் 'தேவர்கள்' என்னும் சொல்லை நாம் செய்யுளில் மீண்டும் படிக்கும்போது அதன் அர்த்தம் மிகவும் தெளிவாகப் புரிகிறது. இந்திரியங் களால் ஆத்மாவை முந்த முடியாது. இந்திரியங்களால் அதனுடைய பொருள்களைக் கிரகிக்க மாத்திரம்தான் கூடும். பொருள்கள் சத்தியத்தின் சாதனங்களில் மாத் திரம்தான் இருக்கவும நடைபெறவும் இயலும். இந்திரி யங்கள் எப்போது அவைகளுடைய பொருள்களைக் காண முடிகின்றனவோ அப்போது அவைகள் தன்னறிவின் தலத் திலே மாத்திரம்தான் நடைபெறும். தன்னறிவை எடுத்துவிட்டால் இந்திரியங்கள் செயல் புரியவோ, நடை பெறவோ இயலாமையையே தெரிவிக்கும்.

"உட்கார்ந்துகொண்டே அது தன்னிடம் ஓடி வருப வாகளைவிட அதிக வேகமாகச் செல்லுகிறது."—இங்கு மற்றொரு குண விஸ்தரிப்பு இருக்கிறது. இதனால் உபநிடதங்களின் சோபையுள்ள வார்த்தைகளைத் தேட்டு வோர், தங்களுடைய ஈடு செய்ய முடியாத வார்த்தை களின் பின்னல்களால் ஆத்மாவை தந்திரமான, மனோ மயத்தால் பற்றுவதற்கு முயற்சித்துள்ளனர். 'அசை வற்றது' என்பது இவ்வாறு ஒரு மந்த ஜட வஸ்துவல்ல. அது செயலற்றதுமல்ல. உண்மையாக செயல் உள்ள தற்கும் செயலற்றதற்கும் அப்பாற்பட்டது. ஆத்மா அதனுடைய உண்மை இயற்கையில் செயலற்றதாகக்

காணப்பட்டாலும், மிகச் செயல் உள்ளதாகவே காணப் படுகிறதென்று கூறுவதால் இந்தக் கருத்தானது தெளி வாக்கப்படுகிறது. ரயில்வே இஞ்சினிலுள்ள நீராவியா னது அதனுடைய இயற்கையில் அசைவற்றதென்று விளக்கப்படலாம். தண்ணீர் வற்றி நீராவி உண்டாகி றது. நீராவி ரயில் வண்டியை அசைவுறச் செய்கிறது. ரயில் வண்டி நீராவியின் சக்தியினால்தான் இழுக்கப்படு கிறது. நீராவியானது இவ்வாறு தன்னிடம் ஓடிவரும் வண்டித் தொடர்களைவிட அதிக வேகமாக ஓடுவதாக தெளிவு படுத்தலாம்.

ஆத்மா, இவ்வாறு எங்கும் நிறைந்திருப்பதுடன் எல்லா அசைவுகளின் சக்தியுமாகும். எல்லாவற்றிற்கும் பின் நிற்கும் சக்தி. இதுவே வாழ்க்கையினுடைய செயல்களின் ,காரணம். ஆத்மாவின் தலைமையின் கீழ் மாத்திரம்தான் வாழ்க்கையின் எல்லா விவகாரங்களும் நடைபெற முடியும். இந்தக் கருத்தானது இவ்வளவு நுட்பமாக இந்த செய்யுளின் கடைசி வரியில் உள்ளபடி வெளிப்படுத்தப்படவில்லை. ரிஷிகள் மதரீஸ்வன் அதா வது வாயு மண்டலத்தின தேவன், காற்று, வாழ்க்கை யின் செயல்களை யெல்லாம் நடைபெறச் செய்கிறான். ஏனென்றால் அது ஜீவிய சக்தியையும் வீரியத்தையும் இந்தப் பெரிய எங்கும் நிறைந்த சத்தியத்தினிடமிருந்து பெறுகிறது. தன்னறிவும் ஜீவனும் ஒரு முழுமை. அது எங்கும் சமமாகப் பரந்திருக்கிறது. அது எங்கும் நிறைந்தது. எங்கு ஜீவன் நிலை பெற்றிருக்கிறதோ அது அந்த ஜீவன் தன்னையறிந்து வாழ்வதற்கே. ஆகவே பரம்பொருளே மூலாதாரம். அங்கிருந்து காற்று தன் னுடைய சக்தியைப் பெறுகிறது. அதனால் அது ஜீவனை எல்லா உருவங்களிலும் நிலை பெற்றிருக்கவும், வளர்க்கவும், பராமரிக்கவும் அற்புதமான வல்லமையை

அடைகிறது. இதே கருத்து—இன்னும் அதிக நுட்ப மாகத் தொடரும் செய்யுட்களில் வெளியாக்கப்படுகிறது.

1 3 3 1 1 3 1
ததேஜதி தன்னைஜதி

4 1 3 1 1
தத்தூரே தத் வந்திகே

1 3 1
ததந்தரஸ்ய ஸர்வஸ்ய

1 3 3 1
தது ஸர்வஸ்யாஸ்ய பாஹ்யாதஹ ||

ஆத்மா அசைகிறது. அது அசைகிறதுமில்லை. அது தூரத்திலிருக்கிறது. அது சமீபத்திலும் இருக்கிறது. அது இவைகள் எல்லாவற்றினுள்ளும் இருக்கிறது. அது இவைகளெல்லாவற்றிற்கும் வெளிப்புறத்திலுமிருக்கிறது.

கடைசிச் செய்யுளின் கருத்தானது இங்கு அதை மிகவும் விஸ்தாரமாகத் தெளிவு படுத்துவதற்காக மீண்டும் கூறப்பட்டுள்ளது. நான் முன் கூறியதுபோல, ஆசிரியரின் முயற்சியானது அவருடைய மாணாக்கர்கள் ஜீவிய சத்தியத்தை, அதாவது பரம்பொருளான தன்னறிவு எங்கும் நிறைந்ததென்று அறிந்து கொள்ளுவதற்காக மாத்திரமே. 'எங்கும் நிறைந்தது' என்ற பதத்தின் முழு விசேஷத்தையும் நமக்கு அறிவிப்பதற்கும், அந்தப் பதத்தின் கரு கொண்ட கருத்தை நம் அனுபவத்தில் எளிதாக்குவதற்கும், இந்த ஆசிரியர் மீண்டும, மீண்டும் பலவித தொடர் மொழிகளைக் கொண்டு இதே உண்மையை எடுத்துக் காட்டுகிறார்.

"அது அசைகிறது"—ஆம். அந்தப் பேய் அதனுடைய சூன்ய கைகளினால் சைகை காட்டுகிறது

அதன் பயங்கர முகத்துடன் மயங்கி யிருப்பவனிடம் இளிக்கிறது. இருட்டில்... பேயின் தோற்றத்திற்குப் பின்னுல் உண்மையில் இருப்பது அந்தக் கம்பம்தான். அது அசைவதில்லை. 'பரிசுத்த அறிவு' அல்லது தன்னறிவு, எல்லா ஜீவன்களிலுமுள்ள ஜீவ தத்துவம். அதனுடைய எங்கும் நிறைந்த முக்கிய இயற்கை, அசைவதோ அல்லது செயல் புரிவதோ இல்லை. அதனுடைய கீர்த்தியிலே நிலை பெற்று அது தன்னுடைய சுய நிலையில் களியாடுகிறது. ஆனுல் பொருளானது ஜீவனின் இயக்கத்தால் அசைவு ஏற்பட்டு படபடத்து தூண்டப்பட்டு, அசைகிறது, செயல் புரிகிறது, நிறைவேற்றுகிறது, இன்புறுகிறது.

அலைகளைக்கொண்டு கடலானது உல்லோலமிடுகிறது, பொங்குகிறது, கொந்தளிக்கிறது, முழங்குகிறது என்ற பதங்களைக் கூறலாம். ஆனுல், அதன் உண்மை சுபாவத்தில் கடலானது அலைகள் மாத்திரமல்ல. அது அமைதியாகவும், சாந்தமாகவும், சலனமற்றும், கம்பீரமாகவும், அதனுடைய ஆழமற்ற சாந்தியுடனும், அமைதியுடனும் இருக்கிறது. அதுபோலவே வாழ்க்கையும், ஆத்மாவும் அதனுடைய எங்கும் நிறைந்த சுபாவத்தில் அசைவற்று இருக்கிறது. அது செயல் புரியவோ அல்லது வேலை செய்வதோ இல்லை. அதைச் சுற்றியுள்ள பிரகிருதியின் சுற்றுதல்களால் வாழ்க்கையானது அதனுடைய நினைவுகள், உணர்ச்சிகள், ஸ்தூல செயல்களால் விளக்கப்படலாம். படகுதான் அசைகிறது. ஏரி அல்ல.

ஒரு நிலையத்தில் ஒரு ரயில் வண்டியில் உட்கார்ந்துகொண்டு அந்தப் பிரயாணி ஜன்னல் வழியாக, சம ஒப்பாகச் சென்றுகொண்டு இருக்கும் ரயில் வண்டியைப் பார்த்து, தான் இருக்கும் வண்டியே அசைவதாக உணர்ச்சி அடைகிருன். அசையும் ஒரு குணங்கத்தைப்

பற்றி அசைவற்றதானது, அது அசைவற்ற நிலையில் இருந்தாலும் அசைவதாகக் காணப்படும். சென்று கொண்டிருக்கும் ஒரு படகின் மேற்தட்டிலிருந்து கொண்டு பார்த்தால் கரையிலுள்ள மரங்கள் செல்லுவதாகக் காணப்படும். தோற்றங்கள் எப்போதும் மற்றொன்றுடன் சம்பந்தப்பட்டவை. அது போலவே அசைவற்ற ஜீவத் தன்மையினின்று சலனமுள்ள உலகத்தை (வெளிப் பொருள்களை) நோக்குமிடத்து, ஆத்மாவானது அசைவது போலத் தோன்றுகிறது. ஆனல் அதன் உண்மையான சுபாவம்—அது அசைவற்றது.

அது தூரத்திலிருக்கிறது. அது சமீபத்தில் இருக்கிறது :—"எங்கும் நிறைந்திருப்பதன்" விளக்கம் இதுவே. இந்தியா தேசமானது இங்கு டெல்லியில் மாத்திரம் இருக்கவில்லை. அது அங்கே கன்னியாகுமாரியிலுமிருக்கிறது. இந்தியா தேசம் இந்தத் தேசத்தின் எல்லைகள் சம்பந்தப்பட்ட வரையிலும் எங்கும் நிறைந்தது. அது போலவே, பரிசுத்த தன்னறிவு, பரம் பொருளான சத்தியம் எங்கும் வியாபித்திருப்பதால் அது ஒரு முறை சமீபத்திலுமிருக்கும், மற்றும் வெகுதூரத்திலுமிருக்கும்.

ஆத்மாவையும், பிரகிருதியையும், சரியானபடி பகுத்தறிந்து கொள்ளப் போதிய தகுதியுள்ள புத்தியும், இருதயமும், போதிய ஆத்மீக தாகமும்,தெய்வீக சக்தியும், உடையவர்களுக்கும், சளைக்காமல் தியானத்தின் மூலமாக ஆராய்ச்சி மார்க்கத்தில் ஈடுபடுவோருக்கும், ஆத்மாவானது அவருடைய தனிப்பட்ட தன்மையின் மத்தியத்திலேயே இடங்கொண்டு அருகிலேயே இருக்கிறது. உண்மையில் நமக்கு மிகவும் அருகிலே யிருப்பது நம்முடைய ஆத்மாதான். அதைத் தவிர வேறொன்றுமில்லை. ஆனல் மற்றவர்களுக்கோ "சத்தியமானது" அவர்கள்

அனுபவிக்கும் தன்மைக்கு வெகு தூரத்தில்தான் இருக்கிறது.

இந்த ஆத்மா, நமமுடைய தனிப்பட்ட ஜீவனின் மத்தியில் மாத்திரம இருப்பதாக அறிந்து கொள்ளுவது மாத்திரமினறி, அது எங்கும அப்படியேதான், என்று அநுபவத்திலுமிருக்க வேணடும. பரிசுத்தத் தன்னறிவு ஒரேவிதமாக எங்கும நிறைந்தது. ஆகையால் இங்கு அறிந்த ஆத்மாவும, அனுபவத்தில் அஙகுக் களியாடும ஆத்மாவேதான.

இந்தக் கருத்தானது மீண்டும வெகுத் தெளிவாக இந்தச் சொற்களில் வெளியாக்கப்படுகிறது. 'அது இவைகள எல்லாவற்றுளளும இருக்கிறது. இது இவைகள் எல்லாம இல்லாமலுமிருக்கிறது' ஆத்மா வானது, ஆளபவனின் ஆத்மீக ஸதூல தன்மையின் மத்திய அகமாக இருப்பதுடனல்லாது, அதே தன்னறிவானது உலக காட்சிகள் முழுவதற்கும ஆதாரமாகவுமிருக்கிறது. இந்த ஆத்மா, உள்ளே மாத்திரமதான் இருப்பதாகக் கருதி, பரிசுத்தமான உள் நினைவுடன் வாழ்வது சத்தியத்தை மறுப்பதாகும. இது இந்துமத வேத நூல் கொள்கைகளில் கண்டிக்கப் பட்டிருக்கிறது. இவ்வாறு, வேத 'நூல்களை அறிந்தவர்கள் இந்து மதத்தை உட்புறம மாத்திரம பார்க்கும மதமெனறு குறை கூறத் துணியமாட்டார்கள்.

"உண்மையாக ஈசாவாஸ்ய உபநிஷத்து பூராவும் வெளிப்படுத்துவதானது "உண்மை" இந்து வெளி உலகத்தில் அவனுடைய வாழ்க்கையைப் புறக்கணித்து தேசத்தின பொதுமக்களுடன் தன்னுடைய உறவையும, தன்னைச் சுற்றிலும நிகழ்பவைகளையும முற்றிலும் புறக்கணித்து சுத்தமாய் தன்னிலேயே முக்கியம கொள்ளும

தன்மையைத் தவிர்ப்பதற்கான முறையீடு. இது வேதாந்தத்தின் சாராம்சமாக இராவிட்டால், வியாசர் சிறந்த தன்மைகளை உடைய ஸ்ரீ ராமசந்திரர், ஸ்ரீ பார்த்த சாரதி முதலிய லக்ஷண பூர்த்தியுள்ளவர்களை ஒரு உண்மையான இந்து சமூகத்திற்கு அளித்தபோது அவர் இந்து மத பண்பாட்டிற்கு வேண்டுமென்றே தீங்கிழைத்த குற்றவாளி ஆகிறார். அவர்கள் தங்களுடைய சொந்த, குடும்ப, இன, தேச, சர்வதேச சூழ்நிலைகளின் எதிர்முக மாக நின்று செயல் புரியும் துறைகளில் திடமாகச் செய லாற்றினர். அவர்கள் வாழ்க்கையினின்றும் ஓடிவிட வில்லை. ஆனாலும் அவர்கள் வாழ்க்கையை விருப்புடன் வரவேற்கவில்லை. வாழ்க்கை அவர்களை அடைந்தவுடன் தங்களுடைய பொறுப்புகளை உதறித் தள்ளிவிடவில்லை. ஆனால், உண்மையுடனும், சிரத்தையுடனும், முழுவதும் நடப்பித்தனர். குழப்பம், ஒழுங்கின்மை, மலைப்பு ஆகிய இவ்வித சூழ்நிலைகளிலும் அவர்கள் இசைந்த நாத கீத முள்ள நிலையான வெற்றியை உருவாக்கினர்.

. உபநிஷத்துகளில் நீங்கள் ஒரு மனிதனை அநேகத் துவமுள்ள துறைகளில் (அவித்யா) நடக்க அழைப்பதை யும், அது பெரிய நிறைவேறுதலுக்கு மார்க்கமாக (வித்யா) இருப்பதையும், ஆத்மா (வித்யா) தன்னைப் பூரணப்படுத்திக்கொண்ட பிறகு உலக சேவை, முயற்சி (அவித்யா) இவைகளில் அவனுடைய வாழ்க்கையை நீங்கள் காணலாம். நாம் மேலே அந்த மந்திரங்களைச் சொல்லும்போது மீண்டும் அதனிடம் வருவோம்.

யஸ்[1]து ஸர்வாணீ[4] [1] பூதானி

ஆத்மன்யேவானு [1] பஷ்யதி [1] |

4 1 1
ஸர்வ பூதேஷு ச ஆத்மானம்

1 1 3 3 1 1
ததோ ந விஜுகுப்ஸதே ||

எவனொருவன் இடைவிடாமல் எங்கு நோக்கினாலும் தன்னிலேயே எல்லா ஜீவன்களும் நிலைபெற்றிருப்பதை யும் எல்லா ஜீவன்களிலும், உருவங்களிலும் தன்னைக் காண்கிறானோ அவன் எதனிலிருந்தும் பின்னடைவ தில்லை.

முன் செய்யுளில் கூறியுள்ளதுபோல் விளக்குவதற்கு மிகவும கடினமானதும, இயற்கையாகவே அறிவதற்கு மிகவும கடினமாக ஆத்மா இருக்குமானால், அந்த ஆத்மா வுடன் தொடர்பு ஏற்படுத்தவோ அல்லது அதை அறிந்து உணரவோ ஏன் பிரயாசைப்பட வேண்டும்? நம்மைச் சுற்றிலும சூழ்ந்து இருப்பதாக அறியும திரளுக் கும, பன்மைகளுக்கும பின (மறைவில்) இருக்கும் ஒரே தன்மையானதும, எங்கும நிறைந்துள்ளதுமான உண் மையை அறிந்துணருவதால் ஓர் தனி மனிதன் என்ன பேற்றை (நன்மையை) அடைகிறான்? இந்தச் செய்யுள், தனையறிந்த ஞானி அடையும பரிபூரணத் தன்மையாகிய நிலையைப் பற்றி வேறு உபநிடதங்களைவிட மிகவும் நுட்ப மாக விளக்குகிறது. அதனால் இந்தச் செய்யுள் புத்தகங் களிலும் மேடைகளிலும் அடிக்கடி எடுத்துக் காட்டி மீண்டும் மீண்டும் பேசப்படுகிறது.

சாதகர்கள் அனைவரும் இந்தச் செய்யுளை இடைவிடா மல் தங்கள் மனதில் அதன சமபந்தம, கருத்து இவற் றுடன் நினைவில் வைத்துக்கொள்வது உண்மையில் மேன்மையானதுதான். சமஸ்கிருத மொழியை அதிக மாக அறியாதவர்களும எவ்வாறாவது இந்தச் செய்யுளை மனப்பாடம செய்துகொண்டு, ஒலியின் மூலம பொருளின்

தொடர்பை அறிந்துகொண்டு மனக்கலக்கம், புத்தியின் சலனம் ஆகிய உள் விஷங்களுக்குத் தயாரான மாற்று மருந்தாக வைத்துக் கொள்ளலாம்.

தன்னை அறிதல், பன்மை உலகிலுள்ள கணக்கற்ற ஆத்மாக்களைப் புறக்கணித்து, தனி மனிதனுடைய இயல்பான தெய்வீகத்தையோ அல்லது பரிபூரணத் தன்மையையோ அறிவதால் மாத்திரம் முடிவடைந்து விடுவதில்லை. ஒருவரது ஆத்மாவை அறிவது என்பது, எல்லா ஆத்மாக்களுடனும் அதன் ஏகத்துவத்தை அறிதல். ஓர் அலையின் இயற்கையை அறிதல், எல்லா அலைகளின் இயற்கையையும் அறிவது மாத்திரமின்றி கடலின் இயற்கையையும் அறிவதாகும். வாழ்க்கை ஒன்றாகவும், இடைவிடாததாகவும் இருப்பதனால், நம்முள் உள்ள ஜீவ மத்தியத்தைக் கண்டறிதல் என்பது எங்கும் உள்ள ஜீவ மத்தியங்களை ஒரே சமயத்தில் அறிவதுதான்.

தன்னுள் இருக்கும் வாழ்க்கையின் தத்துவமான ஆத்மாவை எங்கும் நிறைந்ததாக முற்றிலும் உணர்ந்த மனிதனது தன்னறிவுதான் ஒரு மனிதனின் உண்மையான அறிவு. சர்சுவதமானது, நித்தியமும் உண்மையுமானது. எல்லா ஜீவராசிகளிடமும் உள்ள அகத்தைத் தன்னிலுள்ளதாகவும், தன் ஆத்மாவை மற்ற ஒவ்வொரு பெயரிலும், உருவத்திலும் உள்ள ஆத்மாவாகவும் உணருபவன், ஓர் ஞானி, தீர்க்கதரிசி, தெய்வீக மனிதன், மக்களது உண்மையான தலைவன், உலகிற்கு வழி காட்டும் சக்தி. இவ்வாறு அறியும்போது, அந்த மனிதன் விருப்பமின்மை, பின்னிடுதல், வெறுப்பு, பயம், அருவருப்பு, மற்றும் உணர்ச்சிகளின் மாறுபாடு ஆகிய தன் மனத்தின் தாறுமாறான எண்ணங்களிலிருந்து நிரந்தரமாக விடுவிக்கப்படுகின்றான். இவை பிரிவு, (பகுதி) பன்மை, நம்மைச் சுற்றியுள்ளவர்கள் அல்லது பொருள்களிடம் ஏற்படும்

எதிர்ப்புத் தன்மையின் பயனால் எழுகின்றன. மனதினது ஜுகுப்ஸா மனதிலிருந்து காய்ந்துவிட்ட பிறகு தனி மனிதன் உலகத்தின் மொழிகளில் அனுகூலம், பிரதி கூலம் எனக் கூறப்படும் எல்லா சூழ்நிலைகளிலும் தொடர்ச்சியான அமைதியான நிலையை அனுபவிக் கின்றான்.

மனதின் இதே நிலை கீதையில் ''ஸமத்வ'' என்ற பதத்தினால் விளக்கப்படுகிறது. ஸ்ரீ அரவிந்தர் தம் ஈசாவாஸ்யோபநிஷத்தின் குறிப்பில் இந்தக் கருத்தை மிகவும் உயிர்ப்பாய் விளக்குகின்றார். 'ஜுகுப்ஸா' என் பது ஒருவனது எல்லைப்பட்ட, தன் அமைப்பிற்கும் வெளி உலக சம்பந்தத்தால் தொடரும் எதிர்ப்பாகிய வருத்தம், பயம், பகை, சஞ்சலம், துன்பம் ஆகியவற்றிற்குமிடையில் ஒற்றுமை தேவையின் காரணத்தால் ஏற்படும ஓர் அரு வருப்பான உணர்ச்சி. இது விருப்பம், பற்று இவற்றின் மூல ஸ்தானமாகிய கவர்ச்சிக்கு முற்றிலும் மாறுபாடா னது. விருப்பமின்மையையும் கவர்ச்சியையும் நீக்கிய பிறகுதான் சமத்துவத்தை அடைகிறோம்.

முக்கியமாக தன்னுடைய சித்த சலனத்தினால் தான் ஒரு மனிதன் பிணக்குகள் நிறைந்த உலகில், சக்தியற்றவ னாகவும், பயனற்றவனாகவும் காணப்படுகிறான். அமைதி யான மனதானது கடவுளைப் போன்ற சக்தி வாய்ந்தது. நாம் எவ்வளவு சமத்துவத்தை அடைகின்றோமோ, நம் வாழ்வு அவ்வளவு ஆனந்தம் நிறைந்ததாகவும் பயனுள்ள தாகவும் ஆகிவிடும். ஆனால் இந்த அமைதியின் விரோதி நம்முடைய ஜுகுப்ஸாதான். அதனால் ஒருவன் தன் மனத்திலிருந்து ஜுகுப்ஸாவை மட்டும் புறக்கணித்து ஆத்ம தத்துவத்தை மேற்கொண்டால் எம்மட்டும் அவன் கடவுள் தன்மையை அடைவான் என்பதை நாம் எளிதாக அறியலாம்.

அருவருப்பு, விரோதம், பின்னிடுதல், வெறுப்பு, பயம் முதலானவைகள் தனித்து வருவதில்லை. ஆனால் மற்றொன்றுடன் வரும். அறிவுக்கடுத்த 'நான்' மனதுக்குரிய 'என்னை' ஒரு குறிப்பிட்ட காலத்திலும், இடத்திலும் வெறுக்க பயப்பட அல்லது விரோதிக்கக்கூடும். ஆனால் இங்கும்கூட ஒரு பன்மை மனோபாவம் இருக்கிறது. மற்றது ஜுகுப்ஸாவுக்கு அவசியமானது. ஆனால் அறிந்துகொண்ட போதும் ஆத்மாவின் ஏகத்துவத்தை அனுபவிக்கும்போதும், நாம் மேலும் மேலும் அந்த அனுபவத்தில் நிலை பெற்றிருக்கும்போதும் ஆத்மாவைத் தவிர மற்றொன்று எவ்வாறு அங்கு இருக்க முடியும்?

'மற்றது' என்பது பின்னிட்டதும் மனத்தின் விகாரமாகிய ஜுகுப்ஸாவும் மனதிலிருந்து மறைந்து விடுகிறது. பெரிய ரிஷிகளால் குறிப்பிடப்பட்ட மகத்தான பரிசுத்த நிலை இதுதான். உலகிலுள்ள ஏனைய எந்த மதத்திலும் இந்த சாஸ்திரீயமான உண்மை, வேதாந்தத்தில் விளக்கப்பட்டுள்ளபடி அவ்வளவு நுட்பமாகக் கூறப்படவில்லை என்று இங்கு நாம் மீண்டும் கூறலாம். ரிஷிகள், இந்தக் கருத்தானது மிகவும் சூட்சுமமானதும், வழக்கத்தில் இல்லாததுமாக இருப்பதால் மர்ணவர்களால் சுலபமாக அறிந்துகொள்ள இயலாதென்று கண்டனர். எனவே தொடர்ந்து வரும் செய்யுளில் மீண்டும் இதே சத்தியம் மிக மிக நுட்பமாகத் தெளிவர்க்கப் புனிதமாக ஓதுக்கப்பட்டிருக்கிறது.

4

யஸ்மின் ஸர்வாணி பூதானி
1 41 3 1
ஆத்மைவாபூத் விஜானத: |
11 1 1 1
தத்ர கோ மோஹ: க: ஷோக
1 1 1
ஏகத்வமனு பஷ்யத: ||

அறிபவனுக்கு எல்லா ஜீவராசிகளும் தன்னுடைய ஆத்மாவாகவே ஆகிவிட்ட பிறகு, எவ்வாறு மருட்சிக் குள்ளாவான்? எல்லா இடங்களிலும் ஒருமையையே காண்பவனைத் துயரம் எவ்வாறு வந்தடையும்?

முன் செய்யுளில் ரிஷிகள் 'தன்னை அறிவதன்' மேன்மையைப் பற்றி நமக்கு எதிர்மறை உறுதி மொழியில் விவரித்தனரே அன்றி திடமான உறுதிச் சொற்களால் அல்ல. வாழ்க்கையில் அந்த மனிதன மேலும எதன் மீதாவது அருவருப்போ அல்லது பகையோ கொள்ள மாட்டான் என்றுதான் நம்மிடம் கூறினர். ஆனல் இந்தச் செய்யுளில் அதே கொள்கை ரிஷிகளால் மேலும் சொல்லூன்றலுடனும், சாதனைக்கடுத்த உறுதியுடனும் விளக்கப்பட்டிருக்கிறது.

தன்னை அறிந்த மனிதன், தன் ஆதாரமான அனுபவங்களில், தான மற்றவர்களுக்கு முரணுக வாழும் ஓர் தனி மனிதன அல்லன என்பதை அறிந்து கொள்வதல்லாமல், தன் முக்கிய இயறகையிலேயே, உண்மையின் வெளி ஏட்டில் காணப்படும் முரண்பாடு அல்லது பன்மையாகத் தோன்றுவது போன்றவைகளின் ஒற்றுமை அல்லது இசைவுதான் எனபதையும் அறிந்து கொள்ளுகின்றுன். இவ்வாறு தான் ஒன்றே அனைத்திலும் இருப்பதாக அறிந்து கொண்டவனுக்கு மருட்சியினுல் உண்டாகும மோஹம அல்லது சோகத்தினுல் ஏற்படும சாதாரண மன இயல் ஈர்ப்புகளால் மனதில் கலக்கம ஏற்படாது.

'சோகம்' என்பதுதான் மருட்சியின் மொழி. ஓர் மனிதனின் வாழ்க்கையிலுள்ள சோகத்தின் அளவானது அவனிடமுள்ள மருட்சிககுச் சரியாகப் பொருத்தமானதாயிருக்கும். தன்னுடைய பிரதான இயற்கையில் அவன் ஆனந்தமயமானவன. ஒற்றுமை அல்லது இசைவுதான்

ஆனந்தம். ஆனால் மருட்சியினால் அவன் எப்போது அநேகத்துவத்தையும் முரண்பாட்டையும் அறிகிறானோ அப்போது அவன் சோகத்தை அனுபவிக்கிறான். மருட்சி சோகத்தை சிருஷ்டிக்கிறது. மருட்சி எவ்வளவு அதிகமாகுமோ சோகமும் அவ்வளவு அதிகரிக்கும்.

சோகத்தினின்றும் விடுபடுவதே வாழ்க்கையின் இலட்சியமாகும், அது மனிதனானாலும் சரி; மிருகமானாலும் சரி ஒவ்வொரு ஜீவராசிகளாலும் வேண்டப்படுவது வாழ்க்கையின் இலட்சியமே. மோக்ஷம் அல்லது விடுதலை என்பது அந்த மனிதன் துக்கத்தின் எல்லைகளுக்கப்பால் கடப்பதேயாகும். இங்கு இந்தச் செய்யுள் குறிப்பிடுவதென்னவென்றால் ஏக்கம், விம்மல் இவற்றின் கரைகளுக்கப்பால் தன்னையறியும் தலம் உள்ளது. அங்கு, அறிபவன், தன்னுடைய ஆத்மாவில் இவ்வுலகம் முழுவதும் ஒன்றே என அனுபவிக்கின்றான்.

பானை வெளி, தன்னை ஜகத்தின் வெளியேயன்றி வேறல்ல என்று மறுபடி கண்டுகொண்ட பிறகுதான், தனது வரம்புகள், பரிசுத்தமின்மை, துக்கம் இவற்றின் தன்மையிலிருந்துத் தன்னைப் பிரிவு படுத்திக்கொள்ள முடியும், ஒவ்வொரு தனி அலையும், தன்னை மற்றவைகளிடமிருந்து வேறாக எண்ணினால்தான், பிறப்பு, வளர்ச்சி, தளர்வு, மரணம் ஆகிய துன்பங்களை அடையும். ஆனால் தன் பிரதான இயற்கையில், தான் கடல்தான் என்று அறிந்தவுடன் அதன் சோகங்களும் முடிந்துவிடும். மேலும், தான் மற்றவைகளிடமிருந்து தனியானவன் என்ற மாய எண்ணமும் மறைந்துவிடும். எங்கு மாயை இல்லையோ அங்கு சோகமில்லை. சோகம், மாயையின் தோற்றம்.

இவ்வாறு தன்னை அறிந்த ஞானி, தன் ஆத்மா ஒவ்வொரு பெயரிலும், உருவத்திலும பிரகாசிப்பதையும், சந்தோஷமான அல்லது துக்கமான ஒவ்வொரு சூழ்நிலையிலும் தன்னுடைய சக்தி வெளிப்படுவதையும் அனுபவித்துக்கொண்டு, ஒவ்வாத சந்தடியுள்ள வாழ்க்கையின் நடுவிலும், சாசுவதமாக இசைவிலும், சீர் பிரமாணத்திலும் ஒன்றி யிருக்கிறான். அவனிடம்தான் உயர்ந்த வீரியம், மேன்மையான ஆனந்தம், வாழ்க்கையின் நிறைவான வெற்றிகள், அனைத்தும் பொருந்தி இருக்கின்றன. மிகுந்த வருத்தமும் அவனை ஓர் அணுவும அசைக்க முடியாது.

"யஸ்மின் ஸ்திதோன துக்கேன குருணாபி விசால்யதே" என்று கீதை கூறுகிறது. இதனால் நிரூபிப்பதாவது அவனை எவ்வளவு மிகுந்த துக்கமும் அசைக்க முடியாது என்பதே.

1 3 1 2 1
ஸ பர்யகாச்சுக்ரம காயமவர்ண

3 3 4 1 1 3 4
அஸ்னாவிரகம் சுத்தமபாபவித்தம்

1 1 4 4
கவிர் மனீஷி பரிபூ: ஸ்வயம்பூ

4 4
ஸா ஸ்வதீப்ய சமாப்யஹ ||

அவர், இந்த ஆத்மா எங்கும் நிறைந்து இருக்கிறார். அவர் பிரகாசமானவர். உருவற்றவர். அபாயமற்றவர். தசையற்றவர். பரிசுத்தமானவர். தீயவற்றால் துளைக்கப்படாதவர். அறிஞர். சர்வ ஞானி. சிறப்பானவர். சுய நிலையுடையவர். பலதிரப்பட்ட சாசுவதமான சிருஷ்டி கர்த்தாக்களுக்கு அவர்களின் முறைப்படி காரியங்களைப் பங்கிடுபவரும அவரே.

இங்கு உபநிடத கலைக்கே அடையாளமான செய்யுள் ஒன்று கூறப்பட்டிருக்கிறது. வாழ்க்கை அல்லது ஆத்மன் என்னும் எல்லாவற்றையும் தன்னுள்ளடக்கிய மூலாம்சத்தை, வார்த்தைகளின் ஓவியமாகக் கொடுக்கா விடினும் உண்மையான மாணுக்கன் இயற்கையாக அறிந்துகொள்ளத் தேவையான சாதனங்களை வாசகர் களுக்குக் கொடுக்க இங்கு முழுமையாகவும், தீர்க்கமாக வும் விளக்க முயற்சிக்கப்பட்டிருக்கிறது. மிக மேன்மை யான உரையாசிரியர் சங்கரர் நம்முள் உள்ள ஆத்மாவைச் சுட்டிக் காட்டத் தம்முடைய உரைகளில் இந்தச் செய்யுளை யும் அதன் விளக்கத்தையும் ஒரு முறைக்கு மேலேயே உபயோகித்திருக்கிறார்.

சம்ஸ்கிருதத்தில் பண்புச் சொற்களை உபயோகிக்கும் போது, உலகிலுள்ள மற்ற மொழிகளைப் போல் அல்லா மல், தகைமைகளை ஒன்று சேர்க்கப்பட்ட சேர்க்கையின் முறையிலேயே நமக்கு ஆழ்ந்த கருத்தைக் கொடுக்க வேண்டுமென்ற தனிப்பட்ட நோக்கத்துடன் செய்யப்படு கிறது. இங்கும் ரிஷிகளால் இதே பரிபாஷை உபயோகிக் கப்பட்டிருக்கிறது.

''பர்யாகத்'' என்ற வார்த்தைக்கு, வெகுதூரம் அல்லது வட்டமாகச் செல்லுதல் என்று பொருள். ஆகையால் இந்தச் செய்யுள், ஆத்மா தன்னை எல்லா இடத்திலும் பரப்ப வேண்டுமென்ற நோக்கத்துடன் வெளிச் சென்றது, இவை சேர்ந்து ஆத்மா சர்வ வியாபக மானது, என்றக் கருத்தைக் கொடுக்கிறது. அடுத்த சொல், நம்முடைய ஞானத்திற்கு, அது ஒளியளிக்கும் தத்துவமாக இருத்தலால் ஆத்மாவைப் பிரகாசமானது என்று நிச்சயிக்கிறது.

''அகாயம்'' (உடலற்றது) ஆத்மா அல்லது நம் பரி பூரண வாழ்க்கை உடலற்றது என்று குறிப்பிடப்பட்டிருக்

கிறது. இங்கு, முகவுரைச் சொற்பொழிவுகளில் விளக்கிக் குறிப்பிட்ட ஐந்து கோசங்களாலாகிய, சடப்பொருள்களால். சுற்றப்பட்டவைகளுக்கும், ஆத்மாவிற்கும் ஓர் தொடர்புமில்லை என்பதுதான் பொருள்.

''அபாயமற்றது', ''தசைகளற்றது'' என்ற சொற்கள் அது பௌதிக சரீரமற்றது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. பௌதிக சரீரத்தில் தான் புண் ஏற்படக்கூடும். எங்கு உடலில்லையோ அங்கு வியாதியும் வர முடியாது. இந்தக் கொள்கை அது தசைகளற்றது என்று வாணிக்கையில் மிகவும் அழுத்தமாக ஊன்றிக் கூறப்படுகிறது. ''சுத்த'' என்ற சொல், ஆத்மா பாவங்களாலும் தீண்டப்படாமையால் காரண சரீரமுமற்றது என்று குறிப்பிடுகிறது. நம்மிடமுள்ள மிருந்த பாபமானது நம் உண்மையான இயற்கையைப் பற்றிய நமது அறியாமைதான். அது முறையே நம்மில் மிருகத்தன்மையான மனவெழுச்சிகளைத் தோற்றுவித்து, நம்மைத் தூண்டி மனிதத் தன்மை அற்றவனாகவும், மிருகத்தன்மை வாய்ந்தவனாகவும் இழுத்துச் செல்லுகிறது.

இதுவரை ஆத்மாவை ரிஷிகள் ''இது அல்ல'' ''இது அல்ல'' என்ற எதிர்மறை மொழிகளின் மூலம் சுட்டிக் காட்டினார்கள். தன்னுடைய மருட்சியினால் ஏற்பட்ட பூதத்தின் காட்சியினால் துன்புறும் மனிதனுக்குக் கம்பத்தை விவரிக்க இரண்டு முறைகள் இருக்கின்றன. பேய் மருட்சிதான் என்று காண்பித்து மேலும் அவனுக்குக் கம்பத்தை அறிய உறுதியாக வழி காண்பிக்கலாம். நம்முடைய மருட்சியில் மயங்கிய நண்பனிடம் நாம் எதிர்மறை மொழியில்தான் ஆரம்பிக்கலாம். அதுபோல நமக்குச் சொற்பொழிவாற்றும் ரிஷியும் எதிர்மறை மொழியில் தான் ஆரம்பிக்கிறார். அவர் நமக்கு ஆத்மாவைப் பற்றித் தவறான எண்ணங்கள் ஏற்படக்கூடிய

தன்மைகளை யெல்லாம் புறக்கணிக்கின்றார். சரியான பயிற்சியும், வழிகாட்டியுமில்லை எனில் ஒருவர் ஆத்மாவை உடலோ அன்றி புத்தியோ என்று தவருக எண்ணலாம். மேற்கூறிய சொற்கள் தங்கள் தொகுப்பின் முறையி லேயே, ஆத்மா, ஸ்தூல, சூக்ஷ்ம, காரண சரீரமல்ல என் பதை மாணவனுக்கு விளக்கி விட்டன. அவற்றை யெல்லாம் கடந்ததுதான் சாசுவதமும், பரிபூரணமுமாகிய ஆத்மா.

ஆனல் சாதகன் ஸ்தூல, சூக்ஷ்ம, காரண, சரீரங் களுக்கப்பாலுள்ள உண்மையையும் அறிவதில்லை. ஆகை யால், அவன் அதில் உறுதியான குணங்களின் உண்மை யின்மையால் ஓர் முழு எதிர்மறைக் கொள்கை என்று தவருக எண்ணலாம். மூன்று சரீரங்களுக்கும் அப்பால், ஆத்மா தன் சத்துவமான இயற்கையில் ஓர் ஒன்றுமற்ற பூஜ்யம் என்ற எண்ணத்தை வெளி அகற்றி நம் வாழ்க்கையின் தத்துவமுள்ள குணங்கள் நிறைந்த ஓர் திடமான மூலாம்சம் என்பதை நிச்சயிக்க, இங்கு ஆத்மா வின் குணங்களின் கோர்வை கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆத்மாவே காண்பவன் :—காணும் கண்கள், ஒலி யைக் கேட்கும் காதுகள், நுகரும் நாசி, ருசிக்கும் நாக்கு, ஸ்பரிசத்தை உணரும் சரீரம் இவற்றுக்குப் பின்னுள்ள உண்மையான பிராணன் (வல்லமை) தான் நம் வாழ்க் கைப் பொறி என்பது உறுதிச் சொல். இந்திரியங்களி லிருந்து வாழ்க்கைத் தத்துவம் பிரிக்கப்பட்டால் அவை பொருள்களது சிந்தனையைப் பதிவு செய்ய இயலாதவை யாக இருக்கின்றன: உலகின் பொருள்களை உணருவ தற்கு, நமக்கு இந்திரியங்களே அன்றி அகத்தின் கருணை யால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு அவை தொழில் புரிய வேண்டியதும் அவசியமா யிருக்கிறது. ஆகையால், அகம் அல்லது ஆத்மாதான் எல்லா இந்திரியங்கள்,

மனம், புத்தி இவற்றில் காண்பவனாக இருக்கிறது. நம் வாழ்க்கைத் தத்துவத்தால் நாம் நிரப்பாவிடில், புலப்பாடு, உணர்ச்சி அல்லது ஆலோசனை ஆகிய செய்கைகள் நம்மால் உணரப்படமாட்டாது.

அனைத்தையும அறிந்தது :— ஒவ்வொருவரிலும் அறிந்து கொளபவனாக இருந்தால், அது ஒவ்வொரு ஜீவராசியிலும வாழக்கையின தத்துவமா யிருத்தலால், ஒவ்வொருவரிலுமுளள அறிந்து கொள்பவன்தான் ஆத்மா. ஆகையால் ஆத்மா அனைத்தையும அறிந்து கொள்வதாகக கருதப்படுகிறது. உலகத்தில் நாம அடையும ஒவ்வொரு சிறு அறிவும் அவை ஒவ்வொன்றின் செயலையும அதே ஆத்மாவால் அறியப்படுகிறது. ஆகையால் நம ஆத்மா சாசுவதமாக அனைவரது இதயத்திலுமுள்ள அனைத்தையும் அறிந்துகொள்வது.

இந்த ஆத்மா நிச்சயமாகச் சிறப்பானது. எல்லையுள்ளதன் ஆளுகைக்கப்பாலுள்ள, அனுபவிக்கக் கூடியதான, ஓர் அனுபவத்தின் நிலைதான் ஆத்மா. எல்லையுளளதைக் கடந்த பின்தான் மேன்மையான ஆத்மாவின் ஆளுகை இருக்கிறது.

ஸ்வயம்பூ :—அநித்திய ஜீவிகளாகிய மனிதர்களான நாம் காணப்படும பனமை நிறைந்த உலகின் பின்னுள்ள உண்மையை அறியவும, ஆலோசிக்கவும். உணரவும் உளள உபகரணங்களின் குறுக்கீடால்தான் தீவிரமாக முயற்சித்து நாடலாம். நம்முடைய புத்தியானது நேரம் இடம, சார்வு ஆகிய குறிப்பிட்ட மூன்று தீர்மானமானத் துறைகளில்தான் செயல் புரியும. காரணம் தேடுதல் தான் நம புத்தியின மிக உயர்ந்த செயல். நாம ஆராய்ச்சி, புரிய வேண்டிய ஒரு பொருளை உலகில் எப்பொழுது பார்த்தாலும, நம்முடைய கேள்வி, இயற்கையாகவே

அதன் காரணமாகிய சிக்கல்களுக்குள்தான் மூழ்கும். ஆகையால் Zஐ நாம் Yயின் மகன் என்று அறிந்தால் நன்ருக அறிந்து கொள்வோம். ஆனால் ஆராய்ச்சியைத் தொடர்ந்து செலுத்திக்கொண்டே இருந்தால் நாம் Y, Xன் மகன் X, Wவின் மகன், அதேபோல் V. U. T. S: R. Q. P. ... A என்ற வாக்குமூலத்திற்கு வருவோம், ஆனால் Aயின் தந்தை, யார் என்ற கேள்வி எழுவதால் நம் ஆராய்ச்சி முடிவிற்கு வராது. அதேபோல் உலகிலும், காரணம் தேடும் புத்தியும், தன் வீணை வளர்ச்சிக்காக, பருவகாலம் முன்னேறுவதுபோல் ஓர் குறிப்பிட்ட நிலையில் மிக உயர்ந்த கருத்தால் அடக்கித் தடுக்கப் படவேண்டும்.

ஆகையால், தற்பொழுது காணப்படுவது போன்ற பன்மை வாய்ந்த உலகைத் தன் முடிவற்ற மாறுதல்களின் ஓட்டத்தில் ஏற்படுத்திய ஓர் முதற்காரணம் இருந்தது என்று தத்துவ ஞானப்படி நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால், அதில் கடைசி காரணமானது, தானேயன்றி மற்ற காரணங்களால் ஏவப்படாததாயிருக்க வேண்டும. அந்தக் கொள்கைதான் ஆத்மா ஸ்வயம்பூ, தானே தோன்றியது என்று இங்கு கூறப் படுகையில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

அது சுயமாகப் பிறந்ததேயன்றி வேறொன்றிலிருந்தும் பிறந்ததல்ல. உண்மையில், சாதாரணமாகக் காணப்படும் இந்தத் தொடர்மொழியில் வெளிப்படுத்தியுள்ள தத்துவம் என்னவெனில், ஆத்மா எந்தப் பலனுலும் தொடரப்படாத முதல் காரணம். அது தன்னில் ஒரு பலத்தின் காரணமல்ல. பலன்கள், தோன்றியுள்ளவையாகையால், அவைகள் அழியக் கூடியவை. ஆத்மாவானது அழிவற்றது. அதனால் அது பிறப்பற்ற

தர்கும். ஒருவேளை புத்தியானது அதன் காரணத்தைக் கேட்கின் அதற்கு நாம் கூறக்கூடிய விடை, ஆத்மா ஒரு காரணமற்ற காரணம் அல்லது, தானே உண்டானது என்பதாகும். இது ஒரு அதிருப்தியான விளக்கமாக புத்திக்குத் தோன்றலாம். ஆனால் ஆத்மா என்னவென்று அறிந்தவர், அதாவது அது புத்திக்கும் அப்பாற்பட்டது என்று உணர்ந்தவர் இந்தப் பதத்தின் குணத்தை நன்ருகப் போற்ற முன் வருவர். அவருக்கு இந்தப் பதமானது களைப்புற்ற, தானே நிரூபித்த புத்தியின் சித்தியாகாத துடிப்புகளின் எதிரொலி என்றே தோன்றும்.

இவ்வாறு அத்தியந்தமான உண்மையைப் பதங்களால், முதல் அது, எது அல்ல என்று குறிப்பிட்டும், பிறகு அதன் பிரத்தியட்சமான மகிமைகளை நம் பார்வைக்கு வழி காட்டியும் ரிஷியானவர் இன்னும் அதிருப்தியடைகிருர். அதனல் அவர் சிறிதும் சோர்வடையாமல் இந்தச் செய்யுளின் பதங்கள் முடிந்தபோதிலும் மேலும் தொடர்ந்து செல்லுகிருர். இந்தக களைப்புற்ற அதிருப்தியினல் ரிஷியானவர் தான் கூறவேண்டுவதை எல்லாம் இன்னும் கூறி முடியவில்லை என்றும், தான் சீடர்களை உண்மையின் வாயிலுக்கு இன்னும் அழைத்துச் செல்லவில்லை என்றும் கருதி, இந்தச் செய்யுளை மிகவும் அழகில்லாத நீளத்திற்கு இழுத்துச் செல்லுகிருர்.

"ஆத்மா" அல்லது "பரிசுத்தத் தன்னறிவு" எல்லா இயற்கை சம்பவங்களின் நீதிக்கும் பின்னிருக்கும் ஒரு சக்தியும், பலமுமாகும் என்று அவர் கூறுகிருர். கிரகங்களின் அசைவு, பருவங்களின் கிரமம், இயற்கையின் இணக்கம், மறுபடி உண்டாக்கும் தன்மையின் சீர் முதலியவைகள், உலக முழுமையும் கோடிக்கணக்கான வருடங்களாக முறையாக இன்னும் நடந்துகொண்டே வருகின்

றன. எதனுலெனில், நீதியளிப்பவருக்கும், அவருடைய நீதிக்கும் பின்னிருக்கும் ஒரு கேள்வியற்ற அதிகாரத்தினுல் தான். இந்த அதிகாரம், சாமர்த்தியம் அல்லது சக்தி, ஆத்மா அல்லது அத்தியந்தமான உண்மையைச் சேர்ந்தது.

அந்தந்தமஹ ப்ரவிஷந்தி
யே அவித்யாம் உபாஸதே
ததோ பூய இவ தே தமோ
ய உ வித்யாயாம் ரதாஹா ||

அவித்யாவை வழிபடுபவர்கள் மாத்திரம்தான் இருளின் மறைப்பில் விழுகிருர்கள். வித்யாவை வழிபடுபவர்கள் மாத்திரம்தான் மிகவும் பெரிய இருள் போன்றதில் விழுகிருர்கள்.

இந்த உபநிஷத்தின் ஆரம்பத்தில் நம்முடைய முகவுரைப் பிரசங்கத்தில் இந்த உபநிஷத்தானது இலட்சண பூர்த்தியான வாழ்க்கை முறை சாசுவதமான சந்தேகமாகிய கர்ம வாழ்க்கையா அல்லது தியான வாழ்க்கையா என்பவற்றிற்கு ஒரு பதில் என நாம் கண்டோம். ஞானமா, கர்மமா, இவை ஒரு சாசுவத பிரச்னையாக வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கும் ஒவ்வொரு சிந்தனை புரியும் சந்தியாருக்கும் தங்களுடைய விஞ்ஞான ஆராய்ச்சிக்குத் துறையாக ஆகிவிட்டது. இன்றுகூட சமயத்தைப் பற்றியும் லௌகீகத்தைப் பற்றியும் வாக்கு வாதங்கள் எழுவதை நாம் காண்கிருேம். அவை இந்த சாசுவதமான பிரச்னையை ஒவ்வொரு சந்தியாரின் மன

திலும விளக்க உபயோகிககப்பட்ட குணத்தை விவரிக்கும புதிய வார்த்தைகளேயனறி வேறல்ல.

இந்தச் செய்யுளில் அந்த முனிவர் பிரசனேயை ஆரமபித்துள்ளார். பின தொடரும மூனறு மந்திரங்களில் அவர் தமமுடைய சித்தாந்தத்தை சுருக்கமாகக் கூறுகிருர்.

வெளிப்பட்ட செயல்கள், உட்புற தியானம இந்தப் பிரசனேயை விளக்க, முனிவர் அவித்யா, வித்யா எனற வார்த்தைகளே உபயோகிக்கிருர். இந்த இரண்டு வார்த்தைகளும அந்த ரிஷிகளின காலத்திலேயே நெறி வழுவி உபயோகப்படுத்தப்பட்டு விட்டன. அதனுல் ஒரு வேளே அந்தக் காலத்து மாணவர்கள தங்களது தத்துவ ஞான சமபநதத்திற்காக ஒரு சரியான மறு வாக்கு மூலத்தை வேண்டி யிருககலாம. வித்யாவும அவித்யாவும, உபாசனேயையும, காமாவையும குறிப்பிடுவதறகு வழஙகப்பட்டுள்ளன. அந்த வார்த்தையின பொதுவான கருத்தில் மதச் சடஙகுச செயல் துறைகளிலேயே தஙகளே முற்றிலும உட்படுத்திக் கொண்டிருப்பவர்கள நிச்சயமாக அதிக மயக்கத்தையே தாஙகள் அடைவதைக் காண்கின்றனர். ஒருவன் விருப்பத்திஞல் விரட்டப்பட்டு பலனே அடைய மாத்திரமே கிரியை முறைகளே (கர்மா) மேற்கொள்ளலாம. வேதங்களின கிரியை முறைப் பாகங்களான, யாகஙகள், புலன்களுக்கு மிகுந்த இன்பகரமான ராஜயஙகளில் வாழ்வதற்குத் தீவிரமான விருப்பத்திஞல் நடைபெறுகிறது. இயற்கையாக முனிவர்களின் தனித்த உறுதி நிலே குறிப்படி அந்த மனிதன ஆத்மீக மார்க்கத்தில் இருளின மறைப்பில் விழுகிருன. உபாசனே அல்லது உட்புற தியான வாழ்க்கையின மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் எங்கும நிறைந்த சத்தியத்தை நாடி ஆழ்ந்த தியானம புரிகிருர்கள். அவர்கள மேலும அதிக

இருள் போன்றதில் விழுவதுபோல் காணப்படுகிறுர்கள். ஏனெனில் துரிதமாகவும, ஆயத்தமற்றும் தியானம் புரிபவர்கள் தியானத்தின் எதிர்மறை நிலை சாதனைகளை அதிகமாக புரிந்து இருண்ட சூன்ய நிலையை அடையலாம். இந்த சந்தர்ப்பத்தில் ''மேலும் பேரிருளைப் போன்ற'' என்ற வார்த்தை மிகவும் அர்த்தபுஷ்டி வாய்ந்தது. அது உண்மையில் இருளல்ல.

அன்யதேவாஹு`ர் – வித்யயா
அன்யதாஹு`ர வித்யயா |
இதி சுஷ்ரும தீராணம்
யே நஸ்தத் – விசசக்ஷிரே ||

ஒன்று, உண்மையில் வித்யையால் அடையப்படுகிறது. மற்ருென்று அவித்யையால் என்று அவர்கள் கூறுகின்றனர். நமக்கு அதை விளக்கிய அறிவாளிகளிடமிருந்து நாம் அதை இவ்வாறே கேட்டிருக்கிறோம்.

வித்யா, அவித்யாக்களைப் பற்றிப் பொதுவாக அவர் கூறவேண்டியவைகளைக் கூறுகிறுர். அதன் பிறகு அக்காலத்தில் பொதுமக்களின் கோட்பாட்டின்படிக்கும் ஒழுங்கற்ற சாஸ்திரத்தின் ஆதரவுடனும் சந்தேகமின்றி உரிமை கொண்டாடும் வகையிலும், அந்தப் பெரிய ரிஷி அந்தக் கருத்தை கீழ்த்திசை நாடுகளின் முறைப்படி ஒரு புதிய கையாடுதலையும், ஒரு புரட்சிகரமான மறு வாக்குமூலத்தையும் விவரிக்க முற்படுகிறுர். அவ்வாறு செய்வதில் அவரும் தம்முடைய பிரமாணத்தை எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது. இந்தச் செய்யுளின் ஒரு வாக்குமூலத்தில் பொதுமக்களின் கொள்கையானது

சத்தியம் முழுவதுமல்ல என்று ரிஷி முடிவு கூறுகின்றார். வித்யா, அவித்யா ஆகியவற்றின் பலன், ஒன்று மற்றதிலிருந்து மாறுபடுகிறது; அவற்றைச் சர்தாரண நம்பத்தக்க வார்த்தைகளில் விளக்கக்கூடாது என்று கூறுகின்றார்.

இவ்வளவு தூரம் அறிவித்த பிறகு ரிஷி உடனேயே, அது தன் சுய புத்தியினால் ஏற்பட்டதல்ல, தன் மனதினால் இசைக்கப்பட்டதல்ல. ஆனால், ''தங்களுக்கு அதை விளக்கிய புத்திமான்களிடமிருந்து கேள்விப்பட்டது'' என்று தொடர்ந்து கூறுகிறார். இது ஒரு மிக்க விசேஷம் வாய்ந்த வாக்குமூலம். இந்து மதம், ஒரு போற்றுதற்குரிய மகான் அல்லது முனிவர் கூறியிருக்கிறார் என்று மாசற்ற புத்தி பூர்வமான கருத்தை, தத்துவ ஞானமென்று ஏற்பதில்லை. எவ்வளவு பெரியவராயிருந்தாலும், எவருக்கும் ஒரு தத்துவ ஞான உண்மையைப் பிரகடனப்படுத்தி, சாமானிய மனிதன் அறிவில் புகுத்தி அவன் மதிக்கும்படி செய்ய அதிகாரமோ அல்லது தனி உரிமையோ அளிக்கப்படவில்லை. எவராவது ஒருவர் ஒரு சத்தியத்தைக் கூறினாலும் மேல் நாடுகளின் வழக்கப்படி அது உடனே அங்கீகரிக்கப்படுவதில்லை. ஆனால், காலத்தின் சோதனைகளில் நிலை பெற்ற பிறகும், முனிவர் பரம்பரையார்கள் மீண்டும் மீண்டும் ஆத்ம அனுபவங்களை அடைந்த பிறகும் மர்த்திரம்தான் நாம் அதை ஒப்புக் கொள்ளுகிறோம்.

ஆகையால் இந்து மதம், ஓர் தனிப்பட்ட தீர்க்கதரிசியால் ஏற்படுத்தப்பட்டதல்ல. தன்னையறிந்த ஆசிரியர்களது அனுபவங்கள் நிறைந்த இதயத்தில் ஏழுந்து, பல மாணுக்கர்களின் சந்ததிகளால் நடைமுறையில் கொண்டு வரப்பட்ட அறிவின் உறுதிச் சொற்கள். வாழ்க்கையின்

உரைகல்லில் பரிசோதித்து, பொருத்தமானதாக பல சந்ததியார்களால் கண்டு கொள்ளப்பட்ட உண்மை மாத்திரம்தான் ஆரிய பக்தர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

வித்யா, அவித்யா இரண்டும் உண்மையில் பந்தங்கள்தான். ஞானம் நிச்சயமாக அறியாமையின் தளையிலிருந்து விடுதலை அடைதல்தான். ஆனால் ஞானமும், ஏகத்தின் ஓர் வருத்தும் தடை. ஞானத்தினால் ஒருவர் தன் அறியாமையின் குழப்பங்களிலிருந்து வெளியேறலாம். ஆனால், தன்னிலேயே, ஞானத்தின் பந்தங்கள் தொடரப்பட்டிருப்பதாக நாம் காண்கிறோம். அவை இரண்டையும் கடத்தல்தான் பரிபூரண நிலையை அடைவது.

பின்வரும் செய்யுளில் வித்யா, அவித்யா இவற்றின் சரியான பொருளும், அவற்றிடையே பராமரிக்கப்பட வேண்டிய சம்பந்தங்களும் இவற்றிற்குச் சரியான குறிப்புகளும் இருக்கின்றன.

வித்யாம் சா வித்யாம் ச
யஸ்தத்வேதோ பயம் ஸஹ |
அவித்யயா ம்ருத்யும் தீர்த்வா
வித்யயா அம்ருதமஷ்னுதே ||

வித்யா, அவித்யா இரண்டையும் ஒரே சமயத்தில் நன்கு அறிந்தவன் அவித்யாவினால் மரணத்தை வென்று வித்யாவினால் அமரத்வத்தை அடைகிறான்.

''செயலின்மையில் செயல்'' என்ற மேன்மையான கோட்பாட்டை விளக்குகையில், ரிஷிகள் தங்களது ஆரிய

சந்ததிகளுக்குக் கருத்து நிறைந்த இந்த மந்திரத்தை அளித்தனர். இந்தப் பாகத்தின் முதல் செய்யுளில், வித்யா-அவித்யா இரண்டையும், ஒன்றை நீக்கி மற்றதைப் பின் தொடர்ந்தால் இருளிற்கு அழைத்து செல்வதாகக் குற்றம் கூறினர். முற்காலத்து மேன்மையான ரிஷிகளது நூல்களை எடுத்துக் காட்டிய பிறகு, ஈசாவாஸ்யோபநிஷதின் தீர்க்கதரிசி, தற்பொழுது அவர்கள் எவ்வாறு மகிழ்ச்சியான கலப்பு முறையை நாடவேண்டும் என்று சுருக்கமாகக் கூறுகிறார். அவை தனியாகச் செய்யப்பட முடியாவிடில், அடுத்தபடி சம்பவிக்கக் கூடியது எந்த மாணுக்கனுக்கும் அது குறிப்பிடுவது வித்யாவும், அவித்யாவும் கலந்த முறையில் நாடுவதென்பதாகும். கர்மா, ஞானம் இவற்றினது கலவை, தற்கால சேர்வை ஆசிரியர்களால் அடிக்கடி பரிந்து பேசப்படுகிறது. ஆனால் அதன் சரியான சாதனை முழுவதும் தெளிவுபடுத்தப்படவில்லை. இங்கு இந்த உபநிஷத்தில் சந்தேகம், தோற்றம் இவற்றிற்கு அப்பால், ஓர் விஞ்ஞான வாக்கு மூலத்தைப்போல் பரிபூரணமாகவும் நிறைவாகவும் இருக்கிறது என்று விளக்கப்பட்டிருக்கிறது. வித்யா, அவித்யா இரண்டையும் தன்னில் ஒன்று சேர்த்துக் கொள்பவன், அவித்யாவினால் மரணத்தை வென்று வித்யாவினால் அமரத்வத்தை அடைவான் என்று கூறப்பட்டிருக்கிறது.

இக்காலம், சமூக, தேசீய, சர்வ தேசீய, நிலைமைகளில் பதை பதைப்புள்ள செயல்கள் நடைபெறும் காலம். அநேகர் கர்மாவை மூடத்தனமாகப் பரிந்து பேசுகின்றனர். ஒவ்வொருவனும் ஓர் தலைவன். அவ்வாறு தலைவனல்லாதவன், தன்னுடைய மனோபாவனையில் முன்னேற ஓர் சந்தர்பபத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கும் அரும்பும் தலைவனாக இருககிறான். ஆனால், இவ்வாறு தலைவர்

களும், தலைமைகளும் இருந்தபோதிலும், உலகம் குழப்பத்திலுல் பெருமூச்சுடன் முன்னேறிக் குழப்பத்துடனும், வருத்தத்துடனும், நிலையாகவும், கிரமமாகவும் துன்பத்திலிருந்து இடையூறுக்குத் தள்ளாடிச் செல்லுகிறது. படித்தவர்களும்கூட இவை எல்லாம் ஏன் இவ்வாறு இருக்கின்றன என்று ஆச்சரியப்படும் நாட்களாக உள்ளன. ரோகக் குறியும், அதன் சிகிச்சையும் இந்தக் கருத்து நிறைந்த மந்திரத்தின் ஆழ்ந்த ரகசியத்திலே இருக்கிறது.

அவித்யாவாகிய உலகில் வித்யா அன்றிச் செயல் புரிய முடியாததாக இருக்கிறது. அது உண்மையில் பலனற்றது. அநேகத்துவத்தை ஒன்று சேர்க்கும் அண்டகோசத்தின் சீர் பிரமாணம், இசைவு இவற்றை அறிந்து கொள்ளாமல், பன்மை உலகில் செயல் புரிதல், உலகில் மேலும் மேலும் குழப்பத்தைக் கொண்டு வருதலேயாகும். தலைவர்கள், தங்களிடமே அவற்றில் ஏதாவதொன்றையேனும் அறியாமலே இரம்யம், சாந்தி, ஆனந்தம் இவற்றைக் கொண்டுவரப் பாடுபடுகின்றனர். இசையின்மை, ஒவ்வாமை ஆகிய தவறுகப் பொருத்தப் பட்ட வாத்தியத்தால், பாடகன் எவ்வளவு சிறந்தவனுகவும், விருப்பமுள்ளவனுமாக இருந்தபோதிலும், பரிபூரண அழகும், மேம்பாடுமாகிய ஒர் இசையைக்கூட வெளிப்படுத்த முடியாது.

இந்த செய்யுள், ஆத்ம ஞானம் நிச்சயமாக நமக்கு சாசுவதமான முக்தியையும், அமரத்துவத்தையும் அளிக்குமென்று கூறுகிறது. ஆகையால், சீர்படுத்த முடியாத மாறுதலாகிய மரணத்தையுடைய உடல், மனம், புத்தி ஆகிய உபகரணம் நாம் அல்ல என்று கண்டு கொள்வோம். மரணம் சடப்பொருளின் விதி. அமரத்வம் ஆத்மாவின் நியமம்.

வித்யாவை இப்பிறவியிலேயே அடைந்த பின், இந்த உலகில் ஓர் முக்தி அடைந்த ஆத்மாவாகவும், தீர்க்கதரிசியாகவும் தெய்வீக மனிதனாகவும் வாழ இந்த வாழ்க்கையிலேயே ஓர் குறிப்பிட்ட காலம் இருக்கிறது. அதற்குப் பின் தன் சித்தியின் நிர்மலமான ஆனந்தத்தை அனுபவிக்க மறைவாய், ரகசியமாக, தியானமாகிய குகைக்கு ஓடிவிடுவது அவன் கடமையல்ல. அதற்குப் பதிலாக தன் சுய அறிவு சித்தியை, வெளி உலகத்தில் உள்ளும், புறமும் தன் செய்கைகளின் மூலம் பூரணமாக்க வேண்டும். நாம் முந்திய (6, 7) செய்யுள்களில் 'தன்னை அறிவது' என்பது தன்னுடைய ஆத்மா தெய்வீகமானது என்று அறிந்து கொள்வது மாத்திரமல்ல. ஆனால் தன்னுடைய ஆத்மாதான் ஒவ்வொருவரிலும் உள்ளது என்று அறிந்தபொழுதுதான் அது முற்றுப்பெறும் என்று கண்டோம். நாம் நம்முடைய சுய அனுபவத்தில் பழுது நிறைந்த பன்மை உலகத்தையும் ஒன்று சேர்க்காவிடில் நம் சித்தி முழுமையானதாக ஆகாது. தம் ஆத்ம ஞானத்தில் வேரூன்றித் தன்னையறிந்த முனிவர் அல்லது தீர்க்கதரிசி உலகிற்கு நிச்சயமான பிரகாசத்துடனும் வெற்றிகளுடனும் அதன் விதியைச் சித்தரிக்க மிகச் சக்தி வாய்ந்தவராகிறார்.

இந்த உலகத்தில் மனித குலத்தை ஒழுங்கு படுத்தித் தன்னுடைய சந்ததியார்கள் இழந்த உரிமைகளை மீண்டுமடையச் செய்து, மிகச் சிறந்த வாழ்க்கையை வாழ உழைத்த மனிதனே இவ்வுலக நினைவில் சாசுவதமாக வாழ்பவனாகிறான். பெருந்தன்மையுள்ள சந்ததியார்களின் நினைவிலே செதுக்கப்பட்டு மனித சமூகத்தினரிடையே உழைக்கும் இத்தகைய அறிஞர்கள் இவ்வுலகப் பரப்புகளிலே சாசுவதமாக நிலைபெற்றிருக்கிறார்கள். இவ்வாறு நாம் புத்தர், யேசுநாதர், சங்கரர், முகமது,

ஸோரோஅஸ்டர் ஆகிய மஹாநீனர்கள் ஒவ்வொருவரை யும் விழுங்குகிற மரணத்தை எளிதாகக் கடந்து பல னடைந்த உதாரணங்களைப் பெற்றிருக்கிறோம். இந்தப் பேராசிரியர்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு, தங்களைப் பின்பற்றும் சந்ததியார்களின் சமூக இணைப்பு, குறுக்கிடல்கள் ஆகிய இயக்கங்களில், அவ்வளவு அதிகமாகப் பிரவேசித்துள்ளபடியால் அவர் களின் வமிசத்தினர் மனமொப்பி அவர்களின் நினைவுகளை மாளவிடமாட்டார்கள்.

பேராசிரியர்களைப் பின்பற்றும் பெருந்தன்மையுள்ள சந்ததியார்களின் நினைவுகளிலே, இந்தச் சரித்திர பூர்வ மான நித்தியத்துவம் பெற்றுள்ளதைத் தவிர, தன்னை அறிந்த இந்தப் பெரியவர்கள், 'அவித்யா'—அதாவது அறியாமையினால் மரணத்தைத் தங்களுடைய வித்யா வாகிய ஞானத்தினால் வென்றனர். நாம் அதனிடம் பயங்கொள்ளுவதனால்தான் சாவானது கடுமையானதும், பயமுறுத்தலுமாகிறது. ஒரு மேன்மையான ஆத்மா தன் உண்மையான நிலையை அறிந்துகொண்டு விட்ட தெனில், அதற்குப் பின், சடப் பொருள்களின் மாறுதல் கள் ஏற்படும நாட்டில் நடைபெறும் சாதாரணமான மரணமென்று கூறப்படுவதில் அதற்குப் பயம் ஏற்படுவ தில்லை. தன்னை உடலென்று தவருக எண்ணிக்கொண் டிருப்பவனைத்தான் மரணம் அச்சமுறுத்தும். தன்னை ஆத்மாவாக அறிந்து கொண்டவனுக்கு, தான் அறி யாமையுடன் இருந்த நாட்களில் தன்னுடைய உடைமை என உணர்வு கொண்டிருந்த உடலில் ஏற்படும் ஓர் அர்த்தமற்ற மயக்கம் தான் மரணமாகும்.

"வித்யாவினால் அமரத்வத்தை அடைகிருன்"— மரணம் என்பது சடப்பொருளின் விதி: அது ஆத்மா வின் விதியல்ல என முன்பு கண்டோம். பானை

உடைந்து, பானை வெளியை அழிக்கலாம். ஆனால் பானையிலுள்ள வெளி உடைக்கப்படவில்லையே அன்றி ஒருபொழுதும் உண்டாக்கப்படவில்லை. அது எங்கும நிறைந்துள்ள வெளி. எப்பொழுதும் ஒரே தனமையுடையது. அவ்வாறே பிறப்பு இறப்பு, அழிவு, நோய், பந்தம, முக்தி, துனபம இன்பம, வெற்றி தோல்வி இவை அனைத்தும் நான் எனும அகந்தையின் மத்தியத்திற்கே ஏற்படுகிற அனுபவங்கள். ஆனால் ஒரு மயக்கம் தோற்றுகிறது. உலகப் பற்றுதல்கள் மூலமாக பரிசுத்தத் தன்னறிவின் மின்னல் ஒளி வந்தவுடன அது இருந்தபடியே மறைந்து விடுகிறது. தெய்வீக அனுபவம உதயமாகும போது அகந்தை முடிவுறுகிறது.

அகந்தை அற்ற மனிதனே சாசுவத சத்தியம. இவ்வாறு நாடுபவன், தன்னுடைய நான் எனும் அகந்தையை முற்றிலும ஒழித்துவிட்டு, அதாவது அவன் தியானமார்க்கத்தின மூலமாக சரீரம, மனது, புத்தி இவைகளைக் கடந்தவுடன தானே பரிசுத்த ஆத்மன் என்று மீண்டும உணருகிறான். இவை 4, 5, 8-வது செய்யுட்களில் கூறப்பட்டுள்ளன. அவனுக்கு, அதன பிறகு மறு பிறப்போ, கர்மங்களின் தொடர்ச்சியான சம்சார சக்கரத்தில் பிணைக்கப்படுதலோ, ஏற்படுவதில்லை. இயற்கையாக அவன் நம்முடைய நித்தியத்துவ அனுபவ மொழிகளிலே கூறப்பட்ட அமரநிலை எய்துகிறான்.

4 1 1 1
அநதம் தம: ப்ரவிஷந்தி

4 1 1
யே அஸம்பூதிம் உபாஸதே
1 1 4 1 1
ததோ பூய இவ தே தமோ

4 1 1
ய உ ஸம்பூத்யாம் ரதா: ||

வெளிப்பட்டுத் துலங்காததைத் தொழுபவர்கள் மறைவான இருளில் விழுகிறார்கள். வெளிப்பட்டுத் துலங்குவதை வழிபடுபவர்கள் பேரிருள் போன்றதில் விழுகின்றனர்.

12, 13, 14-ம் செய்யுள்களில் 9, 10, 11-ம் செய்யுள்களில் விளக்கிய அதே கருத்துக்கள் மீண்டும தெளிவு படுத்த எடுத்துக் கூறப்பட்டுள்ளன. முதல் முறையாகக் கேட்கும்போது அந்தக் கடைசி மூன்று செய்யுள்களும் மாணவர்கள் அறிந்துகொள்ள மிகவும் சூக்ஷ்மமாயிருப்பதாக ஒருவேளை அந்த ஆசிரியர் நினைத்திருக்கலாம். வேதாந்த சம்பந்தமான உண்மையை நாடுபவர்கள் ஒவ்வொருவருக்கும் வித்யா, அவித்யா இவற்றின் சம்பந்தத்தைத் சரியாக அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

முன் செய்யுள்களில் கூறப்பட்டபடி வித்யாவும், அவித்யாவும ஒன்றுக்கொன்று விரோதமான அல்லது எதிரான கருத்துக்கள் கொண்டதல்ல. அவை ஒவ்வொன்றும் மற்றதற்கு நிச்சயமான சாவுமணியாகும். அவைகள் இரண்டையும பகுத்தறிவற்று நயமில்லாமல் ஒன்று சேர்க்கக் கூடாது. அவை ஒன்றுக்கொன்று பூர்த்தி செய்யும் முறையிலுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அவை புத்திசாலித்தனமாகக் கையாளப்பட வேண்டும். முதலாவதாகக் கர்மம் (அவித்யா) நம்முடைய விருப்பங்களின் கோரிக்கைப்படி ஆனது. பிறகு அது நமமை மந்தமான (தமஸ்) தன்மையிலிருந்து விடுவித்து உற்சாகமான பூரண ஊக்கத்துடன் கூடிய சுருசுருப்பான மனோநிலையை (ரஜஸ்) அடையச் செய்கிறது. அதன் பிறகு பற்றற்ற கர்மாவின் மூலமாக மனோ, புத்திகளின் பரிசுத்தத்தை ஒருவன் அடையலாம். இதுதான் தியா

னத்திற்குத் தயாராகும் முறை. பிறகு, உறுதியான முயற்சியுள்ள தியானத்தினால் நாடுபவன் ஞானத்தை (வித்யாவை) அடைகிறான். அதே கருத்து இங்கு விளக்கப்பட்டுள்ளது. வித்யாவையும், அவித்யாவையும குறிக்க வேறு நிலையான வார்த்தைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அந்த இரண்டு வார்த்தைகள் 'அஸம்பூதி' வெளிப்பட்டுத் துலங்காதது; 'ஸம்பூதி' வெளிப்பட்டுத் துலங்குவது என்பன. வெளிப்பட்டுத் துலங்காததென்றால் உருவமற்ற கடவுள், வெளிப்பட்டுத் துலங்குவது என்றால் உருவமுள்ள கடவுள், என்பவற்றை உங்களால் சுலபமாகப் புரிந்துகொள்ள முடியும். பக்தகோடிகளிடையே, உருவற்றதும, உருவுள்ளதுமான தெய்வத்தை வழிபடுவதைக் குறித்தும, தியானம் செய்வதைக் குறித்தும சம்பந்தப்பட்ட தகுதிகளைப் பற்றி, மிகுந்த தர்க்கங்கள் எப்போதும் இருந்து வந்திருக்கின்றன. இன்றும் இருந்து வருகின்றன. வேத காலங்களில்கூட உருவுள்ள தெய்வங்களான வாயு, அக்னி, வருணன் இவர்கள் இருந்து வந்ததைப் போல இன்றும் நமக்குப் புராண தெய்வங்களான, ராமர், கிருஷ்ணர், ஸ்கந்தர் ஆகியவர்கள இருந்து வருகிறார்கள்.

இந்த வாக்குவாதம் இப்பொழுதும், நம்முடைய காலத்தில் இருந்து வருகிறது. அதன் சாதனை முறையில் வாழ்க்கையில் ஒரு பெரிய வாக்குவாதத்தைப்போல ஞானம் சிறந்ததா அல்லது பக்தி சிறந்ததா என்று விவாதிக்கப்படுகிறது. உபநிடதங்கள் இங்கு நமக்குப் போதிய சரித்திரப் பிரகடனங்களைத் தந்து, நம்முடைய வாக்குவாதங்கள் அர்த்தமற்றவை, ஆதாரமற்றவை என்று அறிந்துகொள்ளச் செய்கிறது. வித்யாவுக்கும்,

அவித்யாவுக்குமிடையே எதிர் வாதங்கள் இல்லை என்று நாம கண்டுகொண்டதுபோல, அவை ஒன்றுக்கொன்று பூர்த்தி செய்யும வகையில் உள்ளன. அதுபோலவே பக்தியும, ஞானமும் முரண்பட்டவை அல்ல. ஆனால் ஒன்று மற்றதின் மடியில் பலமுள்ளதாக வளர்ந்து அதிக மாக நிலை பெறுகிறது.

3 4 1
அன்யதேவாஹுர ஸம்பவாத
3 4
அன்யதாஹுர ஸம்பவாத் |
1 4
இதி சுஷ்ரும தீராணம்
1 3 1 1
நஸ்தத விசசக்ஷிரே ||

ஒன்று, வெளிப்படத் துலங்குவதை வழிபடுவதால் உண்மையை அடையலாம் என்று அவர்கள் கூறுகின்றனர். மற்றது, வெளிப்படத் துலங்காததை வழிபடு வதால் அடையலாம் என்று அவர்கள் கூறுகின்றனர். இவ்வாறு நாம் நமக்கு விளக்கிய ஞானிகள் கூறக் கேட்டிருக்கிறோம்.

முந்திய மூவடிச் செய்யுள்களில் இரண்டாவது செய்யுளில் இங்கு ரிஷி நமக்கு நாம் பொதுவாக, வெளிப் படத் துலங்குவது, வெளிப்படத் துலங்காதது என்பவை களை அறிந்து கொள்வதைப் பற்றி விளக்க முற்படுகிறார். அவை ஆத்மீக பரிசுத்த சாதனை முறையில் சரியான குறிப்பல்ல. ஆனால் அவைகளுக்கு ஒரு தனிப்பட்ட விசேஷமிருக்கிறது. இந்தப் புதிய கீழ் நாடுகளுக்குரிய கருத்து மீண்டும் அருளப்படுகிறது. அது ஒரு சாதா ரண, அவருடைய சொந்தக் கருத்தின் எழுச்சியல்ல. ஆனால் அது முழுவதும் சிரேஷ்டமான ஆச்சார்யர்

களான, அனுபவமுள்ள போதகுசிரியர்கள், அவர்களின் மாணுக்கர்கள ஆகியோர்களுடைய அனுமதி பெற்றது.

4 1 1
ஸம்பூதிம் ச விஞைஷம் ச
13 3 4
யஸ்தத்வே தோ பயம் ஸஹ |
1 1 1
விஞேஷேன ம்ருத்யும் தீர்த்வா
41 1 1
ஸம்பூத்யா அம்ருதமஷ்னுதே ||

உருவமற்ற தெய்வம். உருவமுடைய தெய்வம் இரண்டையும் வழிபடுபவன் உருவமுடையதை வழிபடுவதன் மூலம் மரணத்தை வென்று உருவமற்றதை வழிபடுவதன் மூலம் அமரத்துவத்தை அடைகிருன்.

முந்திய மூவடிச் செய்யுள்களின் கடைசிச் செய்யுளைப் போலவே இங்கும் வார்த்தைகள் மாத்திரம் மாற்றப்பட்டு அதே கருத்து விளக்கப்பட்டு இருக்கிறது. வித்யா, அவித்யாவிற்குப் பதிலாக இங்கு உருவமுள்ள, உருவமற்ற கடவுள் என்று உபயோகிக்கப்பட்டு இருக்கிறது. நாம விவாதம் புரியும் இந்தச் செய்யுள், நிச்சயமாக முந்திய மந்திரத்தில் வெளிப்படுத்திய கருத்தைத் தெரிவிக்கிறது. அதற்கு மேலும வேறு கருக்கொண்ட எண்ணங்களையும் உடையதாக இருக்கிறது.

பக்தி, ஞானம் இவற்றுக்கிடையிலுள்ள வாக்குவாதம் இந்த மந்திரத்தில் அடங்கியுள்ள கருத்திஞல் உண்மையற்றதென்று நிரூபிக்கப்படுகிறது. அவை இரண்டும் மாருனதல்லவென்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்று மற்றதைப் பூர்த்தி செய்கிறது. அவற்றை ஓர் வரிசைக் கிரமத்தில் பயிற்சிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பெயரும், உருவமுமுடைய கடவுளிடம் பக்தி புரிதல் உயர்ந்த தியானத்

திற்கு மிகவும் அவசியமானது; தன்னை நன்கு அறிவ தற்கு உருவமற்ற சத்தியத்தைத் தொடர்ந்து, தீவிர மாகத் தியானம் புரிவது அவசியம். பக்தி, ஞானம் இரண்டையும் விவேகத்துடன் ஒன்று சேர்ப்பதால், ரிஷியின் சொந்த வார்த்தைகளின் பலனாக, உருவமுள்ள கடவுளிடம் நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருப்பதன் காரணமாக, மரணத்தை அதாவது எல்லையுள்ளதால் ஏற்படும் துன்பங்களை நம்மால் கடக்க முடியும். அதே சமயத்தில் உருவமற்ற சத்தியத்தைக் குறித்து நாம் புரிந்த மிக உயர்ந்த தியானத்தின் பயனாக வளர்ச்சி பூரணமாக முற்றுப் பெறும். ஏகத்தைக் குறித்துப் புரியும் தியானம் ஆத்மாவின் மானசீக அனுபவத்தைக் கொடுத்தபோதிலும், ஜீவன் முக்த நிலையானது, தீவிர, அசைக்க முடியாத தன் இஷ்ட தேவதையிடமுள்ள பிரேமையாகிய நிலைபெறச் செய்யும் மிதப்பு அணி இல்லாமல் சாந்தமும் அமைதியுள்ளதுமாக யிருக்காது.

வேதாந்தத்தினால் மட்டும் பரிசுத்தத்தை அடைந்த மனிதன், ஜன சமூகத்தில் வாழவும், அவித்யா துறையில் உழைக்கவும், தங்கள் சந்ததிகளை அவர்கள் தற்பொழுது வீழ்ந்துள்ள மனோ புத்திகளின் குப்பைக் களஞ்சியங்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றவும் தகுதியற்றவனாகிறான். ஒரு பண்பாட்டின் மறுமலர்ச்சியின் பிணக்குகளில் அந்தப் பேராசிரியர் பலவித எதிர்ப்புகள் நேரிடுதலையும், அதில் அவர் தம்முடைய இருதயத்திலுள்ள தெய்வத்தின் மீதுள்ள எல்லையற்ற பக்தியினால் திறமையுடன் வழிகாட்டப்பட்டு தொடர்ந்து திருத்தப்பட்டு வந்தபோது மாத்திரம்தான் அவர் சுலபமாகத் தம்முடைய சம நிலையையும் சம நிறையையும் காணலாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தம் ஆத்ம அனுபவத்தால் சக்தியும், கீர்த்தியும் அடைந்தார். ஆனால் தம்

வாழ்க்கையின் சமாதானமும, சம சித்தமும் அவர் தன் அனபுமிக்க தக்ஷிணேஸ்வரத தாயிடமிருந்து பெற்ற விசேஷ ஆசிர்வாதஙகள். இந்து மதத்தின ரக்ஷகரான சங்கரர் தம் தெயவீக நிறைவினுலும, தன ஆத்ம அனுபவத்திலுைம சாசுவதமான காலம, இடம ஆகிய மேகஙகளின மூலமாகப் பிரகாசித்துக் கொணடிருககிருர். மேலும, அவர் தம காலத்தில் செய்ததுபோல், இந்தியாவின எல்லை முழுவதிலும தன விரோதிகளை எதிர்க்கலாம். சிதைந்துளள இந்து மதத்திலிருந்து தன பண்பாட்டில் மேனமையாகியவறறை முடிசூட்டிக் கொண்டிருக்கும இந்தியாவிற்கு மறுமலர்சசி அளிக்கலாம. ஏனெனில் அவர் கல்விக் கடவுளாகிய அனனை சாரதாவிடம நிலை பெற்றதும, கேளவிக்கிடமற்றதுமான பக்தி கொண் டிருந்தார்.

இங்கு இந்தச் செய்யுளில் ''மரணம'' என்ற சொல்லை அதன நிறைவான கருத்துக்களுடன அறிந்துகொள்ள வேணடும. அதாவது அவைகளைச் சேர்த்துக்கொண் டும, ஒன்று சேர்த்தும அதன கருத்துக்களில் இந்த நம்முடைய அநித்திய உலகில் எல்லா முடிவுளள நியமங்களையும் அறிந்துகொள்ள வேண்டும. ராதாவைப் போன்ற பக்தியுடைய ஞானியினுல்தான் உண்மையான பார்த்த சாரதியின வாழக்கையை வாழ்ந்து, தன்னுடைய சகாப்தமாகிய இரதத்தை, தற்போது சரித்திரம அடைந்துளள அழிவு, சோர்வு ஆகிய பேய்த்தனமாகிய சக்திகளினின்றும நிசசயமான பலன, வெறறிகளை அளிக்க வழிகாட்ட முடியும. இந்தச செயயுளிலுளள மற்ற பதங்கள முந்திய மூவடிச் செய்யுளினத்தையே அடுத்தடுத்துக் கூறி யிருப்பதால் தெளிவாகவே இருக்கினறன.

தற்பொழுது நாம இந்த உபநிஷத்தின் கடைசி எண்ண அலையை அடைந்துளளோம். நுட்பமாகப்

பிழை பார்ப்பவர்கள் அதை இடையிலெழுதப்பட்டதாகக் கூறுகின்றனர்.

சங்கரரைப் போன்ற சிறந்த உரையாசிரியர்களும் மற்றவர்களும் அதை மரணத் தருவாயில் உள்ள மனிதன் தன் மரணப்படுக்கையில் செய்யும் பிரார்த்தனை எனக் கருதுகின்றனர். ஆஸ்தீக இந்துக் குடும்பங்களில் இறக்கும் மனிதனது காதுகளில் இச் செய்யுட்களை அடுத்தடுத்துக் கூறுகின்றனர். ஆனால் அவர்களில் வெகு சிலர்தான் இச் செய்யுட்களின் பொருளையும், சம்பந்தத்தையும் சரியாக அறிந்து கொள்வதுபோல் காணப்படுகிறார்கள்.

உபநிஷதங்களின் ஆரம்பத்திலேயே மிகவும் உயர்ந்த பிரார்த்தனைச் செய்யுட்கள் மூன்று இருக்கின்றன. வேதாந்தம் பக்திக்கு எதிரானதென்று குற்றம் கூறுபவர்களது கருத்தற்ற தன்மைக்கு அது கூவி விரட்டும் வசைமொழியாயிருக்கிறது. உபநிஷத ஆசிரியர்கள் ஒரு பொழுதும் விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும், பக்தியுடனும், உருவுமுள்ள கடவுளை வழிபட்டுத் தொடர்தலை எதிர்த்ததில்லை என்பதைக் காட்ட, இந்த உபநிஷத்திலேயே இந்த மூன்று செய்யுள்களும் ஓர் உள்ளான அத்தாட்சியாக இருக்கின்றன.

வேதகாலங்களில் வழிபடுவதற்குப் புராணக் கடவுள் ஒன்றும் இல்லை. அவை இந்துமத ஆத்மீகக் கலை ஞானச் செல்வத்தில், பிறகுதான் சேர்க்கப்பட்டன. ஆரியர்களது தந்திரம் வாய்ந்த புத்திக்கு உலகின் ஆக்கல், காத்தல், அழித்தலாகியத் தொழில்களைப் புரியும் மேன்மை வாய்ந்தவரது தெளிவான அடையாளமாகக் காணப்படும் சூரியனைக் குறித்துப் பிரார்த்தனை செய்ததாக, இந்த உபநிஷத்தின் மூலம் காண்கிறோம்.

தற்காலத்தில் நம்முடைய விஞ்ஞான அறிவினால், வேத காலத்தின் இந்தச் சிறந்த நம்பிக்கையை கௌரவிப்பது நிச்சயமாக சுலபமானதுதான். பிரபஞ்சத்திலிருந்து சூரிய பகவான் எடுக்கப்பட்டு விட்டால் அது ஒழுங்கற்றிருக்குமே யன்றி அண்டகோசமாகாது. இந்த ஆண்மை, சக்தி ஆகிய கடவுளின் ஆசீர்வாதமின்றி கிரகங்களின் வாழ்க்கை நடத்த முடியாததா யிருக்கும்.

இந்தப் பிரார்த்தனையை வெறும் மனோசலனத்தின் வெடிப்பாகக் கருதுவது, அந்த ரிஷியின் தெய்வீக ஞானத்தை உள்ளத்தில் குறைவாக மதிப்பிடுவது போன்றது என்று இந்தப் பகுதியைத் தொடங்கு முன் நான் உங்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும். நாடுபவனுக்கு அது சினைத்த கருத்துக்களாகிய ஆழ்ந்த பொருளையுடையது. நாம் ஒவ்வொரு மந்திரத்திலுமுள்ள அருமையான பூரிப்பை ஆராயும்போது, அதையும கண்டு கொள்ள முயற்சி செய்வோம்.

உண்மையாக நாடுபவர்கள் இந்த மூன்று செய்யுட்களையும் அர்த்தத்துடன் மனப்பாடம் செய்துகொண்டு அடுத்தடுத்துக் கூறவேண்டுமென்று நான் சுயமாகத் தெரிவிக்கின்றேன். அவை தன்னலமற்று நாடுபவர்களுக்கு மனக்காட்சிக்கு உரிய பிரார்த்தனையாகும.

                    1 1
ஹிரண்மயேன பாத்ரேண
    1   1   2
ஸத்யஸ்யாபிஹிதம் முகம் |
11   1   1
தத்வம் பூஷன்ன பாவ்ருணு
  1   4   3   1
ஸத்ய தர்மாய த்ருஷ்டயே ||

சத்தியத்தின் முகம் பொன்னாலான மூடியினால் மூடப்பட்டிருக்கிறது. ஓ, சூரியனே, சத்தியத்தைப் பயிற்சி செய்து கொண்டிருக்கும் நான் காண்பதற்காக அந்த மூடியை அகற்று.

நேர்முகமாய்ப் பார்க்குமிடத்து இது ஒரு பிரார்த்தனை. சூரிய பகவானைக் குறித்து அவருடைய கிருபையையும், திருவருட்பேற்றையும் கோறப்படுகிறது. அந்த நாடு பவன், சத்தியத்தின் காட்சியை மறைக்கும் பொன்னாலான திரையை நீக்குவதற்குச் சக்தியைப் பெறுவதற்காகச் செய்யப்பட்டது. இது மரணப் படுக்கையில் இறந்து கொண்டிருக்கும் மனிதனால் செய்யப்படும் பிரார்த்தனை.

சூரியன் சர்வ லோகங்களுக்கும் மத்தியம். அவர் அசைவற்றும் செயலற்றும் இருக்கிறார். ஆனாலும் தம்முடைய பிரசன்னத்தால் தம்மைச் சுற்றி உள்ள சகல உலகங்களின் அசைவுகளையும் சமப்படுத்துகிறார். மேலும் அண்டகோசங்களின் போஷகராகவும், சகல சக்திகளின் மூலாதாரமாகவும் இருக்கிறார். அவர் நாடுபவனது உள் உலகமாகிய ஆத்மாவைப் போஷிப்பவராகவும், பிரகாசிக்கச் செய்பவராகவும காணப்படுகிறார். இந்த அசைவற்ற மத்தியம்தான் எல்லாத் துறைகளின் அசைவுகளையும் கட்டுப்படுத்துகிறது. பொருள்களைச் சுற்றி யிருப்பதும், அகம் ஆகிய ஆத்மா இவைகளை இயக்கும் எல்லாச் சக்திகளின் மூலாதாரமாகவும் இருக்கிறது. நான் எனும் அகந்தை, ஆத்மாவை தன் உண்மை நிலையை அறிந்ததும் மரிக்க வேண்டியதுதான். இவ்வாறு ஸ்ரீ சங்கரர் கூறுவதுபோல், இது நிச்சயமாக மரணத் தறுவாயில் இருக்கும் மனிதனின் கடைசிப் பிரார்த்தனையே. ஆனால் இங்கு ஒரு மனிதன் எனக் கூறப்படுவது நான் எனும் அகந்தையைத்தான். சொல்லர்த்தத்

தில் அது ஒரு மரணப் படுக்கையிலுள்ள கிழவனின் பிரார்த்தனை எனக் கொள்ளக் கூடாது. இது ஒரு முயற்சியுடன் ஆத்மீகத்தை நாடுபவன தன்னுடைய தியான ஆசனத்திலமர்ந்து, தனனுடையத் தெய்வீகப் பிரயத்தனங்களில் அவனுள்ளே ஆத்மாவுடன் ஊசலாடிக் கொண்டிருக்கும் நான் எனும் அகந்தையின் கடைசி உடையை உதறித் தள்ளிக்கொண்டு இருக்கும்போது புரியும் கடைசிப் பிரார்த்தனையாகும்.

மனது, புத்தி, எல்லைக்குட்பட்ட அறிவு (நான் எனும் அகந்தை) அதன் பின்னால் உள்ளப் பரிசுத்த அறிவை அறிந்து கொள்ளவும், பற்றிக் கொள்ளவும் முயற்சிக்கும் போது அதனுடைய கீர்த்தி, பிரகாசங்களினால் தனனையே குருடாக்கிக் கொள்ளுகிறது. ஆகவே அது பரிசுத்த அறிவைத் தான் காண்பதற்காகத் திரையை விலக்கத் தெரிவிக்கிறது. மனமும், புத்தியும் வெளியிலே பார்க்கும் போது பெயர்களாலும உருவங்களாலும் ஏற்பட்ட பொருள்களாலான உலகை மாத்திரம்தான் காணக்கூடும். இத்தகைய முன்னேற்பாடுடன் நான் எனும் அகந்தைக்கு, இவற்றின் பின்னால் உள்ள சத்தியத்தைக் காண்பது இயலாததாகிறது. இவ்வாறு பொருள்களாலான உலகம் ஒரு ஜோதியாய்ப் பிரகாசிக்கிற தங்க மூடியாகவும், பின்னாலிருந்து சத்தியத்தை மூடிக்கொண்டிருப்பதாகவும் ஆகிறது. இப்போதுள்ளபடியே, சத்தியத்தின் வாயிலை அந்தச் சாதகன் தட்டிக்கொண்டு, பின்னாலுள்ள அந்தப் போஷகரை, பொருள்களாலான உலகின் கதவுகளைத் திறந்து, அதன் சகல ஆத்மீகக் கீர்த்திகளையும் தெரியப் படுத்தும்படி வேண்டுகிறான்.

ஆனால் அந்த ஆராய்பவனுக்கு அந்தப் பரம பொருளிடமிருந்து இவ்வாறு திறந்து கொடுக்கும்படி வேண்டிக் கொள்ள என்ன உரிமை இருக்கிறது. இதற்குச்

சமாதானம் கூறப்படுகிறது. அந்தப் பக்தன் சத்தியம் தனக்கு வெளிப்படத் தோன்ற வேண்டும் என்று அறிவிக்கும்போது, அவனே, சத்தியத்தைச் சாதனை புரிபவனாக இருக்கிறான்.

இது மிகவும் விசேஷமானது. எவ்வாறெனில், ஆராய்பவனின் இலட்சியம் சத்தியம், அவனுடைய மார்க்கம் சத்தியம், சத்தியத்தை அடைய அவனுடைய மார்க்கத்தின் ஒவ்வொரு படியும் சத்தியத்தாலேயே ஆனது. சமய மார்க்கங்களிலே, முறைகளும் இலட்சியத்தைப் போலவே புனிதமானது. ஏமாற்றுதல், மிருக வாழ்க்கை, இவை மூலமாக எவ்வகையிலும், வளர்ச்சி, முன்னேற்றம், சாந்தி, பரிசுத்தம் இவைகளை அடைய வழியே கிடையாது.

1 1 1 11
பூஷன்னே கர்ஷே யம சூர்ய ப்ராஜாபத்ய
வ்யூஹ ரஷ்மீன் ஸமூஹ |
1 11 1 1 1 111
தேஜோயத்தே ரூபம் கல்யாண தமம் தத்தே
1 1
பஷ்யாமி யோஸாவஸௌ புருஷ: ஸோஹமஸ்மி ||

ஓ போஷிப்பவரே, (சூரியன்-போஷகர்,) ஓ ஏக தீர்க்கதரிசியே, அனைத்தையும் கட்டுப்படுத்துபவரே, பிரஜாபதியின் புத்திரனான சூரியனே! உம்முடைய கிரணங்களைப் பரப்புங்கள். உம்முடைய எரிகிற ஒளியை ஒன்று சேருங்கள். உம்முடைய சிறந்த உருவத்தை நான் காண்கிறேன். நானே அவர், உங்கள் உள்ளே உள்ள புருஷன்.

சூரிய பகவானைக் குறித்து, இங்கு ரிஷிகள் வழங்கியுள்ள, சிறப்பான குணத்தை விஸ்தரிக்கும் வார்த்தைகள்

மிகவும் விசேஷம் வாய்ந்தவை. எவ்வாறெனில் இறந்து கொண்டிருக்கும் அகந்தையானது யாரைக் குறிப்பிடு கிறது என்பதை அவை நமக்குச் சரியாகத் தெரிவிக்கின் றன. பிரார்த்தனையின் தத்துவ ஞானக் கருத்து, சூரிய பகவானிடம் அடைமொழிகளாகத் தொடுக்கப்பட்டப் பலவிதமான தகுதிகளின் விசேஷார்த்தங்கள், கூறுமல் சுட்டிச் சொல்லுகிற பெரிய உதவியில் சேர்க்கப்படுகிறது. அவை சமமாக ஆத்மனுக்கும் பொருத்தமானதே. போஷிப்பவன், ஏக தீர்க்கதரிசி, அனைத்தையும் கட்டுப் படுத்துபவன் முதலிய பண்புகள் தாமே தெளிவாயிருப் பதனால், அவைகளே மனிதனிடமுள்ள ஆத்மீக மத்தியத் திற்கும் பொருந்துகின்றன. பிரார்த்தனையின் முறைப் படி பிரார்த்தனை புரியும் அகந்தையானது, மனதையும், புத்தியையும் கடந்த நிலையில் தியானத்தினால் முற்றிலும் பூர்ணத்துவத்தை அடைகிறது. பிறகு அந்த மனித னின் அகமானது மானசீக அனுபவத்தில் தானே சத்திய மாக ஆவதற்குச் சத்தியத்தை அமைதியுடன் எதிர் கொள்ளுகிறது.

ஆத்மாவைக் காணவோ, உணரவோ அல்லது அறியவோ இயலாது. ஆனால் மானசீக ஐக்கிய அனு பவத்தில் அனுபவிக்கலாம். இந்தக் கருத்து "நானே அவர்—உங்கள் உள்ளே உள்ள புருஷன்" என்று கூறுவ தால் தெளிவாக வெளியாக்கப்படுகிறது. தன்னை அறிந்த முனிவர், அவர் தன்னை அறியும் தறுவாயில் கூறப்பட்ட பிரகடனமல்ல. பிற்காலத்தில் அவர் மனே, புத்திகளின் உலகத்தில் மீண்டும் விழித்தெழும் போது அவர், தான் ஸ்தூல சரீரத்திற்கு உடம்பட்ட மனிதன் அல்ல என்று முறையிடுகிருர். அவர் தம் முடைய அறியாமையில் இருந்ததாக எண்ணினர். ஆனல் இப்போது ஞானேதயமாகி விட்டது. அவர்

தான் பரிசுத்த ஞானமே தவிர, வேறொன்றுமில்லை என்று அறிகிறார். அவர்தான், உள்ளே வசிக்கும் அந்த ஒன்று—அந்த புருஷன் தானேதான் என்று அறிகிறார்.

"பிரும்மத்தை" அறிந்தவன் பிரும்மமாகவே ஆகிறான். இது அடிக்கடி உபநிடதப் பிரகடனங்களில் மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளது. இதன் உண்மை, மீண்டும் மீண்டும எல்லா உபநிடதங்களிலும் அடுத்தடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மனிதன் கடவுளைக் காண முடியாது. ஆனால் கடவுள் ஒரு அனுபவிக்க இயலாத இன்மைத் தன்மையல்ல. தெய்வீகம் ஒரு உறுதியான நிலை. அதை வாழவும், அனுபவிக்கவும் முடியும். ஆனால் துரதிருஷ்டவசமாக, மனிதனால் அல்ல, ஆனால் கடவுளால் மாத்திரமதான் முடியும். ஏனென்றால் தெய்வீகத்தை அறிந்த மனிதன் அதன் பிறகு மனிதனல்ல. ஆனால் அவன் கடவுளே. அவன் தற்காலிகமாக மனித உருவத்தில் உலகிலே நடமாடுகிறான். அகந்தை எங்கு முடிவுறுகிறதோ அங்கு தெய்வீகமானது பூரணத்தின் ஒரு சுவாலையில் மறு அவதாரம் எடுக்கிறது.

தன்னை அறிந்த அலையானது கடலை அறிந்து உணருகிறது. தனது உண்மை நிலையை மீண்டும் கண்டு கொண்ட பேய் கம்பமாகி விடுகிறது. தெய்வீகத்தை அனுபவிக்கும மனிதன் சாசுவதமான கடவுள்தான்.

1 1 3
வாயுர் நிலமமருதம தேதம்
4 1
பஸ்மான்தம் சரீரம் |
1 1 1 1 1 1
ஓம் க்ரதோஸ்மர க்ருதம்ஸ்மரக்ரதோ
1 1
ஸ்மர க்ருதம்ஸ்மர ||

என்னுடைய பிராணன் சர்வ வியாபகமான ஆகாயத்தில் ஒன்று சேரட்டும். இந்த உடல் நெருப்பினால் சாம்பலாக எரிக்கப்படட்டும். ஓம்! ஓ மனமே! என்னுடைய செய்கைகளை நினைவு கூர். நினைவு கூர். ஓ, மனமே என் செய்கைகளை நினைவு கூர். நினைவு கூர்.

தியானம் புரிகையில், சத்தியத்தின் மானசீக அனுபவம் முற்றிலும் அடைந்த பிறகு, அந்த மனிதனுடைய அகந்தை மாத்திரம "நானே அவன்" உன்னுள்ளே உள்ள புருஷன் என்று உணர்ந்தும் அவ்வாறு பரிசுத்தத்தை அடைந்த ஆசிரியரது நிலை அவருடைய மரணத் தறுவாயில் எவ்வாறிருக்கும்? அகந்தை மத்தியம், சிறந்த தன்னறிவில் ஐக்கியமாகிவிட்ட பிறகு, அதனுடைய மற்ற உறைகளான, உடல், பிராணன், மனம, புத்தி இவற்றைக் குறித்து அதன் நிலை எவ்வாறு இருக்கும்? இந்தக் கேள்விகளுக்கு இந்தச் செய்யுளில் அந்தப் பெரிய ரிஷி பதிலளித்துள்ளார்.

ஒரு மனிதன், தன் ஆத்மாவை உணர்ந்த பிறகு வாழ்க்கையையும் அதன் மாறுபாடுகளையும் எதிர் நோக்குவது போலச், சாவையும் சந்தோஷமாக எதிர் நோக்குவான். அதன் பிறகு அவனுக்கு மரணம் ஒரு துன்பகரமான சமாப்தியல்ல. ஆனால் உண்மையில் அது ஒரு நித்தியமான ஜீவியத்தின் மகிழ்ச்சிகரமான ஆரம்பம். இவ்வாறு, தன் பிராணன் எங்கும் நிறைந்துள்ள ஆகாயத்தில் ஒன்று சேரவேண்டும்; தன் உடல் எந்தப் புழுதியிலிருந்து வந்ததோ அதையே மீண்டும் அடைய வேண்டும் என்றுதான் அவர் கூறுவார். மனதைப் பற்றி அவர் "நீ முன்பு செய்தவற்றை யெல்லாம் நினைவில் வைத்துக் கொள்வாயாக" என்று கூறுகிறார்.

உண்மையில், அந்தச் சமயத்தில் தன்னை அறிந்த ஞானியால் நினைவில் வைத்துக்கொள்ளக் கூடியது, தான் தன் உக்கிரமான தியானத்தில் அனுபவித்த, மறக்க முடியாத அந்த ஏகமான அனுபவந்தான். கடைசியாக நம்முடைய ஞாபகம் எப்போதும், நம்முடைய மிகத் தீவிர மான அனுபவங்களைப் பற்றியே ஏற்படுகிறது. இவ்வாறு இந்த மந்திரத்தில், "மனமே நினைவு கூர், நினைவு கூர்" என்று அந்த ரிஷி கூறுகையில் புறப்படும் தருணத்தில் கூட நம் மனது வேறு எண்ணத்தால் நிலை குலைக்கப்படக் கூடாது என்பதற்காகத்தான். தற்பொழுது நாம் பூர்த்தி யின் காலமாகிய அந்தத் தொடர்ச்சியான அனுபவத்தில் நம்மை நிலைப்படுத்திக் கொள்வோமாக.

3 2
அக்னே நய சுபதா ராயே அஸ்மின்
3 3
விஸ்வானி தேவ வயுனானி வித்வான் |
4
யுயோத்யஸ்மஜ்ஜுஹுராண மேனோ
4 4 1 11 4
பூயிஷ்டாம் தே நம உக்திம் விதேம ||

அக்னியே! நீர் அறிந்துள்ள ஓர் சிறந்த மார்க்கத்தின் வழியாக எங்களைச் செல்வத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். ஓ, ஆண்டவனே, நீர் எல்லாப் பாதைகளையும் அறிவீர். எங்களிடமிருந்து பாபத்தின் தவறானக் கவர்ச்சியை அகற்றி விடுங்கள். நாங்கள் உமக்கு எங்களது சிறந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த உபநிஷத்தின் கடைசிச் செய்யுளில், தன் அறிவு பெற்ற மனிதன் இறக்கும் தறுவாயிலும்கூட,

மேன்மையான இலட்சியத்திற்கு சரியான பாதையின் மூலம் அழைத்துச் செல்லத் தன் ஆண்டவனை அழைக்கிருன். பரிசுத்த நிலையை அடைந்த ஒரு ஆசிரியரின் வாய்மொழியாக, உருவுள்ள தெய்வத்தினிடத்து ஒரு பணிவுள்ள பக்தியுடன் கூடியப் பிரார்த்தனையைப் புரிகிருன். அந்தப் பெரிய உபநிடத தீர்க்கதரிசி மறைமுகமாக அந்த ஆராய்பவனுக்குச் சாதனை புரியும்போது, ஒவ்வொரு வேதாந்த மாணவனும் அவசியமாக, அவனுடைய சாதனையில் முக்கிய அங்கமாக, பின்னடையாத, ஆழ்ந்த, தீவிரமான தெய்வபக்தியை உருவுள்ளத் தெய்வத்தினிடத்து உடையவஞக இருக்க வேண்டுமெனறுக் குறிப்பிடுகிருர்.

வேதாந்தம் தங்களுக்கு விரோதமானதல்ல என்பதைப் பக்தர்கள் அறிந்து கொள்ளட்டும். உண்மையான வேதாந்திகள், தங்களது வேதாந்தத்திடமுள்ள நம்பிக்கையின் காரணமாகப் பக்தியைத் தாழ்த்தும்போது வெட்கப்படட்டும். வேத காலத்தில் அக்னிதான் தெய்வமாக இருந்தது. இங்கு இந்தப் பிரார்த்தனை அக்னித் தேவனைக் குறித்துப் புரியப்படுகிறது.

இந்தச் செய்யுளில் அக்னித் தெய்வம் நம்மைச் செல்வத்திற்கு வழி காட்டுமாறு வேண்டப்பட்டு இருக்கிறது. லௌகீகர்கள் இந்தச் செல்வத்தை நாணயம் அல்லது டாலர் என்று அறிந்துகொள்ள வேண்டாம். இங்கு கூறப்படுவது பொருளாதாரச் செல்வமன்று. ஆனல் அந்த ரிஷிகளின் மனதிலுள்ளதுதான் ஆத்மீகத் துறையில் நாடுபவனது செல்வம். ஆகையால் செல்வம் என்பதை இன்பம், முக்தி அல்லது மோக்ஷானந்தத்தைக் குறிக்கிறது என்று அறிந்துகொள்ள வேண்டும். மரணப் படுக்கையில்கூட நாடுபவனது வேண்டுகோள் மேன்மை

யான ஆனந்தத்தை அடைய வேண்டுமென்பதுதான். மற்ற வெளியீடுகளெல்லாம் நிறைவானத் தெளிவுடன் உள்ளன.

1 3 1 3
ஓம் பூர்ணமத: பூர்ணமிதம்
1 1 1 31 1
பூர்ணாத் பூர்ணமுதச்யதே |
1 1 3
பூர்ணஸ்ய பூர்ணமாதாய
1 1
பூர்ணமேவா அவசிஷ்யதே ||

ஓம் சாந்தி — சாந்தி — சாந்தி.

ஓம் தத் ஸத்

K. M. S. Press, 22-A, Narasingapuram St., Mount Road, Madras-2

WORKS of Swami CHINMAYANANDA

BOOKS

ISAVASYOPANISHAD	—	3	0	0
KENOPANISHAD	—	4	0	0
KATHOPANISHAD	—	5	0	0
PRASNOPANISHAD	—	5	0	0
MUNDAKOPANISHAD	—	3	0	0
MANDUKYA & KARIKA	—	7	8	0
MEDITATION & LIFE	—	2	0	0
TALKS WITH ASPIRANTS	—	3	0	0
THAITTIRIYA UPANISHAD	—	4	0	0

BOOKLETS

SOURCE OF JOY	—	—	0	4	0
THE WAY	—	—	0	4	0
THE GATEWAY	—	—	0	4	0
THE DRIVE	—	—	0	4	0
HINDUISM (English)	—	—	0	6	0
„ (Tamil)	—	—	0	8	0
POONA LECTURE BOOKLET		—	0	8	0
HELP TO MEDITATION		—	0	8	0

PACKING & POSTAGE FREE

Apply to :

Sree S. Sundaresa Iyer
President
Chinmaya Mission
104, Egmore High Road
Madras-8

Sree S. D. Shroff
16 Park Area
Karol Bagh
New Delhi-5.